ஞைகநாட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு மறுக்கப்பட்டவர்கள்....



- ரோடியோக்களின் குடியிருப்பு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே:




வாங்கோசைகளற்ற வடக்கு காற்றால்
வரண்டு போனது தமிழ்தேசியமே -08
- எம்ஆர்ஸ்ராலின் -





துப்பாக்கிகளின் காலம் - 10
- சுமதி ரூபன் -





ஒரு துரோகியின் கேள்விகள்.....
- கற்சுறா -






சிவராம்.............? -16
- கலந்துரையாடல் -





பலிவதம் - 20
- சக்கரவர்த்தி -


தினம் - 19
- முருகபூபதி -






பெண்கள் பயிற்சிப் பட்டறை - 30
- நந்தினி -





Missing in Action
- Kannika -


MALLAVI
- Sathya -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு மறுக்கப்பட்டவர்கள்....



- றோடியோக்களின் குடியிருப்பு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைநாட்டு

**உறுதியாய் இருந்து உடைந்து போவோம்!**



**ஆசிரியம்:**
கருமையம்
**அட்டைப்பட ஓவியம்:**
ஜீவன்
**வரைகலை:**
ப்ரியதர்ஷின்
**வெளியீடு:**
கருமையம்

**உள்ளே:**

எம்.ஆர்.ஸ்ராலின்
நற்கீரன்
சுமதி ரூபன்
கற்சுறா
சத்தியா
கன்னிகா
சத்யா
நந்தினி
இளங்கோ
முருகபூபதி
நடேசன்
வஸ்கொடகாமா
தர்ஷின்
சக்கரவர்த்தி

கருமையம்
karumaiyam@gmail.com

கார்த்திகை 2005

இலங்கையில் முஸ்லீம் மக்களின் வரலாற்றை எடுத்து பார்த்தல், பல தருணங் களில் சிங்களவர்களினதும் தமிழர்களினதும் தாகுதல்களுக்கும் இனவாத ரீதியான ஒரு வெறுப்புக்கு ஆழாகியுள்ளனர்.

இலங்கையில் 1915ல் நடந்த சிங்கள-முஸ்லீம் கலவரத்தில் ஏராளமான முஸ்லீம்கள் தாக்க பாட்டுள்ளனர், கொல்லப்பட்டுள்ளனர். காலனித்துவத்துக்குப் பின்பும் பல சிங்கள-முஸ்லீம் கலவரங்கள் நிகழ்ந்துள்ளன. அநேகமான இக்கல வரங்கள் சிங்கள தீவிரவாதிகளாலே தூண்டப்படுகின்றன. உதராணத்துக்கு, 2002 ஆண்டு மாளிகாவத்தையில் தமது படசாலையொன்றில் புதுக் கட்டிடமொன்றை நிறுவ முஸ்லீம்கள் முற்படுகையில், முஸ்லீம்களுக்கு எதிரானா உணர்வுகளைத் தூண்டிவிட்டு கலவரத்தை தொடக்கிவைத்தது சிங்கள தீவிரவாத பிக்குகளும், ஹெல உறுமைய போன்ற இனவாதக் கட்சியைச் சார்ந்தவர்களுமே.

சிங்களவர்களின் நடவடிக்கைகள் இப்படியிருக்க, இன்னொரு இனத்தின் அடக்குமுறைகளிலிருந்து விடுதலை வேண்டி நிற்கும் தமிழரின் "ஏக பிரதி நிதிகள்" முஸ்லீம்களை நடத்தியவிதம் மிகக் கொடுமையானது. காலம் காலமாக வாழ்ந்த மண்ணைவிட்டு ஒருநாளின் அவர்களது சொத்துகள் பறிக்கப் பட்டு வெளியேற்றப்பட்டது மிகப்பெரிய கொடுமை. கிழக்கில் காத்தான்குடிப் பள்ளிவாசலில் இஷாத் தொழுகைகுச் சென்றவர்களை ஈவிரக்கமின்றி கொன்றது, மற்றும் அம்பிளாந்துறைச் சந்தியில் மௌலவிமார்கள் ஈவிரக்கமின்றி வெட்டிக் கொன்றது குரூரமான செயல்கள். இந்தக் கொடுஞ் செயல்களைச் செய்தவர் களுக்கு இனவாதத்தைப் பற்றியும் வேறெந்தவினத்தின் விடுதலையப்பற்றியும் கதைப்பதற்கு எந்தவிதத் தார்மீகமுமில்லை. இந்த சரித்திர காயங்கள் வெற்று மன்னிப்புகளால் ஆறக்கூடியது அல்ல. பதினைந்துவருடங்களாகியும் இன்னும் தமது செயல்களுக்கு எந்தவித நஷ்டஈடும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழுங்கப்படவில்லை.

மேலும், ஆரம்பத்தில் இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால், எமது தமிழர்களின் "ஏக பிரதிநிதிகள்" இந்த முஸ்லீம் பிரதிநித்துவத்தை விரும்பா ததால் அவர்கள் புறக்கணிக்கபட்டார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், இறந்தவர்கள் தமிழர்களர் சிங்க்வர்களவர் களைவிட கூடுதாலானோர் முஸ்லீம்களே. ஆனால், சுனாமி நிதிப்பகிர்ப்வு புனர் நிர்மாணம் தொடர்பான பேச்சு வார்த்தைகளில் முஸ்லீம்கள் புறக்கணிக்கப் பட்டார்கள். இதற்கு புலிகள்தான் காரணமென்று இலங்கையரசும், அரசுதான் காரணமெனப் புலிகளும் கூறினார்கள். இரு தரப்புக்கும் முஸ்லீம்களின் நலனிலும் உரிமைகளிலும் அக்கறையிருந்தால் அவர்களைப் பேச்சுவர்த்தையில் உள்வாங்கியிருப்பார்கள். குறிப்பாக தமிழர்களின் "ஏக பிரதிநிதிகள்" ஒரு சில முஸ்லீம்களை தமது ஊர்வலங்களுக்கும் கூட்டங்களுக்கும் கூப்பிட்டு படங்கள் எடுத்துகொள்வார்கள். ஆனால், முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் பேச்சுவார்த் தையில் வேண்டுமென்று வலியுறுத்த மாட்டார்கள். தாம்சார்ந்த இனங்களின் நலன்களில் மட்டுமே அக்கறைகொண்ட குறுந்த்தேசியப்பார்வையும் இனவா தமுமே இருதரப்பாலும் முஸ்லீம்கள் புறக்கணிகப்படதற்கு காரணம்.

உண்மையாகவே முஸ்லீம்களின் நலன்களிலும் உரிமைகளிலும் அக்கறையி ருந்தால் எதிர்காலத்தில் வரும் இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைக-ளில் ஈடுபடும் எந்தத்தரப்பும் முஸ்லீம்களைத் தனியொரு இனமாக அங்ககரித்து அவர்களுக்கு சம பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதன் மூலமே அவர்களின் உரிமைகள் பேணப்படும். முஸ்லீம்களின் பங்கில்லாத எந்த இனப்பிரச்சனைக்கான தீர்வும் முழுமைபெறாது.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்கோசைகளற்ற வடக்கு காற்றால் வரண்டு போனது தமிழ்தேசியமே.

***‘எனது வானத்தில்***
***இன்னும் சில வாங்கோசைகளாவது***
***எஞ்சியிருக்குமா?’***

என்று புகலிட இலக்கியத்தின் தாற்பரியத்தையே ஒற்றை வரிக்குள் குறுக தரித்து பாடிய எனதருமை நண்பன் கலாமோகனுக்கு கானல் நீர்தான் பதிலா?
சுமார் 15 ஆண்டுகளாக இஸ்லாமியரின் வாசம் இன்றி உலக வரலாற்றுக்கு இனச்சுத்திரிகரிப்பின் இன்னுமொரு உதாரணமாய் காய்ந்து கிடக்கிறது அந்த வடக்குதேசம்.

1990 ம் ஆண்டு வடக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல கிழக்குவாழ் முஸ்லிம்களுக்கும் கரிய ஆண்டுதான் 86 ஆயிரம் உயிருள்ள ஜீவன்கள் வடக்கைவிட்டு ஓட ஓட விரட்டப்பட்டார்கள். புலிகளது துப்பாக்கிகள் இங்கே இவர்களை துரத்தியடித்தது என்றால் கிழக்கு மண்ணில் 400கும் மேற்பட்ட உயிர்கள் பள்ளிவாசல்களிலும் பாதைவழிகளிலும் பாஸிசப் புலிகளால் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். கிழக்கே மையத்துக்கள் மலைபோல குவிந்து கிடந்தது.


இவையனைத்தும் நடந்து முடிந்தது 1990 ஆண்டுதான். எனவேதான் தமிழர்களுக்கு எப்படி 1983 என்பது ஒரு மறக்கமுடியாததொரு ஆண்டோ அதுபோல்தான் முஸ்லிம்களில் வரலாற்றில் மறக்க முடியாததொரு ஆண்டாக இந்த 1990 ம் ஆண்டு நிலைத்து நிற்கிறது. இதன் காரணமாகவே இலங்கை முஸ்லிம்கள் சுஹதாக்கள் தினமாக பள்ளிவாசல் படுகொலை நிகழ்ந்த ஆகஸ்டு 03 எனும் நாளை பிரகடனப்படுத்தி ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

***கிழக்கில் நடத்தப்பட்ட படுகொலைகள் பற்றிய முக்கிய சில தகவல் கள் கீழே***

- 12-07-1990 மக்கா புனித யாத்திரைக்கு சென்று கொழும்பில் இருந்து கல்முனைவழியாக காத்தான்குடி திரும்பிக் கொண்டிருந்த யாத்திரீயகர்கள் 68 பேர் குருக்கள் மடம் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டு பின்னர் அவர்களாலேயே புதைக்கப் பட்டமை.

- 03-08-01990 காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளிவாசலிலும் ஹுசைனியா தைக்காவிலும் தொழுகையிலீடு பட்டு கொண்டிருந்த முஸ்லிம்கள் 103 பேர் தமிழீழ விடுதலை புலி களினால் சரமாரியாக சுடப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டனர்.

- ஏறாவூரை அண்டிய ஐயங்கேணி, சதான் உசைன் கிராமம் போன்றவற்றில் உறக்கத்திலிருந்த ஆண்கள், பெண்கள், குழந் தைகள், கற்பிணிகள் எல்லோருமாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டோர் தொகை



116 ஆகும்.

வடக்கில் சுமார் 1300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றை கொண்டிருந்த 10 ஆயிரம் குடும்பங்கள் 24 மணிநேர அவகா சத்தில் தெற்கு நோக்கி புலிகளால் துரத்தியடிக்கப்பட்டனர். அதனையொட்டி ஏற்பட்ட நேரடி சடத்துவ இழப்புகள் பின்வருமாறு.

- **128** **பள்ளிவாசல்கள்**
- **26** **புனித பிரதேசங்கள்**
- **189** **அரபு மதரசாக்கள்**
- **65** **அரசாங்க பாடசாலைகள்**
- **ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள்**
- **1400** **வர்த்தக கைத்தொழில் நிலையங்கள்**
- **15** **ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள்**

மேற்கண்ட வகைகளில் 1990 ம் ஆண்டுதான் தமிழ் - முஸ்லிம் இனமுரண்பாடுகள் மிக மோசமான அளவில் கூர்மையடைவதை காணலாம். ஒரே நோக்கில் ஒரே தேசியத்தில் ஐக்கிய மாகியிருந்த இரு சமூகங்கள் ஒன்றுகொன்று எதிர் எதிராக நிறுத்தப்படுவதற்கும் அதுவரை இருந்துவந்த “தேசிய“ ஒற்றுமையில் மாறாத பங்கம் ஏற்படுவதற்கும் புலிகளது இந்த இனமேலாதிக்க அணுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறைகளே காரணமாயமைந்தன.

தமிழீழ கோரிக்கையானது தீவிரவாத நடைமுறைகளினூடு செயல்வடிவம் பெற்ற காலத்திலிருந்தே தமிழர்களுக்குள்ளேயே ஒரு சிறுபான்மை தமிழர்களாக முஸ்லிம்களை பணியவைத்து நடத்துகின்ற முனைப்புகள் அடையாளம் காணப்பட்டன. உதாரணமாக 1985ம் ஆண்டு கல்முனையையும், வாழைச்சேனை யையும் அண்மித்த கிராமங்களில் ஏற்பட்ட தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையேயான முறுகல் நிலைகள் பெரும் கலவரம் ஒன்றையும் தோற்றுவித்தது. எனினும் அதுபோன்ற சம்பவங்கள் ஒட்டுமொத்தமாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே ஒரு பாரிய பிளவை ஏற்படுத்தியிருக்கவில்லை. மீண்டும் சமாதானம், சமூக நல்லிணக்கம், பரஸ்பர வாழ்வு நிலை- களை பாதுகாத்தல் என்பதாக மீள இயல்புநிலை உயிர்ப்பிக்கப் பட்டிருந்தது.

ஆனால் 1990ல் புலிகளது பாஸிஸ நடவடிக்கைகள்தான் தமிழ் - முஸ்லிம் உறவுகளில் மாறாத வடுக்களை ஏற்படுத்தி முடித்தது. இதற்கு இருவகை காரணங்கள் இருந்தன.

1) அதுவரை காலமும் அல்லது 1985ல் ஏற்பட்ட சிறுசிறு சமூகபிரச்சனைகள் கலவரமாகியது போலன்றி 1990ம் ஆண்டு சம்பவங்கள் முன்திட்டமிடப்பட்ட வகையில் ஒரு இராணுவ நடவடிக்கைகளாக நடத்தி முடிக்கப்பட்டமை.

2) பழைய கலவரங்களை போலன்றி மிகப்பெரும் அழிவுகளையும் இழப்புகளையும் இத்தாக்குதல்கள் ஏற்படுத்தியமை.

இந்த 1990இன் பின்னர்தான் தமிழ் தரப்பின்மீது முஸ்லிம்களுக்கு நிரந்தரமான ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டதெனலாம். இத்தகைய திட்டமிடப்பட்ட வகையிலான மாபெரும் அழித்தொழிப்புகள் தமது இருப்பை கேள்விக்குள்ளாக்கியதை அவர்கள் உணர தொடங்கி யதும் இவ்வாண்டில்தான்.

### சில வரலாற்றுக் குறிப்புகள்:

இலங்கையினுடைய வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருபவர்களில் சுமார் 17 வீதமானவர்கள் முஸ்லிம்களாகும். தொன் மையான வரலாற்றை கொண்ட இவர்கள் சுமார் கி.முன் 4ம் நூற்றாண்டுகளிலிருந்து இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். தங்களை தமிழர்களாகவே எண்ணி வாழ்ந்து வந்த இவர்கள் தமது மத அடிப்படையில் ஏனைய தமிழர்களிடமிருந்து தமக்கான தனித்துவ கலாசார அம்சங்களில் வேறுபட்டும் நிற்கின்றனர். எனினும் அண்மைய பல நூற்றாண்டு காலமாக மதத்தினடிப் படையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பாரிய விரிசல்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாசைகள் அகிம்சை அடிப்படையிலான போராட்ட வடிவங்களாக முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் முஸ்லிம்களும் தமது பங்களிப்பை வழங்கி வந்துள்ளார்கள். 1956ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிங்கள மொழிச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது அது தமிழுக்கும் உரிய அந்தஸ்தை வழங்க தவறிவிட்டமையை கண்டித்து ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேறியவர் முஸ்லிம்களின் தலைவர்களில் ஒருவரான ஏ.எம்.ஏ.அஸிஸ் அவர்கள் ஆகும். 1960ம் ஆண்டு தமிழ் மக்கள் தரப்பிலிருந்து முன்னெடுக்கப்பட்ட மாபெரும் சத்தியாக- ிரகத்தின் போது நூற்றுகணக்கான முஸ்லிம்களும் அதில்கலந்து கொண்டு சிறையை நிரப்பினர். இதில் முன்னணி வகித்து தமிழரசுக்கட்சியின் பிரச்சார பீரங்கிகளாக மசூர் மௌ லானா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருக்கலம்பிட்டி கே.எஸ்.ஏ.கபூர் போன்றோர் திகழ்ந்தனர். 1977 தமிழீழத்துக்கான ஆணை கேட்டபோதுகூட கல்முனை தொகுதியில் த.வி.கூட்டணி சார்பில் போட்டியிட்ட சம்சுதின் எனும் இஸ்லாமிய தமிழரேயாவார்.

இதேவேளை தமிழர்களிடத்திலும் பலவகை கட்சிகள் பலவகை கொள்கையடிப்படையிலான அமைப்புக்கள் இயங்கியது போல முஸ்லிம்கள் தரப்பிலும் வேறு ஒரு சில தேசிய கட்சிகளும், அமைப்புகளும் இடம்பிடித்திருந்தன என்பதுவும் உண்மைதான்.

ஆனாலும் வடகிழக்கு முஸ்லிம்களை பொறுத்தவரையில் தமிழீழமானது அவர்களுக்கும் உரியது என்றே நம்பியிருந்தனர். இதன் காரணமாகவே 1977 தேர்தலை தொடர்ந்தும் 1983 கலவ ரத்தினை தொடர்ந்தும் வடகிழக்கு பகுதிகளில் உருவாகிய ஆயுத போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களில் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்துகொண்டனர். கிழக்கிலங்கையிலுள்ள அம்பாறை மாவட்டத்தில் பெருந்தொகையாக முஸ்லிம் இளைஞர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளாய் காணப்பட்டனர்.

மேற்படியான நிலைமைகளை முதலாவதாக சீர்குலைத்தது 1985 இல் ஏற்பட்ட கலவரத்தினை தொடர்ந்து ஏற்பட்டது. அதன்பிறகு குறிப்பாக கிழக்குமாகாணத்தை அடிப்படையாக கொண்டு தமிழ் - முஸ்லிம் கசப்புணர்வுகளும் வளரத்தொடங்கியது. இருந்த போதிலும் இன்னுமொரு புறத்தில் முஸ்லிம்கள் தமது தனித்துவ அரசியலின் அவசியம் குறித்து உணரத் தொடங்கிய அறிகுறிகளும் தென்பட்டன. இப்படியான தனித்துவ அரசியல் குறித்து ஒரு சிறுபான்மை சமூகம் உணர தொடங்குகின்றது எனின் அது தன்மீது "குறித்த ஒரு சமூக பிரிவு" என்பதற்காக எங்கோயிருந்து நெருக்கடியை எதிர்கொள்கிறது என்பது அர்த்தமாகும். இப்படியான நெருக்கடிகளையும் ஓரவஞ்சகங்களையும் ஆயுதம் தாங்கியிருந்த எல்லாவித இயக்கங்களும் தத்தம்பங்கிற்கு முஸ்லிம்கள் மேற்கொண்டும் வந்திருந்தன என்பது உண்மையாகும் (விரிவஞ்சி அவற்றை இங்கு தவிர்த்து கொள்கின்றேன்.)

அதேவேளை 1970 - 77ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அரசில் கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் முகமட் அவர்களின் பதவிக்காலமானது முஸ்லிம்கள் அதிகளவில் கல்வியின் அவசியத்தை உணர தொடங்கிய காலகட்டமாகும். வழமைக்கு மாறாக ஆரம்பக்கல்வியில் பெருமளவிலான முஸ்லிம்கள் இணைந்து கொள்ள அவர் ஊக்கமளித்தார். இந்த காலகட்டத்தில் இருந்து உருவான கல்வி மறுமலர்ச்சியானது சுமார் 10 ஆண்டுகளை கடந்த வேளை மிகபெரியதொரு இளைஞர் குழாமை 1980 களின் இறுதிபகுதிகளில் சமூக விழிப்பு கொண்டோராய் உருவாக்கியிருந்தது. இதுபோன்று 1977 ன் பின் ஆட்சிக்கு வந்த யு.என்.பி. அரசு நிலத்தினை அடிப்படையாக கொண்ட விவசாயத்துறையை விடுத்து திறந்த பொருளாதார கொள்கைக்கு வழிவகுத்தமையினால் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் வியாபாரம், போக்குவரத்து போன்றவற்றில் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கு சமனாக வளர்ச்சி கொள்ள தொடங்கினர். விவசாயத்தை விடுத்த ஒரு மத்தியதரவர்க்கம் கிழக்கை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களிடையே உருவாகியிருந்தது. இதன்காரணமாகத்தான் தமது இனம்சார்ந்து சாலை, கலாச்சாரம், பண்பாடு தளங்களில் மட்டுமல்ல பொருளாதாரம், அரசியல் தளங்களிலும் ஒரு விழிப்பும், வீச்சையும் நோக்கி முஸ்லிம்கள் உந்தப்படனர்.
இதுபோன்ற வளர்ச்சி கட்டத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே 1986இல் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பரிணாமம் எடுத்தது.

1987இல் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்ததில் முஸ்லிம்களை ஓரங்கட்டியமை முஸ்லிம் தலைமைகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. இந்த ஒப்பந்தமானது முஸ்லிம்களை ஒசுரு மூன்றாம் தர பிரசைகளாக கணித்தமையானது தமிழ் தலைமைகள் விட்ட ஒரு மாபெரும் வரலாற்று குற்றமாகும் எனும் ஆவேசம் முஸ்லிம்களிடையே பரவியிருந்ததை அவ்வேளை காணக்கூடியதாய் இருந்தது.

1988இல் நடைபெற்ற வடக்கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் சி.மு.காங்கிரஸ் முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக உறுதிப்படுத்தி சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய தாயகம் போன்ற அம்சங்களோடு பிரச்சாரத்தில் இறங்கியது. தனிமாகாணக் கோரிக்கையை கோரும் ஆணையை வழங்குமாறு மக்களிடம் கேட்டே சி.மு.காங்கிரஸ் களமிறங்கியது.

அதேபோன்று அந்தத் தேர்தலினூடு ஒரு நிராகரிக்க முடியாத சக்தியாக சி.மு.காங்கிரஸ் உருவாகியது. பல்வேறுபட்ட சமூகக் குழுக்களை உள்ளடக்கிய தேசிய இனப்போராட்டம் ஒன்றில் அவை ஒவ்வொன்றினதும் தனித்துவங்கள் எவ்வாறு கவனிக்கப்பட வேண்டும், அவை எவ்வாறு அணுகப்பட வேண்டும் என்கின்ற விடயங்களில் தமிழ் இயக்கங்களிடமிருந்த அரசியல் ரீதியான "போதாமையே" சி.மு.காங்கிரசின் வளர்ச்சியை ஊக்குவித்ததை அவதானிக்கலாம்.


தமிழ் பேசும் சமூகத்துக்குள்ளேயே இருக்கக் கூடிய சிறுபான்மையினமான முஸ்லிம்கள் தமிழீழக் கோரிக்கையை விடுத்து வெளியேறிச் செல்ல முனைகின்ற இப்போக்கினை அரசியல் ரீதியாக அணுகமுடியாத புலிகள் தமது இராணுவ கண்ணோட்டத்திலேயே இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண முயன்றனர். இதன் பலாபலன்களாகவே முஸ்லிம்கள் மீதான துரத்தியடிப்பும், படுகொலைகளும் நிகழக் காரணமாயிற்று. ஆனால் புலிகள் நினைத்ததற்கு மாறாக முஸ்லிம்களுக்கான தனித்துவ கோரிக்கைகள் மென்மேலும் வலுப்பெற்றது.

இந்த அடக்குமுறைகளின் அடுத்தகட்டமாக முஸ்லிம் அரசியல் தலைமைகள் கிழக்கிஸ்தான் என்றும், தென்கிழக்கு மாகாணம் என்றும் தமக்கான ஒரு தேசத்தைக் கட்டமைப்பதில் மிக மும்முரமாக ஈடுபட்டன. பல இடங்களிலும், பல சந்தர்ப்பங்களிலும் அஸ்ரப்பினது பேச்சும் செயலும் இனபிளவுகளை ஆழப்படுத்துவதாகவே தமிழ் ஊடகங்கள் எழுதித்தள்ளின. அதற்கேற்றாப்போல் ஊர் காவல் படையென்னும் பெயரில் இலங்கையுடைய இராணுவ உளவுத் துறையினரால் பயன்படுத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர்களும் முன்னாள் தமிழீழ விடுதலைப் போராளிகளாக பல்வித இயக்கங்களிலும் இருந்த முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து ஜிகாத் எனும் அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பானது தமது சமூகத்திற்கான பாதுகாப்பிற்கான சில செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். அதே வேளை தமிழ் மக்களுக்கெதிராகவும் அரச படையினருக்கு உடந்தையாக இவர்கள் செயற்படாமலும் இல்லை.

முஸ்லிம்களுக்கான ஒரு ஸ்திரமான அரசியலின் உருவாக்கம் வரை உணர்ச்சிகரமாக பேசியும் செயற்பட்டும் வந்த அஸ்ரப் அவர்கள் தன்னாலேயே உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவிரவாதத்தினைக் குறித்தும் மிக அவதானமாகவே இருந்துள்ளார். அதாவது ஒரு காலத்தில் அமிர்தலிங்கம் விட்ட தவறை அஸ்ரப் விடாது ஒரு எல்லைக்கப்பால் ஜிகாத்தினது வளர்ச்சியை ஏதோ ஒரு வழியில் தடுத்து நிறுத்தியுள்ளார். இதனை முஸ்லிகள் தரப்பில் உள்ள தீவிரவாதக் கருத்துக்கொண்டோர் அஸ்ரப்பினை தேர்தல் அரசியலுக்காக முஸ்லிம்களுடைய போராட்டத்தை அடக்கி வாசித்தார் என்று குற்றம் சாட்டுகின்றனர். அதேவேளை முஸ்லிம் சமூகமானது தனது முழு ஆற்றலையும் அறிவையும் ஜனநாய வழிகளிலேயே பயன்படுத்த வேண்டும் என்பது அஸ்ரப் காட்டிய அக்கறைதான் இன்று இலங்கையில் வன்முறை அற்ற ஒரே சமூகமாக முஸ்லிம்களை வாழவைக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளமுடியும்.

சி.மு.காங்கிரஸ் எனும் அமைப்பை ஒரு இன அடிப்படையிலான அடையாள பெயரிடலிலிருந்து மாற்றி இலங்கை தேசியத்தின்பால் அக்கறை கொண்ட பரந்த ஒரு அரசியல் இயக்கமாக வளர்த்தெடுக்க அவர் முயன்றார். அதற்காகவே சி.மு.காங்கி ரஸினை வைத்துக்கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி எனும் ஒரு அமைப்பினையும் உருவாக்கினார். கிழக்கு வாழ் தமிழர்களிடையே அதற்கான ஆரம்பக் கட்ட செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருந்தார். அவர் கொல்லப்படுவதற்கு அடுத்து வரவிருந்த தேர்தலில் பல தமிழர்களை ஐ.தே.முன்னணியில் இணைத்து போட்டியிட வைப்பதற்கும் அவர் திட்டமிட்டிருந்தார் என அறியமுடிகிறது. அவரது கொலைச்சம்பவத்தின் போது அவருடன் ஹெலிகொப்டரில் பயணித்து அவருடனேயே கொல்லப்பட்ட கதிர்காமத்தம்பி என்பவர் இந்த ஐ.தே.முன்னணி உருவாக்கத்தில் மிக ஈடுபாடு காட்டியி ருந்தார்.

இவற்றையெல்லாம் நோக்குகையில் அவர் முஸ்லிம்களை மட்டும்மல்ல கிழக்குவாழ் தமிழர்களையும் காலாவதியாகிக் கொண்டிருக்கும் தமிழ் தேசியவாதப் போக்கில் இருந்து மீட்டெடுக்க முயன்றிருக்கிறார் என புலனாகின்றது. அப்படியொரு நீண்ட ஆசையோடுதான் பெருந்தலைவர் அஸ்ரப் அவர்கள் தனது உயிரை விட்டிருக்கின்றார்.

அவரது இழப்புக்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரசினுடைய அரசியல் வாரிசுகள் பல்வேறு கொள்கையின் அடிப்படையிலும் செயற்பட்டு வருகிறார்கள். சி.மு.காங்கிரஸ் ரஹுஃப் ஹக்கீம் தலைமையிலும், ஐ.தே.முன்னணியானது பேரியல் அஸ்ரப் தலைமையிலும் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் எனும் ஒரு அமைப்பு அதாவுல்லா தலை மையிலும் பல வழிகளிலும் பயணிக்கின்றனர்.

முஸ்லிம்களுக்கான தனிமாகாணக் கோரிக்கை, முஸ்லிம்கள் மிக அதிகமாக வாழும் அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தென்கிழக்கு மாகாணக் கோரிக்கை போன்றவை ஒரு புறமும் மறுபுறமாக மேற்படி கோரிக்கைகள் வடமாகாண முஸ்லிம்களை கருத்தில் கொள்ளவில்லை என்பதால் பரந்த வடக- ிழக்குக்குள் முஸ்லிம் களுக்கான சுயாட்சி அலகுகள் என்ப தாகவும் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் விவாதிக்கப் பட்டும் வருகின்றன.

இறுதியாக 2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின்புகூட 29-ஜனவரி-2003 இல் தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகமானது ஒரு முஸ்லிம் தேச பிரகடனத்தை வெளியிட்டுள்ளது. கிழக்கிலங்கையின் சகல பகுதிகளிலும் இருந்து புறப்பட்ட மக்கள் பேரணிகளில் சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு முஸ்லிம் சமூகத்தினது அரசியல் அபிலாசைகளை வெளிக்காட்டிய இந்த நிகழ்வு "ஒலுவில் பிரகடனம்" என அழைக் கப்படுகிறது. தமிழர்களின் அரசியல் வரலாற்றில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் எவ்வளவு முக்கியமோ அதற்கு நிகரானதாக இந்த ஒலுவில் பிரகடனமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இவையனைத்துவிதமான கோரிக்கைகளும் நடைமுறையில் வெவ்வேறு வடிவங்களாக விபரிக்கப்பட்டாலும் சராம்சமாக ஒருவிடயத்தையே சுட்டி நிற்கின்றது. இலங்கை முஸ்லிம்கள் தனியான ஒரு தேசிய இனம். அவர்களது எதிர்காலத்தை தீர்மானிப்பது அவர்களைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது என்பதுவே அதுவாகும்.

இறுதியாக இளையப்துல்லாவின் சில கவிதை வரிகளோடு இக்குறிப்புகளை முடிக்கின்றேன்.

***'பற்றை தட்டி தூசு விலக்கி பள்ளிவாசலுக்கு பசிய நிறம் பூசி மற்றும் ஒரு முறை அல்லாஹ்ஹூ அக்பர் என்று வாங்கு சொல்லி மீண்டும் எம்மண்ணை ஆரத்தழுவி கொண்டாடி குதுகலித்து மனம் லயிக்கும் காலம் வரவேண்டும்.'***

**எம். ஆர். ஸ்ராலின்**
**பிரான்ஸ்**
**05-11-2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சூழலில் பரப்புரையும் உண்மைகளும்

உண்மைக்கும் பரப்புரைக்கும் வேறுபாடு காண்பது கடினம், ஆயினும் இரண்டுக்கும் மிக முக்கிய வேறுபாடுகள் உண்டு. இக் கட்டுரை அவ் வேறுபாடுகளை அடையாளப்படுத்தி, உண்மையான வெளிப்படுத்தலுக்கான தேவையையும், அப்படியான வெளிப்படுத் தலுக்குரிய தமிழ் சூழலின் தேவையையும் வலியுறுத்த முனையும்.

உண்மை என்றால் என்ன? உண்மையை அதன் பன்முக தத்துவ நோக்கில் அணுகாமல், எழுத்தில், கலந்துரையாடலில், வெளிப் பாட்டில், செயல்பாட்டில் உண்மை இருக்கின்றதா என்ற கேள்வியே முன்வைக்கப்படுகின்றது. உண்மையை பரப்புரையுடன் ஒப்பிட்டு நோக்குகையில் விளங்கிக்கொள்ளலாம். பரப்புரை ஒரு உள்நோக் குடன் குறுகிய பார்வையை நிலைநிறுத்த முயலும். பரப்புரை எதிர், மாற்று கருத்து உண்மைகளை மறைக்கும், புறக்கணிக்கும். எதர், மாற்று கருத்துக்களை கண்டு கொண்டாலும், அவற்றின் முழு வலுவை கண்டு கொள்ளாது. பரப்புரை தன் கருத்தை மிகைப் படுத்தி, பிம்மமப்படுத்தி, புனிதப்படுத்தி காட்டும். மோசமான பரப்புரை பிளையான கருத்தைக்கூட முன்னிறுத்த முயற்சிக்கும். கேட்பவர் அலசி தன்னால் ஒரு முடிவை எடுக்க விடாமல் தங்களுடைய முடிவே சரி ஆகையால் ஏற்றுக்கொள்ளும் என்ற வகையில் வாதிடும்.

உண்மை எவ் திசையிலும், எவ் நிலைகளிலும், தளத்திலும் உண்மையை நாடி நிற்க்கும். உண்மையை வெளிப்படுத்த முனை பவர்கள் எதிர் அல்லது பிற கருத்துகளை சுட்டி அவற்றின் தவறுகளை, குறைபாடுகளை விளக்கி தம் நிலை விளக்க முனைவர். உண்மையை கூறுவோர் தம் கருத்தை வரையறுத்து, துல்லியமாக, விபரமாக, தெளிவாக, நேரிடையாக, தகுந்த எடுத்துக்காட்டல்களுடன் சொல்வார்கள். கேட்பவர் கருத்தை விளங்கி முடிவு எடுக்க உதவ முனைவார்கள் அன்றி, மூளைச்சலவை செய்யவோ அல்லது முடிவுகளை கட்டாயப் படுத்தவோ அல்லது சிந்தனையற்ற செயல்பாடுகளை தூண்டவோ முனையமாட்டார்கள்.

பரப்புரையை மேற்கொள்ளுபவர்கள் பரப்புரையின் உட்கருத்தை நம்ப வேண்டிய அவசியம் இல்லை. பரப்புரையின் தந்திரங்களை உபயோகித்து மக்களின் கருத்துக்களை அல்லது செயல் பாடுகளை மாற்றியமைப்பது, நெறிப்படுத்துவது, அல்லது கட்டுப்படுத்துவதே அவர்களின் குறிக்கோள். ஆனால், உண்மையை சொல்ல விளைவோர் அவ்வுண்மையை தாம் ஆத்மரீதியான நம்பிக்கையுடந்தான் வெளிப்படுத்துகின்றார்கள். அடிப்படையில், உண்மை என்பது நம்பிக்கையில்தான் தங்கி இருக்கின்றது. ஒரு நிலையில், பிளையான தகவல்களை உண்மையான நம்பிக்கையுடன் வெளிப்படுத்துவன், சரியான தகவல்களை நம்பிக்கையில்லாமல் வெளிப்படுத்துவனிலும் மேலோன். சில வேளைகளில் ஆத்ம தூய்மையுடன், மற்றவர்களை கட்டுபடுத்த ஏமாற்ற முயலாமல், விளிப்புணர்வு நோக்கி மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பரப்புரை போல் தோற்றமளித்தாலும் அவை பரப்புரையல்ல. உதாரணமாக எயிட்ஸ் நோக்கிய விளிப்புணர்வு பிரச்சாரம். மாறாக, கபட உள்நோக்குடன் அமெரிக்க புஸ் உள் வட்டம், பிற நாடுகளை தன் பக்கம் ஈர்க்க மேற்கொண்ட அணு அபாய பிரச்சாரங்கள் பரப்புரையாகும்.

பரப்புரை ஒரு வித விளம்பரம்தான். ஆனால் பொருட்களுக்கான விளம்பரத்தை அடையாளம் காண நம்மிடம் திறமை இருக்கின்றது. அதாவது, மிகைப்படுத்தல், பிம்மமாக்கல், மயக்கல் போன்ற தந்திரங்களை உபயோகித்து பொருள்மீது ஒரு வித ஈர்ப்பு, கவர்ச்சி, கவனத்தை கொண்டுவருதே விளம்பரத்தின் நோக்கம் என்பதை நாம் அறிவோம். சாதாரண பாவனை பொருட்களை, பொழுது போக்கு பொருட்களை பொறுத்தவரை விளம்பரத்தின் தாக்கங்களை பற்றி நாம் அதீதமாக கவலைப்படுவது கிடையாது. எனினும், விளம்பரத்தனமான வெளிப்பாடு பாதுரியமான விளை வுகளை ஏற்படுத்துக்கூடிய தளங்களில் விளம்பரத்துக்கான கடுமையான விதிமுறைகள் உண்டு. உதாரணமாக, கனடாவில் மருந்துகளை விளம்பரம் செய்ய முடியாது.

ஆனால், அரசியல் சமய விளம்பரமான பரப்புரையை, அதன் தந்திரங்களை நோக்கி எம்மிடம் சரியான விளக்கம் இல்லை. இவ் தளங்களில் நாம் விளம்பர தனமான செயல்பாடுகளை எதிர்பார்ப்பதில்லை, உண்மையை எதிர்பார்க்கின்றோம். ஆகவே தான் அரசியல் சமய பரப்புரையை அல்லது விளம்பரத்தை நாம் எதிர்கொள்ளும் பொழுது அதன் தன்மையை, உள்நோக்கத்தை காணத்வறிவிடுகின்றோம்.

அரசியல் சமய பரப்புரை நோக்கி எமக்கு விளிப்புணர்வு குறைவு எனினும், அவை புதிய கட்டுப்பாட்டு தந்திரங்கள் இல்லை. "எமது கோயிலில் அம்பாள் அற்புதம் செய்கின்றாள்", "ஆயிரம் கோடி அரிச்சினை செய்து விமோசனம் அடையுங்கள்" போன்ற சமய பரப்புரைகள் புதிய கோசங்கள் இல்லை. ஒருவரின் சாமியார் அல்லது குரு என்ற புனிதப்படுத்தலுக்காக அவரின் பிறப்பு, பெற்றோர் கண்டுருக்ககூடிய கனவுகள், இயற்கையில் நடந்தேறிய சில சம்பவங்கள் எப்படி புனையப்பட்டு பிம்மமாக்படுகின்றது என்பது சமூகவியலாளர்களால் நன்கு ஆயப்பட்ட விதயம்தான். [1] பரப்புரையின் ஆங்கில சொல்லானா புரப்பகான்டா (propaganda) கத்தோலிக்க மத்தினர் தங்கள் மதத்தை பரப்ப மேற்கொண்ட செயற்பாடுகளில் இருந்தே தோற்றம் பெற்றது. எனவே பரப்புரை சமய தாபனங்களின் ஒரு கருவியாக பல காலமாக செயல் படுகின்றது என்பது தெரிகின்றது, ஆயினும் சமய விளம்பரங்களை-பரப்புரைகளை விமர்சிக்க தயங்குகின்றோம். உங்கள் பரப்புரை மூலம் எம் உள் மன ஆரோக்கியத்தை கெடுக்காதீர்கள் என்று கூற, அவற்றை தடுக்க தயங்குகின்றோம்.

அரசியலில் பரப்புரை மிகவும் திட்டமிட்ட, நுணுக்கமான, விஞ்ஞான முறையில் முதலாம் உலக யுத்தம் முதலே பரவலாக உபயோகிக் கப்படுகின்றது. அமெரிக்கவின் சார்பில் வோல்ரர் லிப்மன் (Walter Lippman), எட்வார்ட் பேர்னேஸ் (Edward Bernays) ஆகியோரால் யேர்மன் அரசுக்கெதிராக உபயோகிக்கப்பட்ட உத்திகளே பின்னர் விரிவடைந்த உளவியல் யுத்த தந்திரங்களுக்கும், வியாபார விளம்பர உத்திகளுக்கும், "மக்கள் தொடர்புதுறை" செயல் பாடுகளுக்கு அடித்தளம் இட்டது [2].ஊடகங்கள் (துண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சாரங்கள், பத்திரிகை, வானொலி, சினிமா, தொலைக்காட்சி, இணையம்), கலைகள் (இலக்கியம், இசை, நாடகம்), கண்காணிப்புக்கள், சட்டங்கள் என பல முனைவுகள் மூலம் பல வித நுணுக்கங்கள் கொண்டு பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது. இவ் நுணுக்கங்களில் தமிழ் இலக்கண நன்னூல் செய்யப் படக்கூடாது என்று குறிப்பிடும் பின்வரும் "பத்து குற்றங்களும்" அடங்கும்: "குன்றக் கூறல், மிகைபடக் கூறல், (காரணம்மின்றிக்) கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழு உச்சொல் புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்றுதேய்ந்து இறுதல், நின்றுபயன் இன்மை என்று இவை ஈர் ஐங் குற்றம் நூற்கே."[3]

ஈழப்போராட்ட வரலாற்றை நோக்குகையில் எந்த கொலையையும், வன்முறையையும், நிலைப்பாட்டையும் நியாயப்படுத்த, மக்களை தூண்ட அடக்க பரப்புரை பயன்படுகின்றது. கூறியது மீண்டும் மீண்டும் கூறப்பட்டு, துயர் நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் தூண்டப் பட்டு காயங்கள் ஆறாமால் இருக்க பரப்புரை பயன்படுகின்றது. கனடாவில் பரப்புரைக்கு சிறந்த உதாரணம் பரப்புரை பற்றி முழக்கம் இதழில் வெளிவந்த "கனடாத்தமிழரை விழுங்கும் பரப்புரை வலைப்பின்னல்" என்ற கட்டுரை எனலாம். "தமிழ் தேசியம்" பெயர் கூறப்படாத ஒரு குழுவால் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாக மிகைப்படுத்தி கூறி, இது குறித்து எதிர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் தூண்டு கின்றது.

*ஆனால், அரசியல் சமய விளம்பரமான பரப்புரையை, அதன் தந்திரங்களை நோக்கி எம்மிடம் சரியான விளக்கம் இல்லை. இவ் தளங்களில் நாம் விளம்பர தனமான செய்ல்பாடுகளை எதிர்பார்ப்பதில்லை, உண்மையை எதிர்பார்க்கின்றோம். ஆகவேதான் அரசியல் சமய பரப்புரையை அல்லது விளம்பரத்தை நாம் எதிர்கொள்ளும் பொழுது அதன் தன்மையை, உள்நோக்கத்தை காணதவறிவிடுகின்றோம்.*

அரசியல், சமயம், சமுதாயம் நோக்கிய குறுகிய பார்வைகளை பரப்புரை மூலம் தக்கவைக்க தமிழ் சூழல் காரணமாகின்றது. இங்கு, தமிழ் சுழல் அல்லது சமூகம் நோக்கிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் அவதானிப்பு பொருந்தும். தமிழ் சமூகம் இன்னும் "மூடப் பெற்ற" சமூகமாகவே (closed society) உள்ளது" என்று குறிப்பிடும் கா. சிவத்தம்பி, நாம் "எமது சமூகம் பற்றிய விடயங்களில் நாம் திறந்த, கட்டற்ற ஒரு கலந்துரையாடலுக்கு (open discussion) பழக்கபட்டிருக்கிறோமா?" என்றும் கேள்வி எழுப்புகின்றார். மேலும், "நமது சமூகத்திலுள்ள நாமே அதிகம் ஏற்றுக் கொள்ள விரும்பாத அதன் இயல்புகளை - அம்சங்களை மற்றவருக்குச் சொல்லக் கூடாதென்ற கொள்கையை நாம் கடைப்பிடிக்கின்றோம்." என்றும் சுட்டிகின்றார். இப்படிப்பட்ட தமிழ் சூழல் பரப்புரைக்கு ஏதுவாகவும், உண்மையை வெளிப்படுத்த தடையாகவும் அமைகின்றது.

"ஒருபுறம் சமூகப்படிநிலை அடுக்கமைவு காரணமாகவும் (hierarchy), இன்னொருபுறம் மிக நீண்டகாலமாக சுய அரசியல் அதிகாரம் இல்லாததாலும் நம்மிடையே காலனித்துவத்தின் தாக்கம் மிக அதிகமாகும். இவை காரணமாக வெளிப்படையாக சொல்வதிலும் பார்க்க இரகசியமாக (திரைமறைவில்) சொல்வது நமது இயல்பாகிவிட்டது" [4]. எம்மிடம் ஒரு வித அடிமை அல்லது கூலி உள் மன சித்திரம் இருக்கின்றது. அது துணிவான உண்மையான திறந்த வெளிப்படுத்தலுக்கு தடையாக இருக்கின்றது. மாற்று கருத்துக்களை, எதிர் கருத்துக்களை பரந்த திறந்த கருத்தாடலுக்கு உட்படுதி உண்மையை முன்நிறுத்த முனையாமல் வன்முறைமூலம், திரைமறைவு காய்நகர்த்தல்கள் மூலம் அதிகாரத்தை அல்லது குறுகிய கருத்து நிலைகளை தக்கவைக்க தமிழ் அமைப்புக்கள் முனைகின்றார்கள்.

உண்மையான சுதந்திரமான திறந்த வெளிப்படுத்தல் ஆரோக்கியமான சமூகத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அவசியம். எங்கே உண்மையான வெளிப்படுத்தல் தடைபட்டுபோகின்றதோ அச்சமூகம் தேக்கமடைந்து நலிவடைந்து போய்விடும். இக் கூற்றை வரலாற்றை நோக்கினால் நன்கு விளங்கிகொள்ளலாம்.

இஸ்லாம் தொடக்கத்தில் ஒரு திறந்த திறனாய்வு சிந்தனை பண்பாடு கொண்ட சமூகமாக திகழ்ந்து விஞ்ஞானத்தின் ஆரம்ப கட்டுமானங்களை கட்டியெழுப்பியது. கணிதம், மருத்துவம், இயற்கை விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு இஸ்லாமின் பங்களிப்பு முக்கியமானது, அடித்தளமானது. உலகின் முதல் பல்கலைக்கழகங்களும் (Academy of Gundishapur. al-Azhar University) பொது நூலகங்களும் திறந்த இஸ்லாமிய சூழல் தோன்றுவித்தது. ஆனால், 11 நூற்றாண்டில் சுமார் 135 சிந்தனை கூடங்களாக செயற்பட்டு வந்த இஸ்லாமிய கட்டமைப்பு காலிப் என்ற அரசன் தன் அரசியல் மேலான்மையை நிலை நிறுத்துவதற்க்காக நான்காக வரையறுத்தான். இஸ்லாமின் விரிந்த அறிவு தேடல் ஒரு குறுகிய புனலுக்குள் செலுத்தப்பட்டு வடிகட்டப்பட்டு அதன் கூர்மையை, தேடலை இழந்து போனது. அரசால் அனுமதிக்கப்படாத வெளிப்படுத்தல்கள் தண்டிக்க அல்லது மழுங்கடிக்கப்பட்டதால் காலப்போக்கில் இஸ்லாமின் அறிவு நோக்கிய தேடல், ஆராய்தல், பகிர்தல் பண்பாடு மருவி தேக்க நிலையை அடைந்தது [5]. இன்று, இஸ்லாம் வலுவிழந்த, மூடிய, பிற்போக்கு சமூகமாக இருப்பதற்க்கு உண்மையான சுதந்திரமான வெளிப்படுத்தலுக்கான தடைகள் வழி சமைத்தது என்று இஸ்லாம் சமூகத்தில் உண்மை வெளிப்படுத்தலுக்காக போராடும் இர்சாட் (Irshad) குறிப்பிடுகின்றார் .

இன்னுமொரு வரலாற்று உதாரணம் ஐரோப்பிய இருண்ட காலம் ஆகும். ஐரோப்பிய இருண்ட காலமாக 5-14 நூற்றாண்டுகள் குறிப்பிடப்படுகின்றன. சமய அரசியல் கட்டுபாடுகளால் சுதந்திரமான சிந்தனைகள், வெளிப்பாடுகள் அற்ற காலமாக கணிக்கப்படுகின்றது. ஐரோப்பிய மறுமலர்ச்சி இவ் கட்டமைப்புக்களை உடைத்து ஒரு விஞ்ஞான கட்டமைப்பின் ஊடாகவே உருவாக்கப்பட்டதென்பர்.

வளர்ச்சி பெற்ற ஆரோக்கியமான சமூகங்களில் உண்மையான சுதந்திரமான வெளிப்பாட்டுக்குரிய சூழல் உண்டு எனலாம். கனடா அப்படிப்பட்ட ஒரு சமூகமே. ஆனால் கனடா தமிழ் சமூகம் இன்னும் அந் நிலையை எட்டவில்லை. சட்ட ரீதியாக கனடாவில் உண்மையான வெளிப்பாட்டுக்கு தடையேதும் இல்லை, ஆனால் தமிழ் சூழல் இங்கும் இன்னமும் ஒரு மூடிய சமூகமாகமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டற்ற ஒரு கலைந்துரையாடலுக்கு பயப்பட்ட ஒரு சமூகமாகவே இயங்குகின்றது. (இல்லாவிடில், ஈழப் பிரச்சினை தொடர்பாக எவ்வித மாறுபட்ட அலோசனைகளும் கருத்துக்களும் முன்வைக்கப்படாதது ஏன்?)

பரந்த தமிழ் வரலாற்றில் மாற்றுமுறைகளுக்கும் உண்மையான வெளிப்படுத்தலுக்கும் ஒரு இடமிருந்தே வந்துள்ளது. பிராமணிய வழிபாட்டு முறைக்கு மாற்றாக எழுந்த பத்தி இயக்கம், பொது வாழ்க்கையில் இருந்து விலகி நின்ற சித்தர் மரபுகள், பட்டிமன்ற கலாச்சாரம் ஆகியவற்றை குறிப்பிடலாம். தமிழ்களுக்கிடையே இருக்கும் ஒற்றுமையின்மையை கூட ஒரு வேறுபட்ட பார்வையில் ஆரோக்கியமாக பார்க்கலாம். இப்படியான வெளிப்படுத்தல்கள் ஊடாகவே தமிழ் சமூகம் தனது தனித்துவத்தை முன்நிறுத்தி புதிய பன்முக ஆக்கங்களின் ஊற்றாக இருந்தது எனலாம். எமது மரபுகளில் இருந்தும், கனடா தரும் உரிமைகளில் இருந்தும் ஒரு திறந்த கட்டற்ற கலந்துரையாடலுக்குரிய, உண்மையான வெளிப்படுத்தகுரிய தமிழ் சூழல் எமது இருப்புக்கும், முன்னேற்றத்துக்கும் முக்கியம்.

இறுதியாக நாம் வேண்டி நிற்பது என்ன? தமிழ் சூழல் பரப்புரையை புறக்கணித்து, கட்டற்ற உண்மையான பேச்சுக்கு, எழுத்துக்கு, வெளிப்பாட்டுக்கு, கலந்துரையாடலுக்கு செயல்பாட்டுக்கு வழி சமைக்க வேண்டும் என்பதுதான். குறிப்பாக மறுப்பு, மாற்று, விமர்சன, முறையான எதிர்கருத்து உடையோர்கள் வன்முறையால் தாக்கப்படல் முற்றிலும் தவிர்க்கப்படவேண்டு. ஆரோக்கியமான ஒரு பண்பாடான திறந்த சிந்தனை செயல்பாட்டு சூழல் கட்டமைக்கப்படவேண்டும். இது எமது இருப்புக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் இன்றியமையாதது ஆகும்.

**- நற்கீரன் -**

ஆதாரங்கள் / உசாத்துணைகள்


[1] *David M. Miller. "The Spiritual Descent of the Divine: The Life Story of Swami Sivananda".*

[2] *Propaganda. (August 15> 2005). Wikipedia. http://en.wikipedia.org/wiki/Propaganda*

[3] அ மாணிக்கம். பவணந்த முனிவர். (1988). நன்னூல்-காண்டியுரை. சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

[4] கா. சிவத்தம்பி. (2000). யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை. கொழும்பு: குமரன் புத்தக நிலையம்.

[5] *Irshad Manji. How you can support the liberal reformation of Islam through "Project Ijtihad". Retrieved August 15. 2005. from http://www.muslim-refusenik.com/ijtihad.html*


## ஹீ ஹீ .......... ஹீ ஹீ ...........ஹீ ஹீ.........

*நான் இந்திய இராணுத்துவத்தை எதிர்த்து போராட முடிவெடுத்த பொழுது.. அவர்களிடம் தோற்றுபோவேனா வெல்வேனா என்றெல்லாம் நினைக்கவில்லை. அவர்களை எதிர்க்க வேணும் என்ற எண்ணம் மட்டுமே என்னிடம் இருந்தது..*

**- வேலுப்பிள்ளை பிரபாகரன் -**

♦♦♦

*நான் எனது இனத்தை மொழியை மனதுக்குள் எடுப்பதில்லை அதனால்தான் என்னால் நேர்மையாக சிந்திக்க முடிகிறது.*

**-உயிருடன் இருக்கும் போது கதிர்காமர் -**

♦♦♦

*என்னுடைய போராட்ட முறையை பின்பற்றி நீங்கள் (தமிழ் மக்கள்) வந்தால், பாலஸ்தீன மக்களின் உரிமைகளை கொடு என்று கோரி இஸ்ரேலிய மக்கள் தெருவில் இறங்கி ஊர்வலம் நடத்தியது போல் சிங்கள மக்களும் தெருவில் இறங்கி தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை கொடு என்று ஊர்வலம் நடத்தும் காலத்தை நாங்கள் விரைவாக உருவாக்க முடியும்!*

**- டக்ளஸ்தேவானந்தா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிகளின் காலம்

வாழ்வியலின் அழுத்தத்திற்குள் திணறும் மனிதம் முன் படைப்பாக பிரவாகம் எடுக்கிறது மனித ஆக்ரோஷங்கள். வாழ்வின் சாயல் காணக்கிடைக்கையில் பொக்கிஷமாக பதிந்து விடும் மனதினுள். என் வாழ்வின் காலம் மூன்றாகப் பிளவுபடுகின்றது. புழுதி அளைந்து களித்து நிற்றது ஒன்று, துப்பாக்கிகளின் காலத்தினுள் குத்திட்ட பார்வையோடு வெறுமையை நோக்கி நின்றது ஒருகாலம், இன்று புலம்பெயர்ந்து உயிரை தூரத்தில் தூக்கிப்போட்டு களிப்பதாய் ஜாலம் செய்யும் இது கடைசிக்காலம்.. மீட்கும் போது மறந்தவைகளை படைப்பாய் பதிவாய் படிக்கும் போது கொந் தளிக்கும் சிறுமனது.

துப்பாக்கிகளின் காலம் சிறுகதைத் தொகுப்பின் மூலம் தன்னுள் கிடந்தவற்றை ஆக்ரோஷமாகவும் இயல்பாகவும் வாசகர்களுக்குக் கொடுக்க முனைந்திருக்கின்றார் கவிஞர் இளைய அப்துல்லாஹ்.

*வாழ்வின் மீதான காதலின் இழப்பு மண் மீதான ஈர்ப்பின் பிரேமை மனித நேயமற்ற போரின் வடு என ஒரு நீண்ட அனுபவத்தின் ஒட்டு மொத்தத் திரட்டு துப்பாக்கிகளின் காலம் - ஒட்டுமாவடி அரபாத்.*

இலங்கையின் உள்நாட்டுப் போரால் வடபுலத்திலிருந்து பிடுங்கி எறியப்பட்ட எத்தனையோ முஸ்லீம் மக்களுள் இளைய அப்துல்லாஹ்வும் ஒருவர். வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட அப்பாவி முஸ்லீம்களுக்கும் அப்பாவித் தமிழருக்கும் அப்பாவி ஆடு மாடு நாய் கோழி போன்ற உயிரினங்களுக்கும் துப்பாக்கிகள் சுட்டுச் சாக்காட்டிய அப்பாவி எழுத்தாளர்கள் பத்திரிகையாளர் களுக்கும் தனது சிறுகதைத் தொகுதியான துப்பாக்கிகளின் காலத்தைச் சமர்பித்திருக்கின் றார் எழுத்தாளர்.

> நாங்கள் முஸ்லீம்கள்.
> இந்த ஒரே காரணம் மட்டும் தான்-
> 24 மணிநேர அவகாசத்தினுள்
> எங்கள் சொந்த பூமியில்
> இருந்து செத்த ஆட்டின்
> உண்ணியாய் கழற்றப்பட்டோம்.

துப்பாக்கிகளின் காலம் சிறு கதைத் தொகுப்பில் பத்து சிறுகதைகள் வெளிவந்திருக் கின்றன. படைப்பாளியின் முதல் சிறுகதைத் தொகுப்பு இதுவாகும்.

தலைப்புத் தந்த தாக்கத்துடன் படைபினுள் புகுந்த என்னுள் தலைப்பின் தாக்கத்தைப் படைப்பு ஏற்படுத் தவில்லை. பிடுங்கி எடுக்கப்பட்ட தாவரத் தின் வேர்கள் காயும் முன்பே வேதனையைக் கக்கும் என்ற என் அனுமானம் பிசகிப் பரவலாக பலதையும் மேலோட்டமாத் தொட்டுச் சென்றுள்ளது துப்பாக்கிகளின் காலம்.

தலித்துகளிடமிருந்து தலித்தாய் இருப்பதனால் உண்டாகும் வாழ்வியல் நோகளையும் பெண்களிடமிருந்து பெண்ணாய் பிறந்ததினால் அனுபவிக்கும் அடக்குமறை அழுத்தங்களையும் படைப்பினுள் எதிர்பார்த்துப் பழகியதால் முஸ்லீம் எழுத்தாளர் அப்துல்லாஹவிடமிருந்து பிடுங்கி எறியப்பட்டதால் எழுந்த கடுமையான ஆக்ரோஷத்தை எதிர்பார்த்தது என் தவறோ?

துப்பாக்கிகளின் காலம் உள் சகுனம் சிறுகதை சாதியத்தையும் போர் சூழலையும் ஒன்றாகக் கூற முனைந்து இரண்டின் வீரியத்தையும் முழுமையாகத் தரத்தவறி விட்டது.

துப்பாக்கிகளின் காலம் சிறுகதை போரினால் உளவியல் தாக் கத்திற்கு உள்ளாவது பெண்கள் குழந்தைகள் முதியோர் என்பதைக் கடந்து போராளி ஒருவரின் மனப்பிறழ்வைக் காட்டுவதாக அமைந்திருப்பது புதிதான நோக்கு.

ஜோர்ச் எமில்ட்ரேயும் அவனது தோழி மொனோலிஸாவும்- திருமணம் குடும்ப உறவு என்பனவற்றைக் கேள்விக்குள்ளாக் குகின்றது. எழுத்தாளரின் நோக்கில் இதற்கெல்லாம் லாயக் கானவர்கள் வெள்ளையர்கள் என்று கூறுவது போல் படுகின்றது. தன் கருத்தில் தெளிவும் திடமும் இருக்கும் பட்சத்தில் தமிழ் காதலர்களைக் கொண்டே கதையைப் படைத்திருக்கலாம்.
ஏதிலிப் பறவைகளாய் - முஸ்லீம் கிறிஸ்தவர்களுக்கிடையிலான பரஸ்பர உறவை கவிதை வடிவில் தந்திருக்கும் படைப்பாளி தன் மண்ணில் இழப்பை வரிகளுக்குள் புகுத்தி வாசகர்களின் மனதிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.
அழவேண்டும் போல் அடிக்கடி நினைவு தட்டுகிறது. நான் ஒரு அகதி. எனக்கு இரண்டு பிரிவுகள். ஒன்று எனது தாய்த் தமிழ் மண் மற்றையது மேரி. எனும் வரிகளுடன் கவிதை வடிவிலான இவர் சிறுகதை முடிவடை கின்றது. எமக்குள்ளும் இருக் கின்றது இழந்து போய் விட்ட எமது சினேகி தர்களின் பெயர் பட்டியல்.

காலம் வரும் வரை-14 வருடங் களுக்கு மேலாக அகதி வாழ்வு வாழும் முஸ்லீம் மக்களின் வேதனை ஏக்கம் எதிர்பார்ப்பு ஏமாற்றம் என்பவற்றை இயல் பான பேச்சு வழக்குத் தமிழில் படைப்பாளி தந்திருக்கின்றார்.
கென்டெயினர் காலம்- மிகக் கொடூரமான புலம்பெயர்ந் தலைதலின் பதிவு இச்சிறுகதை. நான் அறியா ஒரு உலகத்தினுள் அதன் வேதனையுடன் அலைந்து அமிழ்ந்து எழ முடிந்தது.

மோகனவதனி புதிய சிறுகதை முயற்சி. லண்டன் வாழ்க்கை முறையின் ஒரு பதிவு. எழுத்தாளர் தனது அனுபவங்களை கூறுகின்றார் என்று பல இடங்களில் உணரக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய அப்துல்லாஹ் எள்ளலுடன் கூடிய மிக இயல்பான எழுத்து நடையில் தனது சிறுகதைகளை நகர்த்திச் சென்றிருக்கின்றார். இருப்பினும் பல இடங்களின் வாசகர்களின் வாசிப்பனுபவத்தில் மேல் அவருக்கிருக்கும் நம்பிக்கையின்மை காரணமோ என்னவோ தான் கூறியவற்றையை மீண்டும் மீள்வாசிப்பிற்கு உள்ளாக்கியிருக்கின்றார். பல இடங்களில் பிரச்சாரத்தன்மையும் சீர்திருத்தத் தன்மையும் காணப்படுவதால் காத்திரமான சிறுகதைகள் ஏற்படுத்தும் தாக்கத்தை இவரது படைப்புகள் ஏற்படுத்தத் தவறிவிட்டன. தன் சொந்த மண்ணிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட எழுத்தாளர் இளைய அப்துல்லாவிடமிருந்து அவரது மக்களின் வேதனைகள் சார்ந்த பல காத்திரமான சிறுகதைகளை எதிர் பார்க்கின்றேன்.

இவரது பிணம் செய்யும் தேசம் எனும் கவிதைத் தொகுப்பிற்கு இலங்கை அரசின் சாகாத்திய விருது கிடைத்திருக்கின்றது. பிணம் செய்யும் தேசத்தில் இருக்கும் முழுமையான எழுத்தாளுமை துப்பாக்கிகளின் காலத்தில் காணப்படவில்லை. நல்ல ஒரு கவிஞராக மட்டுமே இளையஅப்துல்லாஹ்வைப் பார்க்க முடிகின்றது.

**- சுமதி ரூபன் -**

### இனவாத முகத்தைச் சிதைத்துப் போட

*வாருங்கள் தோழர்களே!*
*சிதறிய முகத்தை*
*ஒன்று சேர்ப்போம்!*

*இனவாத முகத்தைச்*
*சிதைத்துப் போடுவோம்.*
*ஒற்றுமை விதையை*
*நாட்டு மத்தியில்*
*பவ்வியமாய் நடுவோம்.*

*அக்குறணையின்*
*கித்துல் பாணியை*
*யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி*
*பனங்கட்டியை*
*வரவழைத்து உண்போம்.*

*விடுங்கள்!*
*பிய சேனாவும் - ஹேமாவதியும்*
*கஜுர்னாக் கடற்கரை மணலில்*
*குதாகலம் கொள்ளட்டும்.*

*சுந்தா - கேதீஸை*
*அழைத்து வா!*
*கோல் பேசில் குடைக்குள்*
*மறைந்து கொள்!*

*துப்பாக்கியை முறித்து வை*
*வேளாண்மையை*
*அழிக்கும்*
*பன்றியை மட்டும்*
*சுடுவதற்காக*

*மனச்சாட்சியோடு*
*ஒரு ஒப்பந்தம் செய்!*
*ஓடி வாருங்கள்*
*இலங்கை முழுக்க*
*சமாதான சுகந்தத்தை*
*அள்ளித் தெளியுங்கள்!*
*கறுப்பு றெயில்ளை*
*மாற்றி*
*வெள்ளை றெயில்களை*
*காங்கேசன்துறைக்கும்*
*கோட்டைக்குமாய்*
*ஓடவிடுவோம்.*


*வேண்டாம்!*
*எரிமலை வெடித்துச்*
*சிதற வேண்டாம்.*
*வேண்டாம்.*
*போர் முஸ்தீபுகள்.*
*இந்தியக் குதிரைகள்*
*வேண்டாம்.*
*அஸ்வமேத யாகமும்*
*வேண்டாம்.*

*வேண்டும் ஒன்றே ஒன்று*
*பிரேத ஓலங்களில்லாத*
*அமைதி பூத்த*
*எங்கள்*
*அருமையான*
*இலங்கைத் திருநாடு.*

**- இளைய அப்துல்லாஹ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலவேறு நான்களாகி
திசையெட்டுமனமலையும்
நவீனமானுடனுக்கு
விசும்பில் வீச
தாமரைகள் மலரும்
தடாகம் சாத்தியமில்லை

ஊர்ப்பற்றைக் கோயிலின்
அடர்ந்த விழுதுகள் விலக்கி
தேவியெழுகிறாள்
ஊழிக்கூத்தாடிய உக்கிரம்
கண்களில்லை

இடதுபுற மூக்குத்தியில்
திவலைகள் வீழ
நட்சத்திரங்கள் தெறிக்கின்றன

அலையலையென சுருண்டகேசம்
முதுகிலும் மார்பிலும்
இருளென மிதக்க
கண்மூடிச் சிரிக்கிறாள்
குளிர்மையை உள்வாங்கி

இதுவரை
பூசாரி
அருள்வந்து
வெறிகொண்டாடியபோதெல்லாம்
தன்னை விக்கிரமாய்
அடக்கியும் ஒடுக்கியவள்
தானே யாவையுமென்று
விசாலிக்கிறாள்
இன்று

பறையடித்து சங்கு ஊதி
தானே உருவேறியாடிய
பொழுதுகள் மறந்த பூசாரி
காளியின்
தடம்புரளாத இயங்கியல் அழகில்
இலயித்து
தானும் மூழ்கிறான்
உயிரின் ஒற்றைப்புள்ளியைத்தேடும்
மர்மம் நிறைந்த ஆட்டத்தில்

பின்,
தேவியின் நிறைவான நடனத்துக்கு
இடங்கொடுக்க முடியா இயற்கையை
எண்ணி நாணி
தன்னைத் தோற்றவனாய் காட்டமுடியாப்
பேடிமையில்
உடைத்துவிடுகின்றான் ஒளிரும்
மூக்குத்தியை
தற்செயலான நிகழ்வினைப்போல

இப்போது
காளியின் விழிகளில்
சொல்லவொண்ணா உக்கிரமும்
கடைவாயில் ஓர் ஏளனச்சிரிப்பும்.

**இளங்கோ**
**2004.05.02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துரோகியின் கேள்விகள்...

**நாம் மிகவும் இறுக்கமானதொரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம்மைச் சூழ்ந்துள்ள ஊடகத்துறை (பத்திரிகை வானொலி தொலைக்காட்சி மற்றும் இணையத்தளங்கள்) மூலமாக எமக்கான கட்டாயப்பாதை ஒன்று காட்டப்படுகிறது. நாம் விரும்பியோ விரும்பாமலோ அதற்குள்ளாகவே போகும்படி நுழைக்கப்படுகிறோம். அவர்கள் மூலம் தரப்படும் விடையங்களே எங்களைத் தயார் படுத்துகிறது. மிகவும் நுணுக்கமாக திட்டமிடப்பட்டு எம்மைக் குறிவைத்து உருவாக்கப்படும் மோசமான கதைகளும், கதைகளை உருவாக்க ஓடிவரும் திட்டமிடப்பட்ட வார்த்தைகளும் எமது சிந்தனைத்தளத்தில் புகுத்தப்பட்டு ஒரு குருட்டு நிலைக்கு எங்களை அழைத்துச் சென்றுவிடுகிறது.**

அதிகாரக் கும்பலின் அதிகார வர்க்கத்தின் இருப்பினைத் தக்க வைத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாய் இருப்பவாகள் இந்த ஊடகத்துறை சார்ந்தவர்களே.மிகவும் கவனமாக வரையறுக்கப் பட்ட தரவுகள் மூலம் எங்களை தமது இருப்புக்காகத் தயார் படுத்துவார்கள் இவர்கள். இந்தப் பெரும் போக்கிலிருந்து தப்பித்து அவற்றை மறுதலித்து நிற்கும் குரல்களெல்லாம் மக்களிடத்தில் போவதில்லை. ஆகக் குறைந்தது வரலாற்றுப் புரட்டினை மறுத்து நிற்பதிலாவது மாற்றுக்குரலகள் தன்னளவில் நியாயம் தேடிக் கொள்கிறது. அதன்தேவையும் இன்று அதுவாகவே மட்டும் இருக்கிறது.

பொதுவாக ஊடகத்துறை என்பது மக்களுக்கும் சமூகத்துக்குமான உறவை நெருக்கமாக வைத்திருப்பதும் சமூத்தின் நிகழ்வுகள் மற்றும் அரசியல் கருத்துக்களை உண்மை நிலையுடன் மக்களுக்கு அறிவிப்பவையாகவும் இருத்தல் வேண்டும். தமக்கான கருத்தியலுடன் சமூகம் சார்ந்த விவாதங்களைத் தொடருதல் ஊடகத்துறைக்குத்தான் சாத்தியமாய் இருக்கிறது. ஆனால் இவை எவ்வகையான சாத்தியங்களையும் பெரும்பாலான தமிழ் ஊடகத் துறை கொண்டிருப்பதில்லை என்பது தமிழ்ச் சமூகத்தின் முதல் சாபக்கேடு.

இங்கே இந்த ஊடகத்துறையாளர்களின் அல்லது அதுசார்ந்த எழுத்தாளர்களின் பார்வை என்பது ஒரு கருத்து சார்ந்து, ஆதரவு -எதிர்ப்பு, இருத்தல் - இல்லாதிருத்தல், நம்புதல் - நம்பாமல் விடுதல் என்பதாக ஒரு இருண்மை நிலையிலேயே தங்களைத் தக்கவைத்தக் கொள்வதாக இருக்கிறது. எதன்மீதும் தீவிர விசாரணைப்பார்வையை அவர்கள் கொண்டிருப்பதில்லை. கருத்துச் சுதந்திரம் ஜனநாயக விவாதம் என்பவை பற்றி எவ்வித அக் கறையும் பட்டுக்கொள்வதில்லை. இதன் மறுபக்கம் எதன் மீதான எதிர்க் கருத்துக்களையும் உள்வாங்க மறுத்து விடுவதோடு திரும்பத் திரும்ப பொய்களைக் கூறுவதூடாக பொய்களை உண்மையாக நிறுவி தமக்காக வாதாடும் நிலைக்கு மக்களைக் கொண்டுவந்து விட்டுவிடுகிறார்கள். இதற்குள் தமக்கேயான சிந்தனைப் போக்கை இழந்து போன தொலைக்காட்சி மற்றும் வானொலி பத்திரிகை சஞ்சிகைகள் ஊடாக உலாவரும் இந்த வகை எழுத்தாளர்கள் தங்களின் பச்சோந்தித்தனத்தை தக்கவைத்துக் கொள்வதன் மூலம் அதிகாரக் கும்பலைக் காப்பாற்ற தமது பேனாக்களை உபயோகப்படுத்துவதன் மூலம் நமது வரலாற்றின் குற்றவாளியாகத் தாமாகவே மாறிப்போகிறார்கள்

இவர்கள் இப்படியிருக்க இங்கே எனது கவனம் யார் மீது என்றால் இவ்வகைப் பொதுப்போக்கில் இருந்து நீங்கி மாற்றுக்கருத்து மாற்றுச் சிந்தனை மாற்று இலக்கியம், மாற்றுத் தேவை என்று வாய் நிறையப் பேசிவரும் நமது எழுத்தாளர்கள் இலக்கியக் காரர்கள் பேராசிரிய பெருந்தகைகள் எனப்படுவோரெல்லாம் இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கும் அல்லது இவை எல்லாவற்றோடும் ஒத்தோடும் போக்கினைக் கொண்டிருக்கும் நிலையினை எடுத்திருப்பது பற்றித்தான்.


சமீபகாலமாக இலங்கையில் இருந்தும் சரி கனடாவில் இருந்தும் சரி வருகின்ற அனேக தமிழ்ப் பத்திரிகைகள் பரப்பிவரும் மோசமான கருத்தியல்கள் குறித்து நாம் இங்கே பேசியாக வேண்டும். இவர்களுக்கு ஆகக் குறைந்தளவு பத்திரிகை தர்மம் என்ன என்பதையும் அறியாத மனோபாவத்தில் எழுதிக் கொண்டிருப்பவர்கள். இவர்களின் மீது அல்லது இந்தப் பத்திரிகைகளின் எழுத்துக்கள் மீது, அவர்கள் மக்களிடம் பரப்பி வரும் மோசமான கருத்தியல் மீது இந்த மாற்றுக்கருத்துக் கொண்டோர் ஏன் அக்கறை கொள்வதில்லை. ஏன் இவையெல்லாம் நம்மீது எவ்வித தாக்கத்தையும் கொடுக்கவில்லை. சமூகம் சார்ந்து அக்கறைகொள்வதாகச் சொல்பவர்கள் ஏன் இவைபற்றி அக்கறை கொள்வதில்லை? இவையெல்லாம் நமது பிரச்சனை இல்லை என்பது போல் எப்படி இவர்களால் பராமுகமாக இருக்க முடிகிறது? இந்தப் பாராமுக மனோநிலைதான், எனது பிரச்சனை அல்லது எனது வீடு, எனது குடும்பம் எனது வேலி எனது உறவு எனது ஊர் என்ற யாழ்ப்பாணத்து மையவாதச் சிந்தனையாக இவர்களிடம் தொக்கிநிற்கிறது. இந்தச் சிந்தனைப் போக்கே எவ்வித மோசமான கருத்து மீதும் நிகழ்வு மீதும் கேள்வி எழுப்பாது என்னுடைய எழுத்து என்ற ஒற்றைப் பரிமாணத்திற்குள் மட்டும் நின்று இந்த எழுத்தாளர்ளைத் திருப்திப்படுத்துகிறது.

கடந்த காலங்களில் நம்முன் நடைபெற்ற எவ்வளவோ சம்பவங்கள் குறித்து வாய்மூடி மௌனம் காத்தவர்களாகவே இவர்களின் வரலாறு இருக்கிறது. நமது கண்ணுக்கு முன் கொலைகளும் விரட்டியடிப்புக்களும் குழிபறிப்புக்களும் நடந்து கொண்டிருக்கும் அனேக தருணங்களில் நிலவைப் பார்த்து கவி பாடிய கவிஞர்களாகத் தான் இருந்தார்கள் நமது எழுத்தாளப் பெருந் தகைகள். அல்லது எதுவும் பிழை நடக்கவில்லை என்பது போல் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடந்த காலங்களில் நமது நாட்டின் யுத்த காலங்களில் இவ்வகைப் பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் எழுதிவந்த விடையங்கள் இவற்றிற்கு சிறந்த உதாரணங்கள். யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் கலைக்கப்பட்டது பற்றி இவ்கைப் பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் பெருமளவு மௌனம் காத்தார்கள். அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆதரித்தார்கள். ஆரம்ப காலங்களில், ஈழத்தில் முஸ்லீம் இனத்தின் இருப்புப் பற்றியும் அவர்களின் பிரச்சனைகள் குறித்தும் எழுதி வந்த, மாற்று இலக்கியவாதிகளே-ஜெயபாலன் போன்றோர்- இன்று அவற்றை மறுதலித்தும் அவர்களுக்கு ஒரு பிரச்சனையும் ஈழத்தில் இல்லை என்பது போல் எழுதி புலிகளிடம் சங்கமமாகி விட்ட அவல நிலையில் இருக்கிறார்கள். அதைவிட கடந்த வருடம் ஈழவிடுதலைப்போராட்டத்தில் நடைபெற்ற பிளவுகளும் கொலைகளும் பற்றி இந்தப் பத்திரிகைகள் அதன் எழுத்தாளர்கள் என்போர்கள் எவ்வாறான தகவல்களை மக்களுக்கு சொல்லிக் கொண்டார்கள் என்று பார்த்தால், மிகவும் கீழ்த்தரமான நிலையில் நடைபெற்ற கொலைக் கலாச்சாரத்தை ஆதரித்து தமிழ் மக்களின் முதுகில் சவாரி செய்தவர்களாக காட்சியளிப்பார்கள். தமிழ் மக்களது விம்பங்களாக தம்மை வரித்து ஒட்டு மொத்த தமிழ் மக்களது கருத்தும் தாமே என்பதாக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். நுணுக்கமான வார்த்தைகளால் தமக்குரிய பொய்யைச் மக்களிடம் சொல்லும் வித்தை இவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. எப்படி அமெரிக்க நலன் காக்கும், அமெரிக்கச் சிந்தனையை மெல்ல மெல்ல உலகமெங்கும் ஊற வைக்கும் வித்தையை இங்குள்ள மீடியாக்கள் தம்வசம் கைக்கொண்டுள்ளனவோ அதேயளவு புத்திசாலித்தனத்தடன் யாழ்ப்பாண மையவாத நலன் காக்கும் வித்தையை இவர்கள் கைக்கொண்டுள்ளனர். கடந்த கிழக்கு மாகாணப் பிளவின் பின்னர் (மார்ச் பிளவு) வெளிவந்த அனேக பத்திரிகைகள் தமது எடிட்டோரியலில் புலம்பிய எழுத்துக்கள் இவற்றிற்கு பெரும் சான்றாக இருக்கும். அவ்வளவு காலமும் மற்றவர்களால் சொல்லப்பட்டு வந்த புலிகளின் வன்முறையை புலிகளின் முக்கிய தளபதியாக இருந்தவர் அம்பலப்படுத்தியபோது பாவம் இவர்களால் தாங்க முடியாமல் போயிற்று. அதை மறைத்துக் கொள்ள புலிகளையே மேவிக்கொண்டு இவர்கள் பொய்கள் சொல்லத் தொடங்கினார்கள். இங்கையில் வீரகேசரி தொடக்கம் கனடா தமிழி இலவசப்பத்திரிகைகள் வரை அந்தக் கவலையில் ஆடிப்போயி ருந்தது. அவர்களின் "நமது நிருபர்" கொழுப்பிலிருந்து அனுப்பிய இரகசியத்த தகவலை தமது எடிட்டோரியலில் எழுதி புலிகளின் பொல்லாப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றி தமது வியாபாரத்தைத் தொடர்ந்து கவனித்தார்கள்.

கனடாவைப் பொறுத்தளவில் இங்கு வெளிவரும் - அதிக பக்கங்களை விளம்பரத்துடன்-இலவசப்பத்திரிகைகளே இங்குள்ள தமிழ் மக்களின் அதிகப்படியான செய்திப் பரிவர்த்தனையைப் பூர்திசெய்கின்றன. இந்தப் பத்திரிகையாளர்களில் அனேகமானோர் மக்கள் பற்றிய சமூகம் பற்றிய எவ்வித அக்கறையும் அற்றவர்கள். இவர்களுக்கு தெரிந்ததெல்லாம் அதிகாரநலன் பேணுவதனூடாக தமது வியாபார இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதுதான். அதற்காகவே அதிகாரம் சார்ந்த கருத்துக்களை எவ்வித கேள்வியுமற்று தமது கருத்தாக ஏற்று அவற்றை மக்களிடம் ஒப்விப்பார்கள். கடந்த காலங்களில் இந்தப் பத்திரிகை யாளர்களது (கனடாவிலும் சரி ஐரோப்பாவிலும்சரி ஈழத்திலும் சரி) கருத்துக்களும் செய்திகளும் புலிகளின் பத்திரிகைகள் கொண்டி ருந்த வார்த்தைகளிலிருந்தும் கருத்துக்களிலிருந்தும் எவ்வித சொற் பிறழ்வுமற்று பிரசுரமாகி வந்தது இவற்றிற்கு நல்ல உதாரணம். அதை விட புலிகளின் செயல் திறனையும் மீறி அவர்களுடை நலனில் அக்கறையாய் இருப்பவர்களும் இவர்களாகத் தான் இருக்கிறார்கள். அவர்களுக்காகவே பொய்களை உருவாக்குதல், செய்திகளைத் திரித்தல், என்று புலிகளின் நலனில் அதிக அக்கறைப்படுபவர்கள் இவர்கள்தான். எப்பொழுதும் அவர்கள் அதிகாரம் சார்ந்து இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்களாகையால் அதிகாரவர்க்கம் மாறும் போது அவர்களுக்கேற்றபடி தம்மை மாற்றிக் கொள்வார்கள். இவர்கள் தான் இன்று நம் கண்ணுக்கு முன் புத்திஜீவிகளாகக் காட்டிக் கொள்ளும் எழுத்தாளர்கள். இவர்கள்தான் நமது மக்களின் அறிவியலுக்கும் அவர்களின் வாழ்வியல் சார்ந்த அரசியலுக்கும் பக்கபலமான கருத்துக்களை தெரிவிப்பவர்கள். ஏப்படி நாடு உருப்படும்? இந்த உருப்படாத சூழல் பற்றி நடது கனவான்கள் ஏன் கவலைகொள்வதில்லை? இவர்கள் பற்றியெல்லாம் நாம் ஏன் அக்கறைப்படாது இருக்கிறோம். இவர்கள் பற்றி ஏன் நாம் நம்முடைய முதல் கேள்வியை எழுப்பவில்லை? இந்தப் பத்திரிகைகள் அல்லது எழுத்துக்கள் யாரையும் எதையும் பெரிதாகச் செய்து விடப் போவதில்லை. இவர்கள் மீது நாம் கேள்வி எழுப்பி அவர்கள் திருந்தி விடப்போவதுமில்லை என்று சொல்லிக் கொண்டு இருப்போமானால் நம்ம 'காலம்' **செல்வம் அண்ணை** அவர்கள் தனது கவிதை ஒன்றில்
சொன்னது போல்

*கடைசியில் எதிரி நமது ஒட்டுமொத்த சமூகத்தையும்*
*கம்பத்தில் கட்டி சுட்டுக்கொன்று விட்டு*
*தற்கொலை என்று எழுதிவைப்பான்.*

ஊரில் இருக்கின்ற குஞ்சு குருமானுக்கெல்லாம் கையில் துப்பாக்கியைத் திணித்து அவர்களின் வாழ்வை அழிப்பதையோ தமது சகோதரர்களைச் சுட்டுக் கொன்று துரோகி என்று பட்டியலிட்டு ஒரு தேசத்தின் எதிர் காலத்தை அழிப்பதையோ கண்டு கொள்ளாமல் புலிகளின் முகாம்களுக்கு வக்கேசன் போய் அவர்களை வாயார வாழ்த்தி எழுதிக் கொண்டு இங்கு வேடன்-ம் - பின்ஞ்சு (அதாவது Warden & Finch) தெருவில் சுடப்பட்டு இறந்து போன தமிழ் இளைஞனுக்கு மட்டும் இரங்கல் கவிதை எழுதுவதில் புண்ணியமில்லை.

எழுத்தாளன் எனில் கொலையின் ஆணிவேரைப் பிடுங்க வேண்டும். மானிடத்தின் நசிவும் வாதையும் எழுதப்படவேண்டும் அதற்காக உண்மையாய் இருக்கவேண்டும். அதைச்செய்யாதவரைக்கும் ஆயிரம் கவிதை எழுதியும் புண்ணியமில்லை.

***மறைக்கப்பட்ட ஆழ் மனதின்***
***இருட்டறையில் நிகழ்த்தப்படும்***
***எண்ணற்ற படுகொலைக் கனவுகளை***
***நாம் செயலற்ற வெற்றுச் செயற்பாடாய்***
***அல்லது வெறும் கனவுலகச் சிந்தனையாய்***
***அர்த்த மற்றதாக்குவதன் மூலம்***
***எம்மிலிருந்து எதுவித வன்முறையும்***
***நிகழாத வண்ணம் காப்பாற்றப்படுகிறோம்.***
***மறு முனையில்***
***வெளியுலகின் அதிபயங்கரப் படுகொலைக்கும்***
***உச்சக்கட்டச் சித்திரவதைக்கும்***
***ஒவ்வொரு துளியாய்த் துணையிருக்கிறோம்***
***என்பதை நினைப்பதில்லை.***

**- கற்சுறா -**

**தனித்தமிழ் கோசம் உலகெங்கும் பரவலாகக் கேட்கத் தொடங்கி விட்டது. இதன் தொடர்ச்சியாய் மூதறிஞர் தமிழ்ப் பண்டிதர் அண்ணல் கா. பொ. அறுவடைநம்பி LCBO அவர்கள் தனித்தமிழ் உலகத்துக்கு தந்திருக்கும் புதிய தமிச் சொல்லகராதியிலிருந்து சில சொற்களை நன்றியுடன் பிரசுரிக்கிறேம். (தனித்தமிழ் ஆவலருக்கு இது மிகவும் பிரயோசனமான நூல்).**


| பிறமொழிச் சொற்கள் | தமிழ் சொற்கள் |
|---|---|
| துப்பாக்கி (துருக்கி) | சிறு நெருப்புக் குண்டு துப்பி |
| Machine gun (ஆங்கிலம்) | இயந்திரத் தானியங்கி சிறு நெருப்புக் குண்டு துப்பி |
| Rocket Launcher(ஆங்கிலம்) | இறாக்கட்டு எறியன் |
| Artillery (இலத்தீன் ) | பெருநெருப்புக் குண்டெறியன் |
| Artillery Shell (இலத்தீன, ஆங்கிலம்) | பெருநெருப்புக் குண்டெறியனின் சிப்பி |
| Revolver (ஆங்கிலம்) | உறுளிச் சிறு நெருப்புக் குண்டு துப்பி |
| BBQ Machine (கெயிட்டி) | சுடுகலன். |
| Lutinent Cornel (பிரான்சு) | லெப்டினன் கேர்ணல |
| Non-Veg Patty | மிதிவெடி. |
| பிரபாகரன் (சமஸ்கிரதம்) | புதிய கைகளையுடையவன்/ புதிய பகலவன்/ இளம் ஞாயிறு. |

*பி.கு: அறியப்பட்ட எம்மொழிச் சொற்களாக இருந்தாலும் அழகு தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்படும்.*
*தொடர்புகளுக்கு:* *aruvadnampi@gamil.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராம்.......?



**தர்மரட்ணம் சிவராம் கொலை செய்யப்பட்ட பின், கருமையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடிலின்போது அதில் பங்கு பற்றியவர்களின் கருத்துக்கள். ஒலிப்பதிவு நாடாவில் சிலரின் கருத்துக்கள் தெளிவாக பதியப்படாமையால் அக் கருத்துக்கள் இங்கே இடம்பெறவில்லை. ஆ-ர் குழு**

***சபேசன்:***

தராக்கி என்ற பத்திரிகையளரின் கொலை சம்பந்தமாக அண்மையில் பரபரப்பாக கதைக்கப்பட்டது. அவர் தனிநபர் சார்திருந்த கருத்து, அரசியல், அமைப்பு தொடர்பாக.....
ஒரு பத்திரிகையாளரை கொலை செய்வதன் மூலம் அவர் சார்ந்திருந்த கருத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியாது. அதைவிட அந்தக் கொலைக்கு எதிரான வேலையைத்தான் செய்யும். இதுதான் பிரதானமான கருத்து. தராக்கி ஒரு பத்திரிகை யாளனாக, ஒரு போராளியாக ஒரு தேசியவாதியாக தனக்கு என்று ஒரு நிலைப்பாட்டை வெளிக்காட்டாமல் இருந்திருக்கிறார். இதனால அவர் யாரை நேசிக்கிறார் அல்லது யாரை எதிர்க்கிறார் என்றது எவருக்கும் தெளிவில்லாமல் இருந்தது. அதே போல இவர் யாரால் கொல்லப்பட்டார் என்பதற்கான சாத்தியக்கூறும் பலவகைப் பட்டதாக இருக்கிறது. ஒரு மனிதன் பத்திரிகை யாளனாகவோ, கலைஞனாகவோ, கவிஞனாகவோ, நாடகனாகவோ இருந்தாலும் தான் சார்ந்த அரசியலுடன் தான் அவருடைய கருத்து வெளிப்படும். அப்போது தான் அவர் சார்ந்த கருத்து நிலையில் இருந்து அவருக்கான கௌரவம் கிடைக்கும். இவருடைய மரணம் கவலைப்பட வேண்டியதொன்று ஆனால் இவருக்கு இருக்கின்ற பல முகங்கள் காரணமாக யாரிடம் இருந்து கௌரவம் கிடைக்கும் என்பது கேள்விக்குறி. இவருடை மரணத்திற்கான பாத்திரதாரியாக இவருடைய வாழ்க்கையோ அமைந்துள்ளது. அவர் பத்திரிகையாளனாக இருந்த காலத்தில வேறு பத்திரியாளர்கள் கொல்லப் பட்டனர். சின்னபாலா உட்பட. இவர்களுடைய கொலைகளுக்கு சிவராம் மௌனம் சாதித்திருந்தார். அதேபோல இவருடைய கொலைக்கும் ஒரு பக்கம் சார்ந்த கருத்துக்களே வெளிப்படுகிறது. இந்த வகையில் நான் மதிக்கின்ற பத்திரிகையாளன் தாயகம் ஜோர்ச்குர்சேவ். இவர் தான் சார்ந்த கருத்திற்கு எதிர்க்கருத் துக்களையும் இவருடைய பத்திரிகையில் பிரசுரிந்திருந்தார். இவர் அடிக்கடி எழுதுவார் "உன்னுடைய கருத்து எனது கருத்திற்கு எதிராக இருந்தாலும் அதைச் சொலலும் சுதந்திரத்திற்காக எனது உயிரையும் கொடுப்பேன்"

சிவராமினுடைய வாழ்க்கையில் ஒரு நிலைப்பட்ட அரசியல் கருத்தோட அவர் இருந்ததில்லை. ஒரு மனிதன் சொல்லவருகின்ற கருத்தினை வன்முறைக்கு ஊடாக நிறுத்துவது என்பதை அவருடைய வாழ்க்கையே நிருபித்திருக்கிறது.

***மகேந்திரன்:***

தமிழ் மக்களிடையே இருந்த சிறந்த பத்திரிகையாளன், வல்லமை மிக்க ஒரு எழுத்தாளன் கொல்லப்பட்டது எங்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது தான். கடந்தகாலத்தில் சபாலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட அப்பாவிப் போராளிகள் உட்பட, பலர் கொல்லப்பட்டதற்கு இவரே காரணமாக இருந்திருக்கிறார். தன்னுடைய எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்ற விடையத்திலேயும் தான் எந்த அரசியல் கருத்து சார்ந்திருந்தார் என்பதிலும் தொடர்ச்சியான ஒரு போராட்டத்தில இவர் என்ன பெரிதாக சாதித்தார் என்பதும் தெரியவில்லை. முக்கியமாக ஒரு மனிதனை அழிப்பதன் ஊடாக யாரும் பெரிதாக ஒன்றும் சாதித்து விட முடியாது என்பது உண்மை. அதேபோல தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில ஒரு இயக்கத்தை இன்னொரு இயக்கம் அழிக்க வெளிக்கிட்டும் அவர்களை அழிக்க முடியவில்லை. அவர் தான் சார்ந்த சமூகத்திற்கு பிரயோசனமாக ஒன்றும் செய்யமுடியாதற்கு காரணம் அவரின் அரசியல் சார்பு நிலைதான் அதற்குக் காரணம்.

***ஜெபா:***

பத்திரிகையாளர்களின் கொலைகள் இலங்கையிலும் உலக நாடுகளிலும் நடப்பதை நாம் கவனித்துக்கொண்டு வருகிறோம். அந்தக் கொலைகளுக்கான காரணம் அதுவாக இருக்கலாம் இதுவாக இருக்கலாம், எக்ஸ்சாக இருக்கலாம் வையாக இருக்கலாம் என்று ஊகிக்கத்தான் முடிகிறது. அதனுடைய கொலைக்குப் பின்னாலா யார் இவர்களைத் தூக்கிப் பிடிக்கிறார்கள், யார் விமர்ச்சிக்கின்றார்கள் என்பதைப் பார்த்துத்தான் யார் காரணம் என்பதை ஊகிக்க முடிகிறது. மற்றது இலங்கை போன்ற போர்ச்சூழலில் இருந்து பணியாற்றுகின்ற பத்திரிகையாளர்கள் வலது சாரி, இடதுசாரி, நாட்டிற்கு எதிரானவர்கள், நாட்டிற்கு சார்பானவர்கள், இனத்திற்கு எதிரானவர்கள், இனத்திற்கு சார்பானவர்கள் என்ற எந்த நிலைப்பாடுகளை எடுப்பவர்களாயிருந்தாலும் அவர்கள போற்றப்பட வேண்டியவர்கள். ஏனென்றால் பத்திரிகையாளர்கள் எத்தனையோ பேருடைய சிந்தனைகளைத் தூண்டுவதற்காக எழுதிக்கொண்டே இருப்பவர்கள். இவர்கள் உயிரைக் கூட பணயம் வைத்து எழுதுகிறார்கள். அவர்கள் எந்தப் பத்திரிகையாளர்களாக இருந்தாலும் சரி. எந்தப் பத்திரிகையாளரும் கொல்லப்படுவது அனுமதிக்க முடியாது.



***பாஸ்கரன்:***

தராக்கி சிவராமின் படுகொலை கண்டிக்கப்பட வேண்டிய விடையம். தராக்கியினுடைய படுகொலை என்பதுடன் அவருடைய அரசியல் நிலைப்பாடு என்பது ஆராயப்படவேண்டிது அல்ல. அது தேவையில்லாததென்று. பத்திரிகையாளர் மட்டுமல்ல மற்றைய எந்த இயக்கத்தவர்களையோ அல்லது எந்தத் தனிமனிதனையோ கொலை செய்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் படுகொலை என்பதை கண்டிக்கிற நேரத்தில இங்கு கூடியிருப்பவர்கள் அரசியலோடையோ, பத்திரிகைகளோடையோ தொடர்புடையவர்கள் என்று நினைக்கிறேன். நாங்கள் எல்லாரும் இணைந்து எல்லாப் படுகொலைகளையும் இந்த உலகத்திற்கு வெளிப்படுத்துவற்கு நாம் பாடுபடவேண்டும். குறிப்பிட்ட ஒரு தராகி அல்லது குறிப்பிட்ட ஒரு பத்திரிகையாளன் கொலையை மட்டும் பேசுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. ஆகவே எல்லாருடைய படுகொலைகளையும் நாம் பேசியே ஆகவேண்டும். இது தான் என்னுடைய கருத்து.

***........................:***

உலகளாவிய அளவில் பத்திரிகையாளர் கொல்லப்படுவதும், எமது தேசிய விடுதலைப்போராட்டத்தில் பத்திரிகையாளர் கொல்லப்படுவதும் வேதனையோடு கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆயுதம் இல்லாமல் இயங்கும் ஒரு மனிதனை ஆயுதம் கொண்டு கொலை செய்வது ஏற்க முடியாத ஒன்று. இரண்டு புறமும் ஆயுதங்களுடன் நின்று போராடுகையில் கொலைகள் நடப்பதை தவிர்க்க முடியாது. தராக்கியை எனக்கு 86ஆம் ஆண்டில் இருந்து தெரியும். சரத்முத்தெட்டுவேகமவின் இழப்பின் போது ஒரே மேடையில் இரண்டு பேரும் பேசியிருந்தோம். என்னைப் பொறுத்தவரையில் பத்திரிகையாளர்களை சாதாரண மக்களிலும் பார்க்க மேலுயர்த்தி கணிக்க முடியாது. அவர்களும் சாதாரண மக்களைப்போல் சரியாகவும் பிழையாகவும் சிந்திக்கின்றார்கள், சரியாகவும் பிழையாகவும் எழுதுகின்றார்கள். எனவே அவர்களுக்கு புனித அந்தஸ்த்தினை கொடுக்க முடியாது. அப்படியொரு உயர்ந்த அந்தஸ்த்தை கொடுக்க முடியும் எப்பொழுதென்றால், மக்கள் நலன் சார்ந்து பேனாவை எடுக்கும் போது மட்டும்தான். சில பத்திரிகையாளர்கள் முதலாளித்துவ நிறுவனம் சார்பாகவும் எழுதுவார்கள், தீவிர இனவாதம், மதவாதம் சார்பாகவும் எழுதுவார்கள்.. ஆனால் இலங்கையைப் பொறுத்த வரை போராட்டகாலங்களில் மக்கள் கைவிடப்பட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பக்கத்தில் தங்களுடைய கருத்து என்று ஒன்றைக் கூறுகின்றார்கள், போராளிகள் ஒரு புறத்தில் ஒரு கருத்தைக் கூறுகிறார்கள் இந்த இடத்தில் பத்திரியாளர்களுடைய கடமை என்ன? ஏன் இவர் பக்கம் சார வேண்டும். இவர் சாரவேண்டி பக்கம் மக்களின் பக்கம். மக்களின் குரல் ஓங்கப்படவில்லை. ஒலிக்கப்படவில்லை, பிரதிநிதித்துவப் படவில்லை ஊடகங்களில். மக்களின்ர விருப்பு வெறுப்பு விருப்புக்களை, ஆசாபாசங்களை, தேவைகளை, வெளிப்படுத்துபவராக ஒரு பத்திரிகையாளர் இருந்தால் அவரை ஒரு சிறந்த பத்திரிகையாளர் என்று கூறுவேன். அந்த வகையில் தராக்கி அந்த இடத்தை பெற தோல்வியடைந்து விட்டார். அது தவிர ஒரு தனிமனிதனை கொலைசெய்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

***கற்சுறா:***

தராக்கி என்ற ஒரு பத்திரிகையாளனின் கொலைக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? கடந்த காலங்களில ஈழவிடுதைப்போராட்டத்தில இயக்கங்களின் அரசியலிற்குள் போய் வந்த ஒராள் சிவராம்.

இலங்கைப் போராட்ட வரலாற்றில் பத்திரிகையாளர் என்று பார்த்தால் சுந்தரத்தில் இருந்து ஆரப்பிக்க வேண்டும். பத்திரிகையாளர்கள் என்று மட்டும் பார்க்காமல் எழுத்துத்துறையுடன் சம்பந்தப்பட்ட கவிதைகள் எழுதின செல்வியில் இருந்து சபாலிங்கம் சின்னபாலா, நடேசன் வரைக்கும் நாங்கள் எத்தனையோ பேரை இழந்திருக்கின்றோம். எதுவாக இருந்தாலும் இந்தப் பத்திரிகையாளர்களின் கொலைகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும். இந்த கண்டனங்களும் தொடர்ச்சியாக நடைபெறும் வேளையில் கொலைகளும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. பத்திரிகையாளர்களின் கொலைகள் கண்டிக்கப்படுவதைப் போல இங்குள்ள பத்திரிகைகளின் எழுத்துக்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கப்பட வேண்டியவை. கனடாவின் தமிழ்ப்பத்திரிகைகள் ஈழவிடுதலைப் போராட்டத்தைப் பற்றி எழுதுகின்ற எழுத்துக்கள் இறுதியில் இந்தக் கொலைக்குத் தான் தள்ளிவிடுகின்றன். கடைசியாக வந்த சுதந்திரன் பேப்பரில் பார்த்த போது, "ரஜீவ்காந்தி இந்திய இராணுவத்தின் ஊடாக இலங்கையில் செய்த கொலைகளுக்கு பழிவாங்கலாகவே ரஜீவ்காந்தியின் கொலை அமைந்தது. இது ஏன் இந்திய மக்களிற்கு விளங்கவில்லை" இந்தக் கருத்து பழிவாங்கலுக்காக கொலை செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வகையில் அமைகின்றது. கொலைக்கு பழி கொலை என்று பத்திரிகைகள் எழுதினால் தராக்கியினுடைய கொலையும் சரி. எங்களுடைய இந்த தமிழ் சமூகத்தில இதே கருத்துக்களைத்தான் இந்தப் பத்திரிகைள் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. சின்னபாலா கொலை செய்யப்படும் போதும், மட்டக்களப்பில் பல இளைஞர்கள் கொல்லப்படும்போதும், இந்தத் தராக்கி பிழையென்று எழுதவில்லை. அகவே அதே விடயம் தான் தராக்கிக்கு திரும்பி வந்திருக்கிறது. நாங்கள் இந்தக் கொலைகளுக்கு முன்னர் இம்மாதிரியான கொலைகளைத் தூண்டும் எழுத்துக்களை கண்டிக்க வேண்டும். "ஒட்டோவாவில் கொட்டம் அடங்கயது" என்று கொட்டை எழுத்தில் எழுதினார்கள். அந்தவகையில் இந்தப் பத்திரிகைகளே கொலைகளைத் தூண்டுகின்றன. இதுபோன்ற சிறிய சிறிய தூண்டுதல்கள் இணைந்துதான் இறுதியில் பெரிய கொலை என்ற பெரிய பிழை ஏற்படுகிறது. இந்தச் சிறிய தூண்டுதல்களைக் கண்டிக்காமல் எங்களுடைய சமூகம் கொலைகளை அங்கிகரிக்கப் பழகிவிட்டது.

**கவிதைகள் எழுதின செல்வியில் இருந்து சபாலிங்கம் சின்னபாலா, நடேசன் வரைக்கும் நாங்கள் எத்தனையோ பேரை இழந்திருக்கின்றோம். எதுவாக இருந்தாலும் இந்தப் பத்திரிகையாளர்களின் கொலைகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும். இந்த கண்டனங்களும் தொடர்ச்சியாக நடைபெறும் வேளையில் கொலைகளும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. பத்திரிகையாளர்களின் கொலைகள் கண்டிக்கப் படுவதைப் போல இங்குள்ள பத்திரிகைகளின் எழுத்துக்களும் கண்டிக்கப்பட வேண்டியவை.**

***மித்திரன்:***

மனித நேயம் கொண்ட எவருக்கும் கொலை என்பது வேதனை தரக்கூடிய ஒன்று. அது கண்டிக்கப்பட வேண்டியதொன்று. சிவராம் போன்றவர்கள் பத்திரிகையாளர்களா? என்ற ஒரு கேள்வி இருக்கின்றது. அல்லது பத்திரிகையாளர் என்ற போர்வையில் புலிகளுக்காக இயங்கியவர்களா? என்ற கேள்வி எனக்கிருக்கு. உதாரணத்திற்கு நடேசனுக்கு முன்னர் நித்தியானந்தம் என்பவர் தான் வீரகேசரியின் நிருபராக இருந்தார். நித்தியானந்தன் இந்திய ஆமி காலத்தில் இறந்தார்.

நித்தியானந்தனை நாங்கள் ஒரு பத்திரிகையாளனாக பார்க்க முடியுமா? அல்லது பாத்திரிகையாளன் என்ற போர்வையில் இருந்த ஆள் என்று பார்க்கப்போறமா? என்ற கேள்வி என்னிட இருக்கு.

சிவராமிடம் நேர்மை என்பது ஒரு மந்திற்குக் கூட இல்லை. எத்தனையோ கொலைகளுக்கு பின்னால் இவர் இருந்திருக்கின்றார். கொழும்பில் நடந்த கொலைகளுக்குப் பின்னாலும் இவர் இருந்திருக்கிறார். பத்திரிகைத் தர்மத்தில் இருந்து ஒரு நடுநிலமையாளராக இவர் ஒருபோதும் இருந்ததில்லை.

**மார்க்கு:**

அண்மையில் நடப்பவைகளைப் பார்க்கின்ற போது ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் யாருக்கு எதிராக ஆயுதங்களைப் பாவிக்க வேண்டும் யாருக்கெதிராக பாவிக்கக் கூடாது என்ற உணர்வைக் காண முடியவில்லை. நான் யாழ்ப்பாணத்தில் இருந்தகாலங்களில் வெளியில் செல்லும் போது சந்திசந்தியாக பிணங்கள் கிடப்பதைக் காணமுடிந்தது. பின்பக்கமாக கைகள் கட்டப்பட்ட நிலையிலும், கடற்கரையோரங்களிலும் கொடூரமான முறையில் கொலைகள் செய்யப்பட்டிருந்தன. ஒரு காலத்தில் அரசஇராணுவத்தினால் நடைபெற்ற கொலைகளிலும் பார்க்க இயக்கங்களினால் நடைபெற்ற கொலைகள் அதிகம். ஒரு இயக்கத்திற்குள்ளேயே தங்களுடைய தோழர்களை அல்லது நண்பர்களை கொலை செய்தது ஏராளம்.

சீனாவில் போராட்டம் நடந்த காலத்தில் சியாங்கோசெக் யப்பானியர்களின் சார்புநிலை எடுத்தார். அவர்களுடைய போராளிகளே அவரைக் கைது செய்து மாவோவிடம் ஒப்படைத்தனர். அந்த நிலையில் மாவோ அவரைக் கொண்றுவிடும் படி கட்டளையிடவில்லை. மாறாக எல்லா சீனர்களும் இணைந்து யப்பானுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடவேண்டும், இதற்கு சியாங்கோசெக் உடன்பட்டால் எங்களுடன் இணைந்து யப்பானுக்கெதிராக போராடெல்லாம் என்று தண்டனையைத் தவிர்த்துக் கொண்டார். அரசியலுக்காகத்தான் துப்பாக்கி, துப்பாக்கிக்காக அரசியல் அல்ல என்பதை உணர்வதற்கு அரசியல் முதிர்ச்சி வேண்டும். அரசியலில் அரசுசார்பு நிலை எடுத்தவர்களே எதிர் நிலையும் எடுத்திருக்கின்றார்கள் பிற்காலத்தில். இதற்குத் தீர்வாக கொலைகள் அமையமுடியாது. பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா போன்ற புத்தி ஜீவிகள் கொல்லப்படுகிறார்கள்.

***தேவன்:***


பத்திரிகையாளர் நல்லது எழுதுகிறார்களோ கெட்டது எழுதுகிறார்களோ என்பது அவசியம் இல்லை. ஆனால் அவர்களுடைய கொலை கண்டிக்கப்படவேண்டிது. நிறுவனப் படுத்தப்பட்ட பயங்கரவாதமும், தேசியவாதமும் எந்தச் செய்தியைப் பரப்புகின்றதோ அதற்கு மாற்றான கருத்துக்கள் பரப்பப்படுவதற்கும் புத்தி ஜீவிகளுக்கும், பத்திரிகையாளருக்கும் அதே உரிமையுண்டு. சிவராமின் படுகொலை இதற்கு ஒரு உதாரணம்.

சிறுவர்களை போராட்டத்தில் திணிக்கும்போதும், கிழக்குப் போராளிகள் ஒடுக்கப்படும் போதும் சிவராம் தனது எழுத்துக்களில் எதையும் கண்டிக்கவில்லை. இப்படியான கொலைகள் தொடரும் பட்சத்தில் பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் பறிக்கப் பட்டு தமிழ்ச் சமூகம் மரணக்குழிக்குள் செல்லும் நிலைதான் ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினம்

**- முருகபூபதி -**



சில நிமிடங்களில் என் உடலை - இதற்குத்தானா "பூதவுடல்" என்கிறார்கள் - எடுத்துச் சென்றுவிடுவார்கள். என்னுடல் இறுதியாத்திரைக்கு தயாராகிறது. தத்தம் கார்களில் இறுதி அஞ்சலி செலுத்த வந்தவர்களும் மலர்வளையங்களுடன் வந்தவர்களும், மகள் மருமகனின் துக்கத்தை பகிர்ந்துகொள்ள வந்தவர்களுமாம் நான் பயணிக்கவிருக்கும் நீண்ட அழகிய காருக்குப் பின்னால் கார்களில் அணிவகுத்து வருவார்கள். எரிவாயுவில் என்னை சாம்பலாக்கிவிடுவார்கள். செம்மணியிலும் கோம்பயனிலும் மரக்குற்றிகளும் விறகுகளும் மண்ணெண்ணையும் செய்யும் கைங்கரியத்தை கண்ணுக்குப் புலப்படாத வாயு இந்த நாட்டில் என்னை தகனமாக்கப்போகிறது. நாட்டுக்கு நாடு - இந்த அக்கினி சங்கமத்தில்தான் எத்தனை வேறுபாடு. காராளசிங்கம், மருமகனிடமும் மரணச்சடங்கிற்கு வந்தவர்களிடமும் சொன்னதையே மீண்டும் மீண்டும் அலுப்புத் தட்டாமல் வாய் ஓயாமல் சொல்லிகொண்டிருக்கிறார். அப்படிச் சொல்லிக்கொண்டிருபதன் மூலம் பெருமிதம் அடைகிறார் போலும். காராளசிங்கம் பெருமைக்குரிய இந்த மாநிலப் பிரமுகர்தான். இங்குள்ள சில அமைப்புகளின் ஸ்தாபகர்தான். இங்கு புலம்பெயர்ந்த எம்மவர்களில் சிலருக்கு அவர்தான் "தொட்டப்பா".

"முந்தநாள்... நான்தான் ஐஸே... இவரைக் கூட்டி வந்தனான். என்ர பழைய சிநேகிதன். ஊரில் வாத்தியாரா இருந்தவர். மகனை களத்துக்கு அனுப்பி தேசப்பற்றாளர். முந்தநாள் என்ர மகன்ர வீட்டில டின்னர் எடுத்தவர். பாரும் ஐஸே... இதுதான் விதி. சும்மா சொல்லப்படாது... வாத்தியாருக்கு நல்ல சாவு. நேர்ஸிங் ஹோம் வழிய இருந்து கஷ்டப்படாமல் "டப்"பென்று போய்விட்டார். எல்லாம் அவ்வளவுதான். சாவதற்கு முந்தி மகள் - மருமகன் பேரப்பிள்ளைகளை இங்க வந்து பார்த்திட்டார். இங்க வந்துதான் சாக வேணும்மென்று விதி. பாவம். ஊரில்யெண்டால் இதப்போல பல மடங்கு சனம் வந்திருக்கும். எத்தனைபேருக்குப் படிப்பிச்சவர் தெரியுமா..." மருமகன் கிருத்தியப் பணிகளை கவனிக்க உள்ளே வந்துவிட காராளச-ிங்கம் மற்றவர்களிடம் தொடர்ந்துகொண்டிருக்கிறார்.

"முந்தநாள்... நான்தான் ஐஸே..." அவருக்குப் பக்கத்துணையாக மேலும் சிலர் சுடலை ஞானம் பேசுகிறார்கள்.

"இங்கே வந்தவர்... ஒரு "மெடிக்கல் செக்கப்" செய்திருக்கலாம்." ஒருவர் சொன்னார்.

"என்ர மகன் சொன்னவன் ஐஸே... தன்ர கிளினிக்குக்கு வரச் சொன்னவனாம்" காராளசிங்கத்தின் ஒரு மகன் டொக்டர்.

"இங்க வியர்க்கிறது இல்லை கால்கள் நடக்கிறது இல்லை பால் - பாண் வாங்கிறதுக்கு காரைத்தானே எடுக்கிறம்."

"டென்ஷன் ஐஸே... டென்ஷன்... கடிதம் வருதோ இல்லையோ... பில்லுகள் வந்து கொண்டெ இருக்கும். ஒன்று முடிய மற்றது... ஒன்றைக் கட்டிப்போட்டு வந்தா... அடுத்தது தபால் பெட்டியிக்க காத்துக்கொண்டிருக்கும்."

"பிள்ளைகள்... அடுத்த தலையிடி... சொல்லு கேட்குதுகள் இல்லை... சோதினை வருது படி எண்டால்... 'நங்கள்தானே எழுதப்போகிறோம்... ஏன் டென்ஷனாகிறீங்கள்'- எண்டு கேக்குதுகள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எனக்கு இப்ப அந்த டென்ஷன்கள் இல்லை ஐஸே... என்ர நாலும் படிப்பில கரைசேர்ந்திட்டுதுகள்... மூத்த இரண்டும் மகனும் முடித்து... பேரப்பிள்ளைகளையும் தந்திட்டான்கள். அடுத்த இரண்டுபேரும் டிகிரி முடித்து வேலை தேடிகினம்.”- காராளசிங்கம் பெருமையுடன் சொல்கிறார்.

“தனக்கு நான்கு புலிக்குட்டிகள்”- என்று அன்று இரவு விருந்து அவர் மகன் வீட்டில் தொடங்க முன்பு என்னிடம் சொன்னவர். நானோ... எனக்கிருந்த ஒரே வாரிசான மகன் கபிலனை மணலாற்றில் பறிகொடுத்துவிட்டு பரிதவிச்சுப்போனவன். மாவீரர் தினத்தின்போது... என்னை மேடைக்கு அழைத்து “ஈகைச்சுடர்” ஏற்றவைத்தவர் காராளசிங்கம். ஏனென்றா கேட்கிறீர்கள். நானும் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். என் மகன் களத்தில் மடிந்து வித்தாகிபோனவன். மணலாற்றில் மகனை இழந்து ஒருவருடம் பூர்த்தியாக முன்பே ராஜேஸை என் மனைவி ராஜேஸ்வரியையும் புற்றுநோய்க்குப் பறிகொடுத்துவிட்டேன். இரண்டு இழப்புகளின் போதும் இங்கிருந்த மகள் சுகிர்தாவுக்கு வரமுடியவில்லை. மகன் வித்தானதால் புதையுண்டான். மனவி இறந்ததனால் எரியுண்டாள். மகன் வித்தான காலத்தில் சுகிர்தா நிறைமாத கர்ப்பிணி, மனைவி எரியுண்ட காலத்தில் வரமுடியாதவிதத்தில் “மண்ணில” யுத்த நெருக்கடி. சுகிர்தாவும் மருமகனும் என்னை ஸ்பொன்ஸர் செய்து அழைத்து வந்து சேர்வதற்கு இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. இனி - எனது ஓய்வூதியம் எம்மை ஆண்ட அரசுக்குத்தான்.

> ஆயிரம் ஆயிரமாக வித்தாகிப் போனவர்கள் அனைவரையும் இடம் பெறச் செய்வது சிரம சாத்தியம் தான். முன்பே தெரிந்திருப்பின்... ஓ.எல். பரீட்சைக்கு அடையாள அட்டைக்கு எடுத்திருந்த அவனுடைய படப்பிரதியை கொடுத்திருக்கலாம்.

மகன் கபிலன் கனவுகண்ட
“ஆண்டபரம்பரை அரசு”- கனவாகவே அவனுடன் மடிந்துவிட்டது

அண்டைக்கு வீட்டோட இருந்திருக்கலாம். பேரப்பிள்ளையுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்திருக்கலாம். எனக்கு மாரடைப்பு வந்திருக்காது... அன்று வீட்டோடு இருந்திருந்தால்... மருமகனுக்கு அநாவசியச் செலவுகள் வந்திருக்காது. இங்கே மகள் வீட்டு முற்றத்தில் இத்தனைபேர் கால்கடுக்க நிற்கமாட்டார்கள். வீதியோரம் இத்தனை கார்கள் அணிவகுத்து தரிதிருக்காது. நல்ல மருமகன். முகம் கோணாமல் சேமிப்பிலுந்தும் மாஸ்டர் - விஸா- அட்டைகளிலிருந்தும் எடுத்து செலவு செய்கிறார். பாவம் மருமகன். இனி- கரைந்துபோன செலவுகளை ஈடுகட்ட வரும் நாட்களில் அவர் இரண்டுவேலைகள் செய்யலாம். பகுதிநேர வேலைகள் தேடலாம்.

இயந்திரமாக ஓடி ஓடி உழைக்கலாம். மருமகனின் சிநேகிதன் ஒருவனின் பிள்ளையின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில்தான் நீண்ட காலத்துக்குப் பின்பு காராளசிங்கத்தை சந்தித்தேன். யுத்தகால இடப்பபெயர்வில் அவலம் எனது முகத்தில் எவ்வாறு படிந்திருக்கிறதோ தெரியவில்லை. ஆனால்- புலப்பெயர்வின் அவலம் எவ்வறிந்த போதிலும் தளுமையும் செழுமையும் காராளசிங்கத்தின் முகத்தில் ஆரோக்கியமான செம்மையை பதிந்திருக்கிறது. தூரத்தில் நின்றவறே என்னை உற்று நோக்கி அடையாளம் கண்ட அவரே என்னை கைகுலுக்கிக் கட்டையணைத்தார். அவரது இடது கரம் எனது தோளைப்பற்றியிருக்க - வலது கரத்தில் மதுக்கிண்ணம்.

“வாத்தியார்... உங்களுக்கு பழக்கம் இல்லை என்ன...”

“ஞாபகம் இருந்தால் சரி”- என்றேன்.

“என்ன அப்படிச் சொல்லீட்டீர்... அந்த நாள் ஞாபகங்களை மறக்கமுடிமே... ஏதோ வந்திட்டோம்... இந்த குளிர்காலத்தில இதில கொஞ்சம் எடுத்தால்தான் இதமான தூக்கம் வரும்”

பங்கருக்குள் களிந்த உறக்கமில்லாத இராத்திரிகள் எனது நினைவுக்கு வந்தன. அந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பிறந்தநாளுக்குரிய அக்குழந்தை உறக்கத்திற்காக அழுதது. வாழ்த்த வந்தவர்கள் - கேக் உண்டபின் ஊர்ப்புதினம் பேசிக்கொண்டிருந்தார்கள். இராப்போசனம் ஆரம்பிக்கும் வரையில்... மிக்ஷரையும் குளிர்பானத்தையும் சமிபாடக்கிக் கொண்டிருந்தார்கள். ஒதுக்குபுறமான அறையொன்றில் ஆண்களில் சிலர் மதுப்புட்டிகள்- கண்ணாடிக் கிண்ணங்கள் சகிதம் ஊர்- உலக அரசியல் பேசிக்கொண்டிருந்தார்கள். காராளசிங்கத்திடம்- மணலாற்றில் மகன் மடிந்தது - பின்பு மனைவி இறந்தது - ஊர்விட்டு ஊர் இடம் பெயர்ந்தது - குடியிருந்த வீடு, பாதுகாப்பு வலயத்துள் பாழடைந்துபோனது - மகள் தொடர்புகொள்ள பட்ட சிரமங்கள்... யாவும் சொன்னபோது மிகுந்த அனுதாபத்துடன் கேட்டு ஆறுதல் சொன்னார். மருமகனிடம் முகவரி பெற்று ஒருநாள் மனைவியுடனும் இளையமகனுடனும் வந்து பழைய நட்பைப் புதுப்பித்துகொண்டார். “ஒரு நாளைக்கு எங்கட வீட்டுக்கு வாரும் வாத்தியார்...” நான் முன்பு செய்த தொழிலை வைத்து என்னை “வாத்தியார்” - எனச் செல்லமாக அழைத்தார்.

காராளசிங்கத்தாரை நான் எப்படி செல்லமாக அழைப்பது என்பது தெரியவில்லை... மறந்து விட்டது. நாட்டை விட்டு அவர் புறப்பட்டு இருபது வருடங்களுக்கு மேலிருக்கும்.
இங்கே- பல அமைப்புகளுக்கு ஸ்தாபகராகவும் தமிழர்கள் மத்தியில் பிரமுகராகவும் இருக்கும் அவரை “தலைவரே”- என்று அழைக்கலாம்தான். ஆனால் நான் ஏனோ அவரை அப்படி அழைக்கவில்லை. அவர் வாரம் ஒரு வீட்டில் இருப்பவர். கூட்டங்கள் - சந்திப்புகளெண்டு சோலிகள் அதிகம். வாரவிடுமுறை நாட்களிலும் எங்காவது அலைந்துகொண்டிருப்பார். என்னை அவரிடம் அழைத்துச் செல்ல பொருத்தமான நேரம் மருகனுக்கு கிடைக்கவில்லை. அவரது முகவரிக்கு - ரயிலில் போய் அலைந்து இடம் தெரியாமல் நான் தடுமாறிப் போவேனென்று மகளும் அனுப்பத் தயங்கினாள். மாவீரர் தின விழாவன்று இரவுதான் அவர் வீட்டுக்க - இல்லை - அவரது மூத்தமகன் வீட்டுக்கு போவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவும் அவரின் வற்புறுத்தலினால் நேர்ந்த சந்தர்ப்பம். மருமகனுக்கு - அவர் வேலைசெய்யும் தொழிற்சாலையில் உடன் பணியாற்றும் ஒருவரின் மகளின் திருமணத்திற்கு போகவேண்டியிருந்ததனால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராளசிங்கம் மாவீரர் தின விழாவுக்கு - மகள் வீட்டுப் பாதையால் செல்லும் ஒரு பெடியனுக்கு தகவல் சொல்லி - என்னையும் அவனுடன் வரச் செய்திருந்தார். வரிகையில் அமரச் செய்தார். மலர் அஞ்சலிகளுடன் ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்ச்சியும் நடந்தது. மாவீரர் குடும்பத்தினர் ஈகைச்சுடர் ஏற்ற அழைக்கப்பட்ட போது காராளசிங்கமே என்னை மேடைக்கு அழைத்து சென்றார். அங்கே நின்ற சிலருக்கு என்னை அறிமுகப்படுத்தினார். கமராக்கள் மின்னொளி பாய்ச்சின. வீடியோ கெமரா - டிஜிட்டல் கெமரா போன்றவற்றிலும் நான் ஈகைச்சுடர் ஏற்றும் காட்சி பதிவாகியிருக்கலாம். பார்க்கத் தான் கிடைக்கவில்லை. இடைவேளையின் போது மகன் கபிலனின் படத்தையும் தேடினேன். கண்ணில் தென்படவில்லை. ஆயிரம் ஆயிரமாக வித்தாகிப் போனவர்கள் அனைவரையும் இடம் பெறச் செய்வது சிரம சாத்தியம் தான். முன்பே தெரிந்திருப்பின். . . ஓ.எல். பரீட்சைக்கு அடையாள அட்டைக்கு எடுத்திருந்த அவனுடைய படப்பிரதியை கொடுத்திருக்கலாம். அது ஒன்று தான் அவனது நினைவுக்கு எஞ்சியிருப்பது.

பார்ஸல் பத்திரமாக இருக்கிறது. மருமகனிடம் கொடுத்து பெருப்பித்து மகள் வீட்டில் மாட்டியிருக்கலாம். மகள் கேட்டாள்.. மருமகனுக்கு அதற்கான நேர அவகாசம் கிடைக்காதமையால் கொடுக்க மறந்து விட்டேன். நான் இறந்து விட்டபடியால், இனி எனது பார்ஸை எடுத்து பார்க்கும் மகளும் மருமகனும் மகன் கபிலன் படத்தையும் -பார்ஸ் போட்டில் இருக்கும் (இனி அது யாருக்கும் அவசியமில்லை தான்) எனது படத்தையும் பெருப்பித்து வீட்டுச் சுவரில் மாட்டுவார்கள். மாவீரர்கள் மடிந்து போன அந்த இளம் துளிர்களை படங்களில் பார்த்த போது நெஞ்சு நெகிழ்ந்து போனது.

நாசமாய் போன 'புரிந்துணர்வு' எப்போதோ வந்திருக்கலாம். இங்கே பலர் படமாகியிருக்க மாட்டார்கள். புதை குழிகளும் குறைந்திருக்கும்.

நாசமாய் போன "புரிந்துணர்வு" எப்போதோ வந்திருக்கலாம். இங்கே பலர் படமாகியிருக்க மாட்டார்கள். புதை குழிகளும் குறைந்திருக்கும். மகன் கபிலனும் வாழ்ந்திருக்க கூடும். பேரழிவுகளுக்குப் பிறகு தான் சுடலை ஞானம் வரும்போலும். மாவீரர் தினவிழா முடிந்தாலும் என்னை காரில் அழைத்து வந்த அந்தப் பெடியனைத் தேடினேன்.

அவன் மண்டபத்துள் கதிரைகள் அடுக்கம் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அவன் தொண்டர் போலும். காராளசிங்கம் அருகில் வந்து "வாத்தியார்" வந்ததிற்கு நன்றி. . நாங்கள் வருடா வருடம் நடக்கிற விழா... சனத்தைப் பாத்தியளே. இரண்டாயிரம் தாண்டியிருக்கும். என்ர பேச்சு எப்படி இருந்தது. நான் எழுதித்தான் பேசுறனான். . இங்கத்தைய 'வெள்ளை' யளும் வந்தத னால் இங்கிலிஸிலும் பேசச் சொன்ன வையள். அது தான் சில நிமிடங்கள் கூடுதலாக எடுத்துப் போட்டன். எழுதிப் பேசுறதனால் ஒரு நன்மை இருக்கு வாத்தியார். அது தான் டைமிங். இதத்தான் மற்றவையளுக்கும் சொல்றனான். நாங்கள் டைமுக்குத் தொடங்கி டைமுக்கு முடிக்க வேண்டும்."

பிறந்த நாள் கொண்டாட்டங்கள் விதிவிலக்கானவையா? என கேட்க நினைத்தேன் .. ஆனால் ஏனோ கேட்கவில்லை. "அந்தப் பெடியனுக்கு ஒருக்கா சொல்லுறியளே நான் வீட்டை போக வேணும்" என்றேன்.

"இல்லை வாத்தியார்.. அவன் பெடியனுக்கு இங்கே நிறைய வேலையிருக்கு. . எல்லாம் அடுக்கு பண்ணி - மண்பத்தை சுத்தப்படுத்திக் கொடுக்க வேண்டும் . . நீங்கள் எங்க ளோட வரலாம்... இன்றைக்கு உங்களுக்கு எங்கட மூத்த மகன் வீட்டில சாப்பாடு, பிறகு மகன் கொண்டு போய் விடுவான். காராளசிங்கம் வாக்கு தவறாமல் அழைத்துச் சென்றார். அவரது மகன் வீட்டுக்குச் செல்லும் போது தான் ஒன்றல்ல மூன்று வீடுகள் அவரது குடும்பத்திற்கு இங்கே இருப்பது தெரிய வந்தது. அந்த அழகான பிரமாண்டமான வீட்டுக்குள் சென்றதும்- சுவரில் படமாகத்தொங்கிய புதல்வர்களை அறிமுகப்படுத்தினார்.

நான்கு புதல்வர்களும் பட்டதாரிகளாகி பட்டம் பெற்ற தினத்தன்று எடுக்கப்பட்ட படங்களில் கம்பீரமாகக் காட்சி அளித்தார்கள். பல்கலைக்கழகச் சான்றிதழ்கள் - மருத்துவ பொறியியல் கல்லூரி சான்றிதழ்களும் சுவர்களை அலங்கரித்தன. கல்விக்காக - விளையாட்டுக்காக புதல்வர்கள் பெற்ற கேடயங்கள் - விருதுகள் பிரத்தியேகமான கண்ணாடி அலுமாரியொன்றில் அலங்காரக் காட்சி அளித்தன.

"இவன். . செல்வகுமார். .மூத்தவன் இஞ்சினியர்.. இது சிவகுமார். . டொக்டர்.. இவன் மூன்றாவது ராஜ்குமார்.. லோயரா பிரக்டிஸ் செய்யிறான்.. இவன் கடைக்குட்டி சந்திரகுமார். . போன வருசம் டிகிரி முடிச்சிட்டான்.. எக்கவுண்டன்ஸி செய்தவன். சொந்தமாக "ஓடிட" ∴பேர்ம் தொடங்கிற யோசனையில் இருக்கிறான். . இனித்தான் இவனுக்கு கலியாணம் பேச வேணும்." பட்டதாரி உடை - தொப்பிகள் சகிதம் அந்த நான்கு புத்திரர்களும் என்னைப்பார்த்து முறவலிப்பதாக உணரந்தேன். காராள சிங்கத்தார் கொடுத்து வைத்தவர். போன பிறவியில் நல்ல புண்ணியம் செய்திருக்கிறார். நான்கு புலிக் குட்டிகளுக்கு தந்தையாகப் பெருமிதத்துடன் அவர்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார். நானும் இவரைப் போன்று எப்போதோ இங்கே வந்திருந்தால். . கபிலனும் இப்படி பட்டதாரி உடை தொப்பியுடன் காட்சி அளித்திருப்பான். பொங்கி வந்த பெருமூச்சை - நாகரீகம் கருதி அடக்கிக் கொண்டேன். பலமணிநேரங்களின் பின்பு எனக்கு மூச்சே அடங்கி விட்டது நித்திரையின் போது. காராளசிங்கத்தார் மகனுடைய வீட்டைச் சுற்றி காண்பித்தார்.

"மற்ற மகன்மார் எங்கே?" எனக்கேட்டேன்.

"பொறுங்கோ வாத்தியார்... ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வீட்டில. இன்றைக்கு வருவினம். மாதத்துக்கு ஒரு தடவை எங்களுக்குள்ள ஒரு "கெட்டுகெதர்" ஒவ்வொரு மகன்மார் வீட்டிலையும்நடக்கும். இன்றைக்கு இங்கே... மூத்தவண்ட வீட்டில.. பகல்தான் நடக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிஞ்ச பிறகு. . இங்கே மூத்தவண்ட வீட்டில சாப்பாடு. அது தான் உங்களையும் வரச் செய்து அழைச்சனான். பால்ய கால சினேகிதமல்லோ"

தொலைபேசி ஒலித்தது. மருமகள் எடுத்துப்பேசினாள். அவள், சமையலைப்பக்கம் திரும்புகையில் ஹோல் பக்கம் வந்து, "மாமா... சந்திரன் தான். இடியப்பக் கடையில நிற்கிறாராம். ஆரை மணித்தியாலத்தில் வாராராம். சொல்லச் சொன்னவர்."

சற்று வேளையில், அழைப்பு மணி ஒலித்தது. காராளசிங்கத்தாரின் மனைவி கதவைத் திறந்தா. ஒரு குடும்பம் வந்தது.

"வா.. வா.. இது தான் வாத்தியார் சிவகுமார். . டொக்டர். ." காராளசிங்கம் அறிமுகப்படுத்தியதும், அந்த அழகான சிவந்த நெடிதுயரந்தவன் அருகே வந்து எனது கரம் பற்றிக் குலுக்கினான். அவனது மகள் - ஐந்து வயதிருக்கும் "கிரெண்பா. ." என்று உற்சாகமாக கூவிக்கொண்டு ஓடி வந்து காராளசிங்கத்தார் மடியில் தொப்பென குந்தினாள். அவர் பேத்தியை அணைத்து உச்சந்தலையில் முத்தமிட்டார். உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்த போது லோயரும் எக்கவுண்டனும் வந்து விட்டனர்.

"ஒன்றாகத்தான் வாரியளோ" எனக்கேட்ட காராளசிங்கம் - அவர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தினார். ஊர் புதினம் - பழைய மாணவர் சங்கம் - கிரிக்கட் - நாட்டுப்பிரச்சனை - சதாம்குஸசைன் - ஓசாமா பின்லாடன் - சேது சமுத்திரம் - கிழக்கு மாகாண கொலைகள் - என்று உரையாடல் எங்கெல்லாமோ திசை திரும்பியது. காராளசிங்கத்தின் மனைவியும் மருமகள்மாரும் சமையலறையிருந்து உணவுகள் நிரம்பிய பாத்திரங்களை நீண்ட சாப்பாட்டு மேசைக்கு எடுத்து வந்தனர். இடியப்பம் வாங்கி வந்த, எக்கவுண்டன் சந்திரன் அது நிரம்பிய பெட்டியை தூக்கி வந்தான். பேரப்பிள்ளைகள் ஒரு விசாலமான அறையிலிருந்து கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தன. ஒரு மூலையில் தொலைக்காட்சியில் ஒரு பாட்டுக் கெஸட்டிலிருந்து அரைகுறை ஆடைகளுடன் தமிழ்ப்பட குரூப் டான்ஸ் கேட்பாரின்றி ஓடிக்கொண்டிருந்தது. அந்த வீட்டிலே என்னை மிகவும் வசீகரித்தது. சுவரிலிருந்த இஞ்சினியரும் - டொக்டரும் - லோயரும் எக்கவுண்டனும்தான். கெட்டிக்கார மக்கள் படித்து முன்னேறி விட்டார்கள். மாவீரர் தின விழா படங்களில் காட்சியளித்த இளந்துளிர்கள் மண்ணிலே வித்தாகிப் போனார்கள். கபிலனும் அதில் ஒருவன். உணவு உள்ளே இறங்க மறுத்தது. அடிக்கடி தண்ணீர் குடித்தேன். விதம் விதமான அறுசுவை உணவும் மேசையில் "என்னை எடுத்து விழுங்கு" எனக்கேட்குமாப்போல் காட்சியளித்தன. பேருக்குச் சாப்பிட்டன்

"Uncle உங்களுக்கு தாகம் அதிகமா? ஒரு செக்கப் செய்தால் நல்லது" என்றான் டொக்டர் மகன்.

"டயப்பிட்ரிஸ் இருந்தாலும் தாகம் வரும்... என்ன... தம்பி" என்றான் தாய். "கொலஸ்ரோல் இருக்குதா வாத்தியார்" - எனக் கேட்டார் காராளசிங்கம். "தெரியவில்லை"- என்றேன். "ருபெடந ஒரு நாளைக்கு என்ர கிளினிக்குக்கு வாங்க. . முழுசா செக்கப் செய்திடுவோம்" - என்ற டொக்டர் மகன் - விருந்து முடிந்து விடைபெறும் பொழுது தனது விசிட்டிங் கார்ட்டை தந்தான்.

காராளசிங்கத்தின் இஞ்சினியர் மகனே என்னை - மகள் வீட்டுக்கு கொண்டு வந்து விட்டு விடைபெற்றான். இறப்பதற்கு முன்பு இறுதியாக நான் பயணித்தது அந்த டீஆறு காரில் தான். இப்போது சடலமாக - நீண்ட அழகான வெள்ளைக் கார் ஒன்றில் பயணமாகின்றேன்.அன்று வீடு திரும்பிய இரவு - மகன் கபிலன் கனவிலே வந்தான். எனது நெஞ்சை நிறைத்தான். தன்னிடம் வருமாறு அழைத்தான். களத்திலே சயனைட் குப்பியும் - கரத்தில் ஏ.கே. 47 - கிரனைட்டும் கொண்டு திரிந்தவன். . இப்போது எதுவுமே இல்லாமல் காற்றுப்போல் அலைந்துலைகிறான். இங்கே வந்திருந்தால். . ஒரு டொக்டராகவோ - இஞ்சினியராகவோ - லோயராகவோ - அக்கவுண்டனாகவோ வராது போயிரிந்தாலும் - எனக்கு அந்திம காலத்தில் துணையாக இருந்து - இறந்த பின்பு கொள்ளி வைப்பதற்காவது உயிரோடு இருந்திருப்பான். இங்கே கொள்ளியும் வைதப்பதில்லையாம். ஊதுவத்தியைத்தானாம் கொளுத்தி விட்டு சவப்பெட்டியில் தலை இருக்கும் பக்கத்தில் வைத்து விட்டு ஒரு பொத்தானை அழுத்துவார்களாம். பெட்டி கீழே இறங்கி அப்படியே எரிவாயு உமிழும் பகுதிக்குப் போய்விடுமாம். பிறகு என்ன. ..? சாம்பல் தான். மயான மண்டபத்தில மருமகன் ஏற்கனவே கேட்டுக்கொண்டதற்கு இணங்க காராளசிங்கமே இறுதி அஞ்சலி உரையை நிகழ்த்தினார். இங்கும் அவர் முதலில் தமிழிலும் பின்பு ஆங்கிலத்திலும் தாம் கைப்பட எழுதியதையே வாசித்து நேரத்தை மிச்சப்படுத்தினார். "எனது பால்ய கால சினேகிதன். . ஊரிலே தமிழ் உபாத்தியாயராகப் பல பாடசாலைகளில் பணியாற்றியவர். தமிழ் கற்பிப்பதை ஒரு தொழிலாகக் கொள்ளாமல் கடமையாகக் கொண்டியங்கியவர். தமிழ் தேசாபிமானம் மிக்கவர். தன்னை தமிழ் மொழிக்காக அர்ப்பணித்தவர் - தனது ஒரே மகனை - தமிழ் மண்ணுக்காக அர்ப்பணித்தவர். மகனையும் - மனைவியையும் தாய் நாட்டிலே இழந்து விட்டு வந்து தமது இன்னுயிரை இந்நிய நாடொன்றில் நீத்துள்ளார். இது தான் விதி என்பது . . பகவத் கீதை சொன்ன வாறு - கடமையைச் செய்து பலனை எதிர்பாராத மகத்தான மனிதர் தான் இந்த அன்பர். இனி எங்களிடம் எஞ்சியிருக்கப் போவது அவரது நினைவுகள் தான். அவரது மகளுக்கும் மருமகனுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் - எனது குடும்பத்தினர் சார்பிலும் - இங்கிருக்கின்ற உங்கள் அனைவரது சார்பிலும் - சிரம் தாழ்த்தி எனது அஞ்சலியை செலுத்திக் கொள்கிறேன் ஒரு முக்கிய குறிப்பு: இந்த துக்க நிகழ்வில் கலந்து கொண்டுள்ள நீங்கள் அனைவரும் - இறந்தவரின் மருமகன் இல்லத்தில் இடம் பெறும் - அமரர் நினைவு விருந்தில் கலந்து கொள்ளவேண்டும் - எனவும் அழைக்கிறேன்." காராளசிங்கம் உட்பட அனைவரும் அந்த விருந்துக்க செல்ல தயாராகினார்கள். நான் ஏற்கனவே சென்று விட்ட என் மகன் கபிலனையும் மனைவி ராஜேஸையும் தேடிச்செல்கிறேன். . .

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைன் மரத்தில் பனங்காய்.

**(ஒரு பயண அனுபவம்)**

மிக நீண்ட காலங்களுக்கு முன்பு, தமிழக பத்திரிகைகளில் தொடராக வரும் பயணக் கட்டுரைகளை படித்து ஆச்சரியமான ஆச்சரியம் பட்டு, அவ்வூர் பற்றிய அறியாப் புதினங்களை தெரிந்து பெருமைப்படுகிற அப்பாவி சுபாவமொன்று நம்மிடம் காணப்பட்டதாக அந்தக்கால வாசகர்கள் சொல்லக் கேட்டதுண்டு.
உலகின் பல நாடுகளையும் அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் கலை பண்பாட்டு நாகரிகங்களையும் தெரிந்து கொண்ட நம் மக்கள், இலங்கை பற்றிய பயணக்கட்டுரை படித்த பின்பு ஆச்சரியத்தின் உச்சநிலை கடந்து இரு வேறு கருத்துக்களை இரு வேறு பகுதியினர் பேசிக்கொண்டனர்.
இவ்வளவு காலமும் பயணக்கட்டுரையில படிச்சதெல்லாம் பொய்.

இன்னொரு நாட்டுக்காரன் வந்து, பார்த்து சொன்ன பிறகுதான் நம்ம ஊரிலை இவ்வளவு விசயம் இருக்கென்பதே நமக்கு தெரிகிறது பாரேன்.
இதன் தொடர்ச்சியாய் நம்மவர்களும் ஆர்வம் மிகுதியாய்- பண்டிபிரிச்சான் பயணக்கட்டுரை, மலையக பயணத்தொடர், மட்டக்களப்பு பயண அனுபவம், போன்ற யாழ்ப்பாண மக்கள் அறிந்திராத இடங்களுக்கு சென்று அட்டை ஒட்டுகிற, பாயில் ஒட்டுகிற, மாந்திரிகதந்திரங்களையெல்லாம் கண்டறிந்தும் கேட்டறிந்தும் வார மற்றும் தினசரிகளிலெல்லாம் எழுதியின்புற்றிருக்கிறார்கள். பயணக் கட்டுரை எழுதாத ஈழத்து படைப்பாளியே கிடையாது எனலாம்.

நமக்கு கூட கெஞ்ச நாளாக ஒரே அரிப்பு.. கட்டகாமத்து கிழவி கதிர்காமம் பார்காமல் செத்தது போன்று நாமக்கும் ஆகி விடுமோ என்று. முதலிலை பயணம்போக வேண்டும். பின்பு பயணக்கட்டுரை எழுத வேண்டும்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு தமிழகப் பயணம் போய் வந்தாகி விட்டது. சரி..! அனுபவம்?

சினேகாவை பார்க்கப் போனதோ அல்லது மார்புக்கு மத்தியில் விழுகிற நீர் வீழ்ச்சி பற்றி கேட்டதும், அப்படி ஒரு நீர்வீழ்சி இருக்கிறதா என்ன? என்று அவர் என்னிடம் ஆச்சரியப்பட்டு கேட்டது பற்றியும் எழுதினால் எடுபடும்தான். இருந்தாலும் நான் பேரதிர்ச்சிக்குள்ளான சம்பவம் ஒன்றை சொல்லலாம் போலிருக் கிறது..

புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் ஆதர்சபுருசன் அவர். இங்கிருந்து செல்கின்ற எல்லா எழுத்தாளர்களும் அவரைக்காணாது மீண்ட தில்லையெனலாம். (ஆனாலும் அவரின்னமும் கனடாவுக்கு விருது வாங்க வரவில்லையென்பது குறிப்பிடதக்கது)
அவரை ஒரு தடவையேனும் வாழ்வில் சந்திக்கவேண்டும் எனும் பேராவலுடன் அவர் வீடு தேடிச்சென்றேன். அன்பாக வரவேற்றார், நன்றாக கதைத்தார், கனடா பற்றிய தகவல்கள், வாழ்வியல் பற்றியும் கேட்டறிந்தார். அத்தோடு நான் பதில் சொல்ல முடியாத சில கேள்விகளும் கேட்டார்.

கனடாத்தமிழர்கள் சாதியத்தை ஒழித்து விட்டார்களாமே..? வெளியில ஒண்ணுக்கிருந்தா அப்படியே உறைஞ்சி டுமாமே.. அப்புறம் அத முறிச்சித்தானமே விழுத் தணும்..?

நான் ஆச்சரியத்தின் விளிம்பு நிலை கடந்தேன். இன்னொரு நாட்டுக்காறன் சொல்லி நாம நம்ம நாட்டை தெரிஞ்சிக்க வேண்டி இருக்கு பாரேன் என மனசுக்குள் நினைத்துக்கொண்டு எள்ளலாய் துணுக்குற்றேன். அவருக்கு பதிலொன்றும் பகிராது உங்களுடைய இரண்டாவது கேள்வியில் இருக்கும் எல்லை தாண்டிய அதீத கற்பனை போன்றே முதலாம் கேள்வியும் என்றேன்.

அவரென்னை நம்ப மறுத்தார். ஏப்படி நான் புரியவைப்பது, எங்கள் பண்பாட்டு விழுமியங்களை?

காலை எழுந்தவுடன் எனக்கு யாழ்பாண முறைப்படி தயாரிக்கப் பட்டு,ணள யாழ்ப்பாணத்திலை இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோப்பித்துளில் ஒரு கோப்பி குடிச்சால்தான் அன்றைய பொழுது ஒழுங்காக இருக்கிறது.

யாழ்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மிளகாய்த்துள் தவிர்த்து நாங்கள் வேறெந்த துளிலும் குழம்பு வைத்ததில்லை.

இடியப்பம், சம்பல், சொதி, கிழங்குரொட்டி, மாலுபண், ரோஸ்பாண் எல்லாமே யாழ்பாண முறைப்படிதான்.

கோயில் என்று கும்பிடப்போனால், நல்லூர் கந்தசாமி கோயில் - கனடா. நயினை நாகபூனனி அம்மன்-ரொரான்டோ. மயிலிடட்டி வரசித்தி வினாயகர் - மிசிசாக்கா. என்று யாழ்பாண ஆகமப்படியே..

உதயன், சுதந்திரன், ஈழநாடு என்று யாழ்பணத்தில் செய்திகள் தந்து தேசிய உணர்வூட்டிய அதே பத்திரிக்கை(?)கள்தான் கனடா விலும் செய்திகள் தருகின்றன. தேசிய உணர்வூட்டுகின்றன.

(மணிக்குரல் விளம்பரசேவை மட்டுமே யாழ்பாணத்தில் இருந்ததால் வானொலிக்காரர்கள்
பாவம்.)

போதாக்குறைக்கு, இப்போது யாழ்நகரிலிருந்து சாய்மனை இருக்கைகளும் இறக்குமதி செய்கிறார்களாம்.

இப்படி எல்லாமே ஜப்னா ஸ்டையில்தான்! ஆனால், யாழ்பாண முறைப்படி செய்யப்பட்ட சாதியை மட்டும் இவங்க இறக்குமதி செய்யல்லியாம்.

கேட்பவன் கேனயனாக இருந்தால் - சொல்பவன் பைன் மரத்திலை பனங்காய் காய்க்கிதென்றுதானே சொல்வான்.

**- வஸ்கொட'காம -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலிவதம்

தடுமாறி - பின்
பாதி வழி வந்து
சக்கரத்தில்
நசுங்கிச்சாகும்
அணில்ப் பிள்ளை -
ஏழுநாள் ஆன பின்னும்
என் உறக்கம் உண்ணும்

தொண்டையில்
சிக்கிய முள்
தூண்டிலில்
மாட்டிய மீனின்
வலியே எனக்கு
உறைக்கச் செய்கிறது.

தக்காளிப்பழம்
நறுக்கையில்
கசியும் சாறு -
செடி நட தோண்டிய குழியில்
துண்டாகித் துடிக்கும்
மண்புழுவின் துயரம்
ஊனாய் என்னுள் வடிகிறது.

பலிவதத்தில்
கொலையாகி
வெருகல் ஆற்றோரம்
நான் பெற்ற பிள்ளை
வீழ்ந்து கிடக்கையில்
உனக்கு மட்டும் எப்படி ஐயா
வீரம் பொங்குகிறது.

- சக்கரவர்த்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோசா பார்க்ஸ் (1913-2005)

ஆபிரிக்க-அமெரிக்க சமூக உரிமைவாதி ரோசா பார்க்ஸ் (Rosa Parks) ஒக்டோபர் 25 திகதி காலமாகியிருந்தார்.

ஒரு வெள்ளையருயருக்கு டிசம்பர் 1, 1959ல் பஸ்ஸில் தானிருந்தை இருக்கையை விட்டுக்கொடுக்காத இவருது துணிச்சலான செயலே அமெரிக்காவில் நவீன கறுப்பின சமூக உரிமக்கான அமைப்பின் துரித வளர்ச்சிக்கு மூல காரணியாக அமைந்தாக பலராலும் நம்பப்படுகிறது.



அமெரிக்க உள்நாட்டு யுத்தம் 1864 முடிந்த போது தெற்கு மாநிலங்களில் அப்போது பரவலாகவிருந்த குரூரமான இன அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு, எந்தவித சம்ப்பளமும் தமது கூலிக்கு பெறமால் கொடுமையான வெள்ளை எஜமானர்களின் கீழ் அடிமைகளாகவிருந்த கறுபினத்தவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால், முன்பு எஜமானார்களாகவிருந்த வெள்ளையின வாதிகள் கறுப்பினத்தவர் தம்மைப்போன்று எல்லாவுருமைகளுடனும் சுதந்திரமாக சமூகத்தில் தமக்கு சமமாகவிருப்பதை விரும்பவில்லை. இதன் காரணமாக "கு கிளக்ஸ் கிளான்" (Ku Klux Klan) போன்ற வெள்ளை மேல்நிலைவாத அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. அமெரிக்காவின் தெற்கு மாநிலங்கள் பல புதிய இன பாகுபாட்டுச்சட்டங்களின் மூலம் ஆபிர்க்க - அமெரிகர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் கட்டுபடுத்தப்பட்டன. இந்தச் சட்டங்களின்படி கறுபினதவர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் பஸ், உணவகம் முதலிய பொதுவிடங்களில் வெவ்வேறு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். கறுப்பின ஆண்கள் வெள்ளைப் பெண்களைப் "பார்கக்" கூடாது. இவ்வாறு ஏராளமான் இனவாத கட்டுபாடுகள் இருந்தன. இந்தச்சட்டங்களை மீறுபவர்கள் என்று கருதப் படுகிறவர்கள் போலீஸ் விசாரணைக்கு முன்பே பல தருணங்களில் வெள்ளைமேல் நிலைவாதிகளால் தாக்கப்பட்டுள்ளனர். "வெள்ளைப் பெண்களை வன்புணர்சி செய்த்தாக" பல போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி பல கறுபின இளைஞர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

இப்படியான ஒரு சூழலில்தான் ரோஸா பார்கஸ் பிறந்து வளர்ந்தவர். தனுது Quiet Strength நூலிலும் அவரது பேட்டிகளிலிலும் பாகுபடுத்தலினால் தான் பட்ட துன்பங்கள், அவமானங்களை கூறியுள்ளார். மொன்ற்கொமறி - அலபாமாவில், சிறுமியாக தான் கறுப்பினப் பிள்ளைகள் தனியே படிக்கும் பாடசாலைக்கு நடந்து செல்லும்போது வெள்ளையினப் பிள்ளைகள் பஸ்ஸில் செல்வதைப் பார்த்தபோதுதான் அமெரிக்காவில் கறுப்பர்களுக்கும் வெள்ளையர் களுக்கும் வெவ்வேறு உலகம் இருப்பதை உணர்ந்தாதக கூறுகிறார்.

கு கிளக்ஸ் கிளானைச் சேர்ந்தவர்கர்கள் இனவாதக் கோசங்களை எழுப்பியவண்ணம் வீதியில் ஊர்வலம் வருகையில் தங்கள் வீட்டிலில் பயங்கரத்திலிருந்த தருணங்களை நினைவு கூறுகிறார்.

பிற்காலத்தில், அவர் வேலைக்குப் போகும் காலங்களில் பல தடவைகள் பஸ்ஸின் முன் பகுதியில் கட்டணம் கட்டிவிட்டு பின்னுக்கு ஏற வருகையில், வெள்ளையினச் சாரதிகள் அவரைத் தெருவில் விட்டு பஸ்ஸை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இந்த காலகட்டத்தில் ரோசா பார்க்ஸ் "தேசிய நிற மக்கள் முன்னேற்றத் அமைப்பில்" செயலாளராக இருந்து கறுபின மக்களை வாக்காளராக பதிவுசெய்ய ஊக்குவிக்குத்தார். பல கறுப்பின மக்கள் தம்மை வாக்களராகா பதிவு செய்தால் வெள்ளையின மேல்நிலைவாதிகளின் வன்முறைக்கு பலியாகவேண்டி வருமென அஞ்சினர். தம்மைப் வாக்காளராக பதிவு செய்த பலர் தாக்கப்பட்டனர், கொல்லப் பட்டனர்.

தன்னின மக்கள் நடத்தபடும்முறை இவருக்கும் பெரும்வருத்தைக் கொடுத்தது. ஒருநாள் அவர் அப்போது ஒருசில கறுப்பினத்தவரால் செய்யப் பட்ட "கீழ்படியமறுப்பு" என்னும் செயலைக் கையிலெடுத்தார். வேலையால் வரும்போது பஸ்ஸில் இருந்த ஒரு வெள்ளையின ஆணுக்குத் தனது இருக்கையை விட மறுத்தார். விளைவு பொலிசினால் கைதுசெய்ய பட்டு அபராதத்துடன் சிறையிடப்பட்டார். இவரது இந்தச்செயலால் ஊக்கம் பெற்றனர் காறுப்பின உரிமை-வாதிகள். உள்ளூர் தேவாலைய இளம் பாஸ்டர் மட்டின் லூதர் கிங்கின் தலைமயில் சாத்வீகப்போரட்டம் ஒன்றில் இறங்கினர் - மொன்ற்கொமறியில் உள்ள போக்குவரத்துச் சபையின் பஸ்களைப் பகிஷ்கரித்தனர். இந்தப் போராட்டம் 381 நாட்கள் தொடர்ந்தது. பல கறுப்பினத்தவர்கள் இந்த போரட்டங்களின்போது கொடூரமாக தக்கப்பட்டார்கள். இருந்தும் பகிஷ்கரிப்புத் தொடர்ந்தது. போக்குவரத்துச் சபை பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டது. முடிவில் மொன்ர்கொமறி பொதுப் போக்குவரத்து பஸ்களில் இனப்பாகுபாட்டை விலக்கி நீதிமன்றம் தீர்ப்பு வழுங்கியது. இந்த வெற்றி மேலும் பல போராட்டங்களுக்கு வழிகோலி, 1964ல் அமெரிக்க மத்தியவரசால் கொண்டுவரப்பட்ட சமூகவுரிமைச் சட்டத்தின மூலம் தென் மாநிலங்களிலிருந்த இனப்பாகுப்பட்டுச் சட்டங்கள் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டன.

தனது துணிச்சலான நடவடிக்கைகுப் பிறகு ரோசா பார்க்கால் தொடர்ந்தும் அலபாமாவில் வசிக்கமுடியவில்லை. அவரது உயிருக்கு பல அச்சுறுத்தல்கள் வெள்ளையின மேல்நிலைவாதி களிடமிருந்து வந்தது. இதன் காரணமாக அவர் டெற்றொயிட்டுக்கு இடம்பெயர்ந்து, தனது இறுதிகாலம்வரை அங்கயே வசித்தார்.

ஒருசிலரின் துணிச்சலான நடவடிக்கள்தான் ஒரு சமூகத்தில் விடுதலைக்கு தீப்பொறியாக அமைகிறது. ரொறசா பார்க நிச்சயம் அவர்களில் ஒருவர்.

*- தர்சன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது எங்கள் கதை

**- நடேசன் -**



நீண்ட விடுமுறைக்குப்பின்னர் அந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பமாகின்றது. எறும்புகள் சாரிசாரியாக புற்றுக்குள் செல்வது போன்று மாணவர்கள் ஒருவரைஒருவர் பின்தொடருகிறார்கள்.

மான்களையும் புலிகளையும் உள்வாங்கும் அடர்ந்த கானகம் போன்று மிரட்சியுடன் புதிய மாணவர்களையும் பழைய மாணவர்களையும் அந்தப் பல்கலைக்கழக "கொங்கிரீட்" கட்டிடங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

விடுமுறைக்காலத்தில் - பல்கலைக் கழகத்திற்கு வெளியே எத்தனை யோ சம்பவங்கள் நடந்து விட்டன. கொங்கிரீட் கட்டிடங்களுக்கு உயிர் இல்லாதமையால் நாளும் கிழமையும் போன்று வெளியுலக சண்டைகளை சட்டை செய்வதில்லை. கட்டிடங்கள் அதே இடத்தில் தரித்து நிற்க - நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகி தரிக்காமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. மனிதவாழ்வும் அப்படியாகி விட்டது. பிறப்பும் இறப்பும் ஒன்றையொன்று துரத்துகின்றன.

பெருந்தொகையில் மனித உயிரிழப்புக்கள் நேர்ந்தாலும் தொடர்ந்தும் நினைத்துப்பார்க்க நேரம் ஏது?

இறந்தவனைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் இருப்பவன் எப்படி சாப்பிடுவது?

முக்கியமற்றவர்களுக்கு உறவினர்களின் சிலதுளி கண்ணீர்.

பிரமுகர்களுக்கு மாலைமரியாதையுடன் அஞ்சலிக்கூட்டம்.

இறந்தவர்களுக்கு தனது முக்கியத்துவம் தெரியப்போகிறதா?

இப்படி மரியாதைக்காகக் காத்திருப்பவன் யாராவது இறப்பதற்கு ஆசைப்படுவதுண்டா? எவனும் வாழத்தான் ஆசைப்படுகின்றான்.

இரவல் சிறுநீரகம், அடுத்தவனின் இரத்தம், ஏன் முடிந்தால் கண்களைக்கூட மற்றவர்களிடமிருந்து வாங்கி வாழத்தான் ஆசைப்படுகிறான்.

எந்த நாட்டிலும் இப்படியானவர்கள் தான் வாழுகிறார்கள். நாட்டுக்கு, மொழிக்கு, சாதிக்கு உயிர்கொடுப்போம் என உணர்ச்சிக் கோஷம் போடும் அரசியல்வாதிகள், கவிஞர்கள், விடுதலைப் போராட்டத்தலைவர்கள் நரையை மறைக்க கறுப்பு சாயம் பூசும் காலம் இது.

மயிரை விட்டுக்கொடுக்காதவர்கள் உயிரையா விடுவார்கள். மற்றவர்கள் உயிரைவிட வேண்டுமென்று தான் இந்தக் கோஷங்கள்.

கண்ணிவெடிகள், துப்பாக்கிகள், ரொக்கெட்டுகள் வெடித்து மனித உடல்கள் சிதறி இரத்தமணம் பரப்பும் நாட்டிலும் கல்விக்கூடங்கள் பல்கழைக்கழகங்கள் கிரமமாக இயங்கத்தான் முனைகின்றன.

எதிர்காலத்திற்கு உத்தரவாதம் இல்லாவிட்டாலும் கூட இளம் உள்ளங்களை கனவுகள் நிறைத்திருக்கின்றது. டொக்டர், எஞ்சினியர், விஞ்ஞானி என ஒளிமயமான எதிர்காலம் மனத்திரையில் விரியும் போது இரவுகளை கரைத்து கண்விழித்துப் படித்தவர்களுக்கு கனவுகளை நனவாக்கும் தொழிற்கூடமாக இந்தப்பல்கலைக்கழகம் தெரிகிறது.

இவர்களில் சிலரே மருத்துவபீட உடற்கூற்றுப்பிரிவில் நிற்கின்றனர்.

நேரம் காலை ஒன்பது மணி

மருத்துவபீடத்து மாணவர்கள் ஒன்றாக கூடி நிற்கிறார்கள். அனைவரிடமும் அமைதி மனிதஉடல்களை மிக அருகில் பார்க்கிறார்கள்.

"ஃபோமலினில்" அமுத்தி எடுக்கப்பட்ட விறைத்த உடல்கள் நிர்வாணமாக மேசைகளில் கிடத்தப்பட்டிருக்கின்றது.

சுவர்களில் உடற்கூற்று சம்பந்தமான வண்ணப்படங்களும் அந்த அறையில் சுவர் ஓரமாக சில முழுஉருவ மனித எலும்புக்கூடுகள் இரும்புச்சட்டங்களின் உதவியுடன் காட்சி தருகின்றன.

போமலினோடு இரண்டறக்கலந்த மணம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

சாமானியர்களுக்கு ஏற்காத சூழல்-மருத்துவ மாணவர்களுக்கோ ஏறவேண்டிய ஏராளமான படிகளில் முதலாவது படி.

பரிசோதனைக்கூடத்தின பொறுப்பாளர் இராசஇரத்தினத்தின் குரல் ஓங்கி ஒலிக்கின்றது.

"பத்துப்பேருக்கு ஒரு டிபொடி உள்ளது" என்று இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதும் மாணவர்கள் அருகே சென்றனர்.

மூடிக்கிடந்த பரிசோதனைக்கூட கதவுகள் திறந்தன. இரண்டு தலைகள் எட்டிப்பார்த்தது இராசரத்தினத்தின் கண்களுக்கு தென்படவில்லை.

"எல்லோருக்கும் டிபொடி இருக்குதுதானே?"

கதவின் அருகே இருந்து இரண்டு கைகள் உயர்ந்தன.

"என்ன?" விறைப்பான அதிகார மிடுக்கு இராசரத்தினத்தின் குரலில் ஒலித்தது.

விரிவுரையாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் இராசரத்தினத்தின் அதிகாரம் அங்கே கொடிகட்டிப்பறக்கும். புதிய மாணவர்களுக்கு அவர்தான் விரிவரையாளராக தென்படுவார்.

இராசரத்தினத்தின் சேவை முதலிரண்டாண்டு மாணவர்களுக்கு தேவை. அவரது பெருமளவு ஆதரவு மாணவிகளுக்கு கிடைத்தாலும் பதுங்கிப் பவ்வியமாக நடக்கும் மாணவர்களையும் அவர் புறக்கணிப்பதில்லை.

உடற்கூற்று பாடத்தின் செயல்முறைபரீட்சை நடக்கும்போது இராசரத்தினத்தின் உதவி இல்லாமல் சித்தி அடைவது கடினம். எலும்புகள்இ உறுப்புகள், உடற்கூற்று வரைபடங்களை பெறுவதற்கு இராசரத்தினத்தின் தயவை நம்பியிருப்பவர்கள் இம்மாணவர்கள்.

"எங்களுக்கு பொடி இன்னமும் கிடைக்கவில்லை." கபிலனும் வாசுகியும் ஒரே குரலில் சொன்னார்கள்."

"லேட்டாக வந்தால் இதுதான் நடக்கும்.. அடுத்தவாரம் உங்களுக்கு டிபொடி ஒழுங்கு பண்ணுறன் எங்களுடைய தேசியத்தலைவர் இருக்கு மட்டும் அதற்கு பிரச்சனை இல்லை. இந்தவாரம் மட்டும் மற்றவர்களுடன் சேர்ந்து படியுங்கோ".

மாணவர்களுக்கு இராசரத்தினத்தின் நகைச்சுவை புரிந்தாலும் போமலின் மணம் கண்களையும் மூக்கையும் உறுத்தியது.

உயிர்அற்ற உடல்களின் நெருக்கம் தலைச்சுற்றையும் மயக்கத்தையும் கொடுத்தது. சில மாணவர்கள் வயிற்றைத் தடவிக்கொண்டது வாந்தியை தடுப்பதற்காக இருக்கலாம்.

இதனால் இராசரத்தினத்தின் நகைச்சுவையை ரசிக்க முடியவில்லை.

▼▼▼

சின்னாச்சியின் தகரடப்பாவுக்குள் இருந்த மருந்துக்குளிசைகள் முடிந்து விட்டன. இரண்டு சிறிய துண்டு மாத்திரைகள் தான் இருந்தன. விரல்களினால் மீண்டும் துலாவிப் பார்த்து ஏமாந்தார். எப்பொழுதோ முடிந்திருக்க வேண்டிய பிரஷர் குளிசைகள். சின்னாச்சி காலம் தாழ்த்தி பாவித்ததனால் நேற்றுவரையில் இருந்தன.தினமும் இரண்டு குளிசைகள் எடுக்கும்படி டொக்டர் சொல்லியிருந்தார். தினமும் எடுத்திருக்கவேண்டியதை ஒன்றுவிட்டு ஒருநாள் எடுப்பதும் - சில நாட்களில் ஒரு நாளைக்கு ஒரு குளிசையுமாக சேமிப்பு முறையில் சின்னாட்சி உட்கொண்டாள்.

தலையிடி வந்தால் பிரஷர் கூடிவிட்டது என்பது அறிகுறி. இது டொக்கடர் சொல்லித் தெரிந்ததுதான்.

*என்ர மனிசன் கொழும்புக்கு வேலைக்கு போய் வருஷத்துக்கு ஒருதடவை வரும். ஆறுபிள்ளைகளை பெத்தாலும் இரண்டு தான் தங்கிச்சுது. பொத்திப்பொத்தி வளர்த்தனான். மூத்தவன் சிங்கள நாட்டில இருந்து ஒருத்தயை கொண்டுவந்து இவள்தான் பெண்டில் என்டான். அவளோடு சுகமாக இருந்தானா..? அதுதான் இல்ல ஆறுவருஷத்தில நஞ்சைக் குடித்து செத்துப்போனான். சின்னவனை ஆமி பொலிஸில பிடிபடாம காப்பாத்தி இருந்த காணி நகையை வித்து வெளிநாட்டுக்கு அனுப்பினனான். அவன் இத்தாலியில ஜெயிலுக்குள்ள இருக்கிறானாம்.*

இதை அளவுகோலாக கொண்டு தலையிடிவேளையில் மாத்திரம் குளிசை எடுத்தாள் சின்னாச்சி.

"இன்றைக்கு எப்படியும் மருந்து வாங்கவேண்டும். பக்கத்து வீட்டு ஆறுமுகம் டவுனுக்கு அழைத்துப் போவதாக சொல்லியிருந்தான். நேற்று மகளிட்ட போய் வருவதாக போனவன் இன்னும் வரவில்லை. இன்றைக்கு தனியாகவேணும் போய் மருந்து வாங்க வேண்டும். உணவில் உப்பு அதிகம் சேர்க்க வேண்டாம் என டொக்கடர் சொல்லியிருக்கிறார். இந்த ஊரில் உப்புத்தான் கட்டுபடியாகிற விலையில் கிடைக்கிறது. உப்பில்லாமல் எப்படி சாப்பிடுவது. ரவுனுக்கு போவதற்கும் மூன்றுமைல் தூரம் நடக்க வேண்டும். முடியுமா? அந்தக்காலத்தில் எத்தனை மைல் தூரம் நடந்திருக்கிறேன். நம்மட ஊரில் முன்பு கார் பஸ்ஸா இருந்தது.? சூரியன் மேலே ஏற முன்னம் ரவுனுக்கு போக வேண்டும்."

முகத்தை கழுவி கொடியில் தொங்கிய துணியால் துடைத்துவிட்டு அம்மன் படத்துக்கு முன்பாக இருந்த சிறிய பெட்டியில் இருந்த திருநீற்றை எடுத்து நெற்றியில் தரித்துக்கொண்ட சின்னாச்சியின் உதடுகள் அம்மாளாச்சியைதான் பார்க்க வேண்டும் என முணுமுணுத்தன.

"வெளிக்கிட்டு படலையடிக்கு வந்தவுடனேயே மூச்சு வாங்குது. எப்படித்தான் பஸ்ராண்டுக்கு போகப்போகிறனோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து நிமிடப் பொடி நடையில் ஒழுங்கைக்கு வந்தபோது சின்னாச்சியின் நெஞ்சு புதுச்சுளகு போன்று படக்படக்கென்று அடித்தது. நேஞ்சுக்கூட்டுக்குள் இருக்கும் இதயம் வெளியே வருமாப் போல இருந்தது. வலது கையை நெஞ்சில் வைத்து தடவியபடி பஸ்ஸ்ராண்ட் மரத்தடியில் அமர்ந்தாள்.

வீதிவெறிச் சோடிக்கிடந்தது. எந்தவொரு வாகனப் போக்குவரத்தும் இல்லை. ஏதாவது ஹர்த்தால் என்று கடையடைப்பும் வாகனப் போக்குவரத்து மற்ற சூனியம் படர்ந்திருக்கிறதோ என சின்னாச்சி நினைத்தாள்.

அரைமணிநேரம் கடந்து விட்டது. வாகனப்போக்குகளை காணவில்லை. வீதியில் பறந்த கடதாசிகளை மேய்ந்து கொண்டு இரண்டு செத்தல்மாடுகள் கடந்தன.

இரண்டு ஆண்நாய்கள் துரத்திக் கொண்டு சென்றன. காற்றும் புழுதியை வாரிக்கொண்டு அத்திசையில் நகர்ந்தது.

தூரத்தில் ஒரு சைக்களிள் வந்தது.

சின்னாச்சி வீதிக்கு குறுக்கே வந்து மறித்தாள்.

"தம்பி என்னடா நடந்தது. ரோட்டில் ஒரு பஸ்ஸையும் காணவில்லை."

"எங்கேயோ வெடி வைச்சிட்டான்கள் ஹெலியும் சுத்துது."

"தம்பி நீ எங்கப்பன் போகிறாய்?"

"பிள்ளைக்கு பால்மா வாங்கவேணும் ரவுனுக்கு போறன்."
"உன்ர சைக்கிளுக்கு பின்னால் தொத்துறன். எனக்கு பிரஷர் குளிசை வாங்க வேணும்.."

"சரி ஏறுங்கோ".

ரவுனில் சின்னாச்சியை இறக்கியவன் "இந்தவழியாக நடந்தா ஐந்து நிமிடத்தில் ஆஸ்பத்திரி வரும்" என்றான்.

"உனக்கு புண்ணியம் கிடைக்கும் ராசா."

சைக்கிள் மறைந்தது.

"நானும் பெத்தனே ஒரு நாயை. இத்தாலியில் கம்பி எண்ணுது. கம்பி எண்ணுவதுதான் விதியென்று இருந்தால் இங்கே சிங்களவனின்ரை கம்பிகளை எண்ணலாம்தானே. பிள்ளையின்ரை முகத்தை பார்த்துட்டு சாகலாம் என உயிரைப் பிடிச்சுக் கொண்டிருக்கிறன். வயதுபோன தாயை வந்து பார்க்க வேண்டாம். குளிர்தேசத்தில் சாகிறானே. சரி.. நான் புலம்பி என்ன நடக்கபோகிறது."

படபடசென்று துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன.

"துலைவான்கள் சுடுறான்கள். நான் எங்கதான் ஓடுறது.?"

சின்னாச்சி காலை எட்டி வைத்து நடந்தாள்.

கண்கள் இருட்டின. நெஞ்சை பிசைவது போன்ற உணர்வு.

"என்ன கண்கள் அந்தரத்தில் மிதக்கிறதே, நெற்றி கழுத்தெல்லாம் வலிக்கிறதே அடிவயிறு கலங்குகிறதே.. எனக்கு என்ன அம்மாளாச்சியே. . என்னை - என்னை"

சின்னாச்சி மயங்கியவாறு வீதியில் சரிந்தாள்.

இப்போது துப்பாக்கி வெடிக்கும் சத்தங்களோ ஹெலியின் இரைச்சல்களோ சின்னாட்சிக்கு கேட்கவில்லை. எங்கும் இருட்டு. அந்தகாரமான இருட்டு.

இருட்டும் இப்போது தெரியவில்லை.

முகத்தில் ஈரம் பட்டது.

விழித்தாள்.

"ஆச்சி எங்கேயண போறாய்? ஏன் விழுந்து கிடக்கிறாய்?"- கேட்ட குரலுக்கு சொந்தமான முகம் தெரியவில்லை.

"யார்? கண்தெரியவில்லை இருட்டாக இருக்குது. பிரஷர் குளிசை வாங்க ஆஸ்பத்திரிக்கு போகவேணும்."

"இந்தா பக்கத்தில் தான் நடக்கிறாயா?"

"உன்ர முகம் கூட தெரியவில்லை. எப்படி பாதை தெரியும். ஆஸ்பத்திரி வாசலடியில் கொண்டு போய்விடு."

சின்னாச்சிக்கு உதவவந்த நபர் கையால் ஆதரவு கொடுத்து தூக்கியபடி "தனியாவா வந்தனி ஆச்சி? யாரும் இல்லையோ" என்று கேட்டார்.

"எனக்கு விதி, அந்தக்காலத்தில் இருந்தே இப்படித்தான் என்ர மனிசன் கொழும்புக்கு வேலைக்கு போய் வருஷத்துக்கு ஒருதடவை வரும். ஆறுபிள்ளைகளை பெத்தாலும் இரண்டு தான் தங்கிச்சுது. பொத்திப்பொத்தி வளர்த்தனான். மூத்தவன் சிங்கள நாட்டில இருந்து ஒருத்தயை கொண்டுவந்து இவள்தான் பெண்டில் என்டான். அவளோடு சுகமாக இருந்தானா..? அதுதான் இல்ல ஆறுவருஷத்தில நஞ்சைக் குடித்து செத்துப்போனான். சின்னவனை ஆமி பொலிஸில பிடிபடாம காப்பாத்தி இருந்த காணி நகையை வித்து வெளிநாட்டுக்கு அனுப்பினனான்". அவன் இத்தாலியில ஜெயிலுக்குள்ள இருக்கிறானாம். கட்டினவனாலும் சுகமில்லை. பெத்தபிள்ளைகளாலும் சுகமில்லை கொஞ்சக்காலம் பல்கலைக்கழத்தில் படிக்கிற பிள்ளைகளுக்கு சமைச்சுக் கொடுத்து என்ர வயித்தைக் கழுவினன். உடம்புக்கு ஏலாமல் இப்ப அந்த வேலையையும் விட்டிட்டன். இனி அந்த

> 'லேட்டாக வந்தால் இதுதான் நடக்கும்.. அடுத்தவாரம் உங்களுக்கு டிபொடி ஒழுங்கு பண்ணுறன் எங்களுடைய தேசியத்தலைவர் இருக்கு மட்டும் அதற்கு பிரச்சனை இல்லை. இந்தவாரம் மட்டும் மற்றவர்களுடன் சேர்ந்து படியுங்கோ'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாளாச்சி தான் துணை."

"ஆச்சி ஆஸ்பத்திரி வந்திட்டுது. இந்த வாங்கில் உட்காருங்ளோ. தலையை நிமித்தி வையுங்கோ"

குரலின் தொனியில் மாற்றம்.

சின்னாச்சியின் சாய்ந்த தலை பக்கவாட்டில் சரிந்தது. கண்கள் நிலைகுத்தியவாறு ஆஸ்பத்திரிக் கூரையில் சுழலும் மின்விசிறியை நோக்கியது.

ஆஸ்பத்திரி தாதியா் அவசரஅவசரமாக சின்னாச்சியை ஸ்ரெச்சரில் வைத்து உள்ளே கொண்டு சென்றனா்.

சொற்பவேளையில் ஸ்ரெதஸ்கோப்புடன் வந்த டொக்டா் கேட்டாா். "யாராவது உறவினா்கள் வந்திருக்கிறாா்களா?"

"இல்லை டொக்கடா் கிழவி தனியத்தான் சீவிக்குதாம். கொண்டு வந்து விட்டவா் சொன்ன தகவல".

டொக்டா் உதட்டை பிதுக்கினாா் "அனாதைப்பிணம் என்றால் மருத்துவ பீடத்துக்கு அனுப்புங்கோ."

சின்னாச்சி அவசரஅவசரமாக போமலினுக்குள் அமுக்கப்பட்டாள். எஞ்சியிருந்த அற்பசொற்ப பிராணவாயு குமழிகளாக வெளியேறின.

▼▼▼

கபிலனுக்கு புதிய டிபொடி கிடைத்த மகிழ்ச்சியில் 24ம் பிளேட்டை எடுத்து கைப்பிடியில் கவனமாக பொருத்தினான்.

வாசுகி உடல்கூற்று புத்தகத்தை விரித்து கழுத்து நரம்புகளின் படங்கள் உள்ள பக்கத்தை படம் தெரியத்தக்கதாக கபிலனுக்கு அருகில் வைத்தாள்.

பத்துப்பேருக்கு ஒரு டிபொடி ஆனால் கபிலனுக்கும் வாசுகிக்கும் ஒரு டிபொடி சின்னாச்சியின் உருவத்தில் கிடைத்தது.

பிளேட்டை சற்று அழுத்தி பொடியின் முகத்தில் வைத்தான் கபிலன்.

டிபொடியின் மூக்கில் சிறு துடிப்பு.

"கபிலன் நிறுத்து மூக்கு அசைகிறது.." என்றாள் வாசுகி.

"எனக்கு தெரியவில்லை."
"எனக்கு தெரிகிறதே".

அந்த டிபொடி மெதுவாக அசையத்தொடங்கியது. முனகியது. கண்கள் திறந்தன.

முகத்தில் இரத்தம் கசியத்தொடங்கியது.

கபிலனும் வாசுகியும் விக்கித்து போனாா்கள்.



சின்னாச்சியின் டிபொடி வாய்திறந்து பேசியது. கண்களில் படிந்திருந்த இருட்டு இப்போது நீங்கியிருக்கிறது.

"ஏன் பிள்ளைகளே.. என்னைத் தெரியல்லையா".

கபிலனும் வாசுகியும் வாயடைத்து நிற்க சின்னாச்சி வாயசைத்தாள்.

"உங்களுக்கெல்லாம் சமைச்சுப்போட்ட சின்னாச்சிதான். நீங்களெல்லாம் சோதினைக்கு படிக்கும் போது எத்தனைநாள் காலையில் கோப்பி போட்டுத்தந்திருப்பன்."

"கபிலன்.. இது எங்கட சமையல்கார ஆச்சி" வாசுகி உரத்த குரலில் சொன்னாள்.


"நான் அனாதை இல்ல எனக்குச் சொந்தக்காரா் கொழும்புக்கு இடம் பெயா்ந்திட்டினம். சொல்லியனுப்புங்கோ என்ற கட்டை வேக வேணும"

சின்னாச்சியின் இறுதி வாக்குமூலம் உதிா்ந்தது. மீண்டும் உண்மையாகவே டிபொடி ஆனாள்.

◣◣◣◣◣


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பயிற்சி பட்டறை



ஒரு தனி மனித போராட்டத்தை விட சமூகத்தோடு சேர்ந்த போராட்டமே நிறைந்த வெற்றியை அளிக்கும் என்பது எமது நம்பிக்கை. கருமையத்தின் நோக்கம் பெண்களை ஒன்று சேர்த்து அவர்களின் கூட்டுமுயற்சியிலேயே சமூகம் சார்ந்த ஒரு முயற்சி யாகவே வெளிப்படுத்துவே. இந்த வகையில் தான் கருமையத்தின் முதல் முயற்சியாக March 2005இல் பெண்கள் பயிற்சி பட்டறையினூடாக பெண்கள் சம்பந்தமான பிரச்சனைகளை கலந்துரையாடி உருவாக்கிய மேடை நிகழ்வு. சமூக நோக்கோடு ஒருமித்த குரலாகவும் தாற்பரியம் உள்ளதாகவும் இருந்தால் தான் சமூக உணர்வுடைய பெண்ணியம் அமைக்க முடியும். அந்த வகையில் பெண்கள் பட்டறையினூடாக எமக்கு கிடைத்த அனுபவம்.

பெண்ணியம் என்றால் என்ன? பெண்ணியம் என்ற பதம் எவ்வாறு தோன்றியது. ஏன் தோன்றியது. இப்பிடி பல கேள்விகள் எம் மனதில் தோன்றினாலும் எமது ஒரே பதில் அடிப்படைக் கார ணமான பெண்களின் பிரச்சனைகள் என்பதாகவே அமையும். பிரச்சனைகளை எதிர்நோக்கும் பெண்களை மூன்று விதமாக பிரிக்கலாம்.

ஒன்று பெண்கள் தங்களுடைய பிரச்சனையை அறிந்து ஏதோ விதமாக வெளிக்கொண்டு வரக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

அடுத்தது பெண்களைச்சுற்றி அல்லது தன்னைச்சுற்றி பிரச் சனைகள் இருக்கிறது என்று தெரிந்தும் வெளிக்கொண்டு வரத்தெரி யாதவர்களாக அல்லது வெளியே வரத்தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

மூன்றாவது தங்களுக்கு இப்பிடி ஒரு பிரச்சனை இருக்கிறது என்று தெரியாமல் பிரச்சனையில் இருந்து வெளியில் வரமுடியாதவர் களாக இருக்கிறார்கள்.

இதில் எங்களை முக்கியமாக பாதிக்கும் விடயம் தாங்கள் பெண்களாக இருப்பதால் தான் நாங்கள் அடக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறேம் என்பதே தெரியாமல் அப்பிடி இருப்பது தான் தங்களுடைய வாழ்க்கை என்று வாழ்பவர்கள். இது தான் பெரும்பாலான பெண்களின் மிகப்பெரிய துயரமான பக்கம்.

சமூகத்தில் நிலவும் இவ்வாறான கருத்துக்களையும் பிரச்சனை களையும் கவனத்தில் கொண்டு பெண்கள் தங்கள் பிரச்சனைக-ளைக் வெளிக்கொண்டுவரவும், தயக்கங்களின்றிக் கருத்துக்களைப் பரிமாறவும், பின் இவைகளை மேடை நிகழ்வுகளாக் கொண்டுவர ஓர் தளம் தேவையென்ற நோக்கில் கருமையத்தால் ஓராண்டுக்கு முன்பாக தொடங்கப்பட்டதுதான் பெண்கள் பயிற்சிப் பட்டறை.

இந்தப்பயிற்சிப் பட்டறை தகவல் சார்ந்து அறிவுபூர்வமானதாக அமைந்தது இங்கு குறிப்படத்தக்கது. சுமாராக 50 பேர் வயது வித்தியாசமின்றி சிறுபிள்ளை முதல் வயது முதிர்ந்தவர் வரை பங்குபற்றி இருந்தார்கள். பெண்ணியம் என்றால் என்ன என்று தெரிந்து வந்ததை விட தெரியாமல் இந்தப்பட்டறை மூலம் அனுபவத்தை பெற்றவர்களும் இருக்கிறார்கள் என்பது தான் இந்தப் பட்டறையின் முக்கிய வெற்றியாக சொல்லலாம். பல விடயங்கள் விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டாலும் எல்லாம் மேடை நிகழ்வாக கொண்டு வரமுடியாது போனது. உதாரணத்திற்கு தாலி என்ற விடயம் கிட்டத்தட்ட 3 மணித்தியாலங்கள் பலத்த ஆரோக்கி யமான விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டாலும் அதை மேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வாக்க முடியாமைக்கு காரணம் ஒரே கருத்துடையவர்கள் அங்கு இருக்கவில்லை. தாலி என்பது காலம் காலமாக சமயம், சமூகம் சார்ந்து பெண்களை பாதித்து வரும் ஒரு விடயம். குறுகிய காலத்தில் சமூகத்தை மாற்றப்போகிறோம் என்பது பொய்க் கதை. ஆனால் இந்த பட்டறையினூடாக ஒரு சிறிய வெற்றியாவது கிடைத்திருக்கிறது என்பது உண்மை. பட்டறையில் பங்கு பற்றிய வர்களில் குறைந்தது இரண்டு பேராவது தாலி என்ற கருத்தியலை விளங்கிச் செல்வார்களானால் அது பெரிய ஒரு வெற்றி. இங்கு ஒரு உதாரணத்தை சொல்லாம் என்று நினைக்கிறேன். நாடகத்தில் பங்கு பற்றிய ஒரு 60 வயது அம்மா கூறியது "தாலி என்ற ஒரு பிழையான விடயத்திற்கு பின்னால் இவ்வளவு இருக்கிறது என்பதை பட்டறைக்கு வந்த படியால் தான் தெரிந்து கொண்டேன்.

எங்களுடைய அனுபவங்களை பகிர்ந்தது மட்டுமல்ல அது சம்பந்தமான அனுபவம் வாய்ந்தவர்கள் அந்தத்துறையோடு வேலை செய்பவர்கள் வருகை தந்து தங்களுடைய அறிவு, அனுபவங்களை எங்களுடன் பகிரந்து கொண்டார்கள். பலசாதகமான பாதகமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டாலும் அதிலிருந்து ஆறு விடயங்கள் மட்டுமே நாடகமாக்கப்பட்டது. ஓவ் வொரு நாடகமும்10-15 நிமிடத்திற்குள் உட்பட்டதாக ஆக்கியிருந்தோம். ஓவ்வொரு பெண்ணுக்குள்ளும் இருந்து வெளி வந்த உண்மையான கருத்துக்களில் இருந்து உருவாகியதே இந்த நாடகப் பிரதிகள். வீட்டுக்கு வீடு சின்னத்திரை நாடகம்இ தமிழ் ஆங்கிலத் திரைப் படங்கள், வீட்டுவேலைகள், அலுவலகம், பிள்ளை குட்டிகளின் மத்தியிலும் பெண்கள் தங்கள் நேரத்தை ஒதுக்கி இப்பயிற்சி பட்டறையில் பங்கேற்றது வரவேற்கத்தக்க ஒன்று.

**இப்பட்டறையின் நோக்கம் கனடாவில் இருக்கும் பெண்களின் நிலை மட்டுமன்றி உலகளாவிய ரீதியல் இருக்கும் எல்லா பெண்களின் பிரச்சனைகளையும் வெளிக் கொண்டு வருவதே.**

"கட்டவிழ்ப்பு" நிகழ்வினூடாக ஒரு பெண்ணுக்கு எவ்வாறு கருவிலிருந்து கல்லறை வரை கொடுமைகள் தொடர்கிறது என்பதை வெளிக்கொண்டு வருவதே எமது நோக்கமாக அமைந்திருந்தது. பெண்ணாக பிறப்பதால் ஒவ்வொரு பருவங்களிலும் அவள் அனுபவிக்கும் அடக்குமுறைகளையும், கொடுமைகளையும் முடிந்த வரையில் நிரல் படுத்தி நாடகமாக்கியுள்ளோம்.

கட்டவிழ்ப்பி நிகழ்வு முதல்லாவதாக பேசி விடையம் "கருக் கலைப்பு உரிமை". ஒரு பெண் கருவுற்றவுடன் கருவை கலைப்பதா இல்லையா என்பதை சமூகமும் பெரும்பாலான ஆண்களும் அவர்களது உறவி னர்களும் தான் இன்னும் தீர்மானிக்கிறார்கள். "இந்த நிலை மாறவேண்டும். கருவை கலைப்பதுக்கான உரிமை முற்றுமுழுதாக ஒரு பெண்ணினுடையது" என்ற கருத்து வெளிக் கொணரப்பட்டது

அதனைத் தொடர்ந்து "கள்ளிப்பால் சிசுக்கொலை". இந்தியா வில் சில கிராமங்களில் ஒரு பெண்குழந்தை பிறந்து விட்டால், அவள் பெண்ணென்ற காரணத்துக்காகவே கள்ளிப்பாலுக்கு இரையாகிறாள் என்பதைக் காட்டி நின்றது.

மூன்றாவதாக "சாமத்தியச்சடங்கு" என்ற வியாபாரத்துக்கு எப்படி ஒரு பெண்ணைத் தயாரிகிறார்கள் என்பதைக் காட்டியது. இச்சடங்கு ஆரம்ப காலங்களில் ஒரு பெண் கல்யாணச் சந்தைக்கு தயாராகி விட்டாள் என்பதை நோக்கமாக கொண்டு உருவாகக்கப் பட்டாலும் இங்கு இருக்கும் பெற்றோர்கள் தங்களுடைய பொருளாதார வசதியை காட்டுவதற்கு பெண் பிள்ளைகளை ஒரு பொருளாக பொம்மையாக கருவியாக பாவிக்கிறார்கள். கலாச்சாரம், பண்பாடு என்ற பெயரில் பெண்களுக்குள் அதனை திணித்து அவர்களை அடக்க நினைப்பது வெறும் மடமைத் தனமான வேலை. இப்போலிக் கலாச்சாரம் சிறுபிள்ளைகள் அறியாமையை சூழ்ந்திருக்கிறது.

கட்டவழ்ப்பில் அடுத்துப் பேசப்பட்ட விடையம் "Generation Gap". இளைய தலைமுறையினரிடம் பெற்றோர்களால் ஆண்பிள்ளைக்கும் பிள்ளைக்கும் இடையில் காட்டப்படும் பாகுபாடுகள தெளிவாகக் காட்டியிருந்தது இந் நாடகம்.

தொடர்ந்து "சீதனம்" வாங்கும் ஆண்களை கிண்டல் தொனியில் சாடியது அடுத்த நாடகம்.. அதைத் தொடர்ந்த நாடகம் "குடும்பப வன்முறையையும், மனவுளைச்சலையும்" மையமாக் கொண்டிருந்தது. புலம்பெயரந்த நாடுகளில் ஏதோ வழிகளில் குடும்ப வன் முறைக்கு உள்ளாகும் சில பெண்கள் மனநோயால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அதை தடுப்பதற்கு பல வழிகளில் Counselingம் ஒரு தீர்வாக அமையும். இங்கு இப்படியான சேவைகள் இருந்தும் பலபேர் பாவிப்பதற்கு தெரியாமல் இருக்கிறார்கள் பயப்பிடுகிறார்கள்.

இறுதியாக எமது சமூகத்தில் விதவைகள்(?) எதிர்நோக்கும் புறக்கணிப்புகளும் அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் பற்றியதாக அமைந்தது.

இப்படியான சமூகக் கொடுமைகளை உடைத்து வெளிவரும் பெண்களின் நிகழ்வுதான் தான் இந்தக் கட்டவிழ்ப்பு.

இப்பட்டறையின் நோக்கம் கனடாவில் இருக்கும் பெண்களின் நிலை மட்டுமன்றி உலகளாவிய ரீதியல் இருக்கும் எல்லா பெண்களின் பிரச்சனைகளையும் வெளிக் கொண்டு வருவதே.

இவை எங்களது முதல் பெண்கள் பட்டறையிலிருந்து உருவாகிய விடயங்கள். விடுபட்ட விடயங்களை எதிர்காலதில் வரும் நிகழ்வுகளில் எடுத்துக்கொவோம்.

கருமையத்தால் கனடாவில் தொடங்கப்பட்ட இந்த முதல் முயற்சி எதிர்காலத்தில் பெண்கள் பிரச்சனைகள் சம்மந்தமான முன்னெடுப்புகளுக்கு புதிய பல வாசல்களைத் திறந்து விடும் என்று நம்புகிறோம்.

- நந்தினி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Missing in Action




Wake up! It's about time you wake up! Women across the world have been crying out in the name of feminism. Aboriginal females have been trying among these females to voice their pain in this utopian western world, but their voices have disappeared, moreover buried. At one point or another many of us would have seen these females to be part of the western mainstream society, me being part of this group. Its quiet ironic for us to see one of the most equal societies in the world just disappear under the western mainstream society. For us to understand this we have to have at least a modest perspective on their history.

One of the most equal societies in history was altered over night by men who came in big boats, wanting to establish a utopian society in the new world. Their job was to extend their empire and civilize the people of the new world, who they thought were uncivilized due to their lifestyle, according to their standards. Like buy one get one free, male superiority came with the materialistic society. One step further was taken to establish this. The Indian act was passed in 1876, the law that governed all Indian people across Canada. Under this law Aboriginal woman who married Non- Aboriginal men had their Aboriginal status* removed. They could not live on reserve land, own any property on reserve; they can not even have their bodies buried on reserve land. *

However if an Aboriginal man married an non-Aboriginal female, the females will be automatically be granted Indian status. As a result of such laws many aboriginal female were thrown out of their homes into a new world they couldn't fully adapt to or accept. For over 100 years, generation after generation aboriginal females and their children went on to live a life that didn't fully belong to the mainstream or the aboriginal society; stranded somewhere in the middle. The physical, mental and spiritual affects of changing from a matrilineal society to a fully blown male dominated society, can not be expressed in mere words.

Like patching up a wound the Canadian government tried to paint their black spots white in 1985 when bill C-31 was passed. According to this law the Aboriginal women who lost their status was allowed to reapply and have their status granted back. But has this mere change granted these females back their lives? Have such laws changed the situation of Aboriginal people, especially Aboriginal women who are worse off than Aboriginal men? Can we term this era post colonialism, when the affects of colonialism is still present within us? Has it done any justice?

Considering the materialistic, contemporary world we live in and how ignorant we are as human beings, it's fairly easy to say everything is fine; see a perfect painting. But in reality justice have not been served. How can the connection that has been lost for over 100 years be joined again over night? Or Is it right to think "Okay they got their status back, so everything is back to normal". I mean we ourselves as Sri Lankan's are displaced and two generation

* **Indian status:** Who is and who is not an Indian? Since the federal government funds Aboriginal people in Canada, it believes that it gets to decide who is and who is not an Indian. Thus being an Indian has nothing to do with biology, ancestry, or culture but the legal and political definition, in other words classification of who is and is not an Indian. This classification is defined in the Indian Act.

* **Reserve land:** Division of land reserved to particular native bands. These plots of land are under the federal governance. The necessities are provided by federal funds.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

down how many of us will return to Sri Lanka or feel that connection and at any given time how many of us will be invited back with open arms. This was the case with Aboriginal females. Even though many gained their status back not all were welcomed with open arms, due to the hard life that was already being faced at these reserves with limited housing, high unemployment rates and limited basic necessities.

Thus being pushed back to square one, back to a society they were starting to adapt to but again not fully accept. Always holding a grudge of "What culture, and what community they belong to?" Many aboriginal females as a result have turned to alcohol and drugs as the way out. They remain to be victims of high domestic violence. It would be wrong to say that only women who lost their status were victims of alcohol, drugs and domestic violence. Females who have always held on to their aboriginal status and have lived in these reserves all their lives have become victims as well; all a result of the strongly established male superiority.

It seems that majority of the females from western nations feel superior to females of other developing nation. However, we females of the western world have to take a look around us. Ask ourselves where we stand as females. Remember that there are females like aboriginal females who are in a worse condition than some females in non-western nations. These females have two barriers to break, before they come free, the first one being they are an aboriginal and the second one being they are females in this male dominated society. Thus aren't we all standing on the same square. So, it's not just time for mainstream society and men to wake up but for us females to wake-up too. It's about time we ourselves wake-up as human beings and clean up the mess in our own backyards before pointing fingers.

***- Kannika -***



## Pause it...



*I've traveled many miles and taken many roads. I've seen the good in people and I've seen the wicked. Surrounded myself in love and been surrounded in hate, and now I pause a moment in life and reminisce...*

*Regrets I have many. Some things happen due to a mistake and some things happen as a will of fate. Engraved. I am who I am due to the choices that were made: some by me and others by those who are around me. I've been infatuated, I've been in love, felt pain that seemed worse than hell, and felt more shame than a sinner kneeled before God. I've floated in air intoxicated by love and dived into the dark abyss of life.*

*I've sailed many miles and taken many paths. I've seen the exquisite of Nature and felt her terror uncontrolled. I've been anchored and I've been afloat. I've been overwhelmed and I've been liberated, and now I pause a moment in life and recall...*

*Joys I have many. Some things in life are always changing and some things never do. Some things in my life are constant and some- instant. I've understood many things and misunderstood many more. My unknown is infinite and my known is finite. I've accepted life and exempted death. I've redeemed some affection and approved some hate.*

*I have many miles to travel and many more paths to take. Past lives do not exist, neither the future. Life happens now to grab boldly and move on forward. It happens now with every word flowing out of my brain through my hands unto the paper. It happens now, no reminiscing required, no recalling required. Life happens now, un-paused...*

***- Sathiya -***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MALLAVI

Indra was tired by the time she arrived at the Katunayeke airport. She has been awaiting this moment ever since she got on the plane in Toronto. The long transit at London and the twenty-hour travel to Sri Lanka made her sleepy and home sick. Yet her longing to be back in a place she well knew, a place so close to her heart, kept her up beat and going. Although 15 years has passed since she left Mallavi, she still remembered the smell of her birthplace, the people she adored and the simplicity of their lives. The thought of going to her village tomorrow overwhelmed her with happiness and with that she walked towards the exit. By the time Indra got out of the terminal, the sun had risen and the light hit her face. She got her luggage and walked toward the dark-skinned man who had a card with her name on it. Must be Mr. Mohanaraj Sritharalingam, she thought, and tomorrow, he'll be taking me to Mallavi! With a sigh of relief and a feeling of thousand emotions she greeted Mr. Mohanaraj, who seriously insisted that she called him 'Mohan' for they were friends when they were children and he was no older than she was.

When she was alone at her hotel, Taj Samudra, she couldn't fall a sleep. She was tired and wanted to sleep, but the beautiful view from her hotel and the thought of going back to what was once her every bit of happiness gave her a yearning nostalgia. She wanted to run through the woods of Mallavi, singing her favourite folk song, " ey pilla enadi penai summava erunthai?" which was a popular folk song among young girls at that period of time. Indra smiled at the thought of the song,

"Hey child, hey girl
Were you doing nothing?"
"I brushed the teeth of young snakes…
Was I doing nothing??
I pulled the hair out of hen's eggs…
Was I doing nothing…"

She sighed with a sense of loss and longing. She used to run along the paths of her own imagination, wishing to find her destiny. It's been so long, she thought, a little too long. The years in Canada have changed her so much: her thinking, her imagination, or the lack thereof, her way of seeing things, everything about her has been restricted or limited. She has grown up into someone who doesn't know her own roots. This scared her for she was going to be an outsider at her own home; she was going to be a foreigner in her motherland. Tomorrow, she will be leaving for Mallavi, the thought frightened her, yet something inside her made her smile.

* * * *

Indra was finally going home, but never once did she think it would be this way that she would come to Sri Lanka. Indra has always wanted to visit Mallavi, but she kept on putting it off for one thing or another. But when Professor Mark assigned his students of Cultural Anthropology a study on a particular civilization; she was certain that she wanted to go to Mallavi and study their culture- her culture. Indra was excited about this project for she was going to study where it all started: her birth, her knowledge about life, the learning of her values, morals and culture. Although, this was her culture she was going to study, Indra promised herself that she would neither be an outsider nor an insider in this study. She wanted to feel the culture and understand it. She





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

wanted to learn it and study it. But most of all, she wanted to experience it, for she wanted to tell her children, their children and their children's children all about her origins.
Indra got up before the crack of dawn and waited for Mohan's arrival. This waiting to her was unbearable for she wanted to get on the road right away. She wanted to get to Mallavi, and start her research right away. She didn't know where to start, yet she knew that once she got there, every thing would fall into place.
Indra and Mohan left Colombo at seven o'clock in the morning. They took an airbus to Vavuniya, which took about four hours and from there they took an Auto, a three-wheeled vehicle to Mallavi. The auto passed through big forests and signs that warned of land mines. Fifteen minutes after leaving Vavuniya, the auto stopped at the army's checking point in which the army men asked them where they were coming from and what was the purpose to the visit. Also, they checked their backpacks and other belongings. After showing the army men her passport and identifying herself as a Canadian citizen, Indra got on the auto and headed for Mallavi. Thirty minutes after the army's checking point was the Tamil Tigers' checking point in which the tigers asked how long they would be staying and the purpose of their visit. The trip form Vavuniya to Mallavi took about five hours. The road was bumpy and the auto kept on jerking; this was all new to Indra, yet it was wonderful for soon she'll be home. They passed a small wooden stand that read "Mallavi", this must be Mallavi town, she thought. The auto passed a two-story building, which was the biggest store in Mallavi and some more stores and soon reached a big graveyard that read " Maveerar Thuyilum Ellam", which Mohan translated to be " The house of Tamil Freedom fighters who died". Right after the graveyard was a small hospital that read "Mallavi Periaaspathri" (Mallavi's big Hospital), Indra's heart skipped a beat for this was where she was born. She asked the auto driver to stop and walked inside the place that brought her into this world. This was a small one-story building that looked like the portables in Canadian elementary schools. She asked Mohan why it was called a big hospital, when it really was a small hospital that lacked many facilities. Mohan being a citizen of this small village and one of the few educated people there, explained the reason,
" Malllavi as you probably know is a small village consisting of 4 smaller sub-villages or units. 1st unit, 2nd unit, 4th unit and Mallavi town. Approximately 3000 people live here, yet there is only one hospital. Although, it lacks many services and equipments to do risky operations. Say for instance a mother needs to get cesarean done, then she should be advised to go to the Jaffna hospital which would take her about six hours and if she dies before that, then that's it. We can't do anything about it because we are so short in resources. Yet, it's called Mallavi's Periaspathri because it takes care of many people with very little resources and technology and simply because this is the ONLY hospital we've got.."
Mallavi Periaspathri, Indra smiled and looked inside the small building. I was born here, she thought, and for so many years she was proud of the fact that she was born into a BIG hospital in a small village. That was until now, her late realization of the basic fact that it was the ONLY hospital there. The hospital was located in the 4th unit and that's where Indra's relatives lived. The auto dropped Indra off at her grandparents' house at about eight PM and Mohan promised to meet her later that week, to take her around to show her all the historical sites. Even though Indra wasn't interested in going, she told him she would be delighted. Indra was most excited about hearing stories from her grandfather and going to places that she used to love as a child. She opened a small wooden gate that had beautiful flowers growing over it and from there, it was a long aisle of walk towards her grandparents' house, a beautiful walk that is. The sides were filled with flowers, mostly jasmine plants. The smell has been so vivid in her memory that it felt so good to be back home.

* * * *

Indra's grandparents welcomed her with open hands. They looked at her with delight and her grandmother broke in to a tearful laughter, " Velakari Mathiri vanthidda!" ( You've become like a White lady!) she said, and hugged her grandchild with so much love. Indra looked at her ammamma (mother's mother), this tiny women was Indra's every bit of love and affection. To see her ammamma wrinkled and fragile brought pain to Indra's heart and she burst into tears. She was only five when she left her beloved ammamma, yet she felt so close to her and allowed her to kiss her and cry. They both cried until they can speak no more and then her grandmother took Indra into the small but beautiful house to meet thatha(Mother's father). Thatha looked as tall as always, yet the elegance that was uniquely his has been long lost with the years. She ran to him and hugged him as tight as she can for this man, has been her ideal man; so tall, handsome, loving and deeply logical. Indra couldn't stop crying that night, for everything she believed to be has changed over the years of her absence. She thought about ammamma and wondered how she gave birth to thirteen children. Indra's ammamma was a great woman in 4th unit for she was the proud mother of ten sons and a daughter. Ammamma gave birth to two still borns but that didn't disappoint her for she had eleven other children. Indra's mother was the seventh and the only daughter. Indra thought about her grandmother and how tiny she was. How did she give birth to thirteen children, Indra wondered. She worried about ammamma for she was blind in one eye and even after surgery she still can't see that well. Indra's thoughts drifted off to thatha, and how masculine he used to be. Now with old age, he was weak and couldn't walk properly. But thatha never used to walk perfectly, Indra remembered, he lost his second and third toes to an ox. He was trying to battle with the ox and tie it to a pole when it stepped on him. Thatha was a strong man and even now he looked brave and structured as always. With these thoughts and the sweet smell of home, Indra drifted off into a deep sleep.

* * * *

The next morning, Indra and ammamma woke up early and went to the well to fetch water and wash up. Indra couldn't watch her ammamma pulling the rope that was connected to the pail filled with water, so she took over. Indra's hands were aching form pain but she kept going for she did not want her grandmother to do it. After washing up, Indra helped her grandmother sweep the front yard and the house. By the time cleaning was done, her uncle from



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

across the street brought milk for them and they made tea. Indra was not an admirer of tea but for some reason the tea ammamma made tasted magnificent. When asked, ammamma laughed with her toothless mouth and explained that it was not like the packaged milk that you get in Canada and that it was fresh off the cow. Indra remembered her childhood, when she used to milk the cow at her uncle's cattle field.

Those were the days, she thought and before she can reminisce about the past, her grandmother gave a cup of tea to take to her grandfather. While drinking his tea, Muthukumaru (son of pearls) took a long look at his grand daughter, she was a child when she left, he thought, and now she is almost tall enough to reach my shoulders. He smiled at his peythi (grand daughter), as thousand sensations raced through him. As to distract him from his thoughts, Indra asked him a question and made sure that it was loud and clear, for she knew he had a hard time hearing people,

" Thatha, tell me about Mallavi. How did it come about and who are our ancestors??"

He smiled at his peythi; what a big question coming form such a small child, he thought. He sat up straight and with a proud tone of voice told the story of his village.

" Mallavi in the 40's was mostly forests and some small villages here and there and in the north were farmers who were unemployed because they didn't have good land for farming. Mallavi was so rich in soil and was practically wasteland with all those trees, so some of us actually migrated to Mallavi, built little huts and began cutting the trees and planting things and began farming. After that, in the 1950's, the government took over and colonized northern farmers into Mallavi and gave them a little bit of land, as well as a small house to begin with. Together, we destroyed the forests that were our government given land and planted wheat and rice. Then, we destroyed the trees that surrounded our small house and built bigger houses and planted eggplants, pumpkins, beans and other vegetables in some part of the 5-acre land around our house. Besides that, we bought cows, oxen, bulls, goats, chickens, and other domestic animals and became cattle owners. Then we dug out wells and built walls around it. Consequently, the food we ate, the water we drank, the milk, and basic necessity of life came form our own yard and our hard work. When the population and the colonization of people in Mallavi increased, we built a hospital, two schools, a post office, an agricultural office a milk collecting centre, a market place and so on. We also built roads to run a bus from Jaffna (a city in Sri Lanka) to Mallavi. You see Indra, this land is our land of opportunity, it gave us, farmers, hope and the food we eat and we are very grateful to this land. Every January 14th , we give our first harvest, the first milk from the cow, and the first fruits form our trees and the first vegetables from our garden to this land as a thanking ritual. So she would give us good fortune in the future. We call it Thai Ponkal, Thanks giving. A lot has changed in Malllavi, every day I am marvelled at this land and it's ability. We started off with forests and now we have houses, people, schools, farms, hospital and so on. We had axes and small farming equipments, but now we have tractors and ploughing machines. Every house is filled with mango trees, jackfruit trees, cattle fields and farms. We are a small, close-knit community and we help each other out. Every one knows every one and most of us are related so we do not have many crimes such as rape and all those other things that happen in the developed countries. As far as ancestors go, we had no actual ancestors, but when we dug up the grounds to build house and when we destroyed the forests, we found mud pots and statues of gods and goddesses. This gives us the knowledge that people did live here before us and they must be our ancestors. However, my child, we didn't have it easy, we didn't have ancestors passing their lands down to us. Every muscle in my body contributed to the creation of this village and every bone in my body will keep giving to this land until I die…"

Muthukumaru was interrupted, when Katpakam (Goddess of kindness) called for her grand daughter. Indra hugged her thatha with affection and ran off in the direction of her ammamma's voice.

For the next couple of days Indra let ammamma spoil her with the chicken curries, boiled eggs, fresh mutton curries and all the other delicious food that were considered luxury. Also, she visited all her relatives and got to know her cousins, uncles and aunties. She was surprised at how little she knew about her family and when they asked her questions she felt like a child again and dwelled in the moment for she knew it would soon be over.

* * * *

The third day was the most important day in Indra's life; she was going to her house. She was excited for the first five and the most happiest years of her life was spent there. She remembered the six mango trees, which at that time, she thought, were all the mango trees in the world, twenty or more coconut tress and palmyrah trees, as well as, other trees and plants. She remembered how they used to sell coconuts and buy candies with the money and when amma (mother) found out, they were punished and had to clean up the front yard. Indra remembered everything like it was yesterday: like when they used one of the branches of a mango tree as the bus and tamarind seeds as the bus fare and kundan (Fatty--pet name of one of Indra's cousins) would shake the branch until they all fell down with laughter. She remembered the Kooli kudu (house of the chickens), the bunker where they hid when there was bombing, their back yard filled with green paddy and the river that flew behind the paddy field, where she and her sisters used to swim. Every thing was so vivid in her memory and the thought of going to the house and sensing its presence all over again made her happy.

Thatha couldn't walk much faster or further, so they walked slowly and took breaks. Ammamma was yelling at thatha the whole way, for straining himself and walking but thatha didn't seem to give a care; he was too happy to walk with his last grand daughter. Indra was feeling the same; nothing could ruin her day today; for this was a long awaited event.

When they stopped in front of her house- Indra was shattered. This cannot be my house, she thought, tears filling up in her eyes she opened the door. The tigers have taken over the house because it was not in use for fifteen years. The house was there but everything about it had changed. The kooli kudu had two puppies in it



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



and they've built a bigger kooli kudu, in which they had about fifteen to twenty chickens and some ducks. The mango tree that they used as a bus was cut to build the house for the chicken and a torture bunker to put people who steal, assault or do any other criminal offences. Although they kept the coconut trees and the palmyrah trees, the house, to her, looked deserted. The flowerbeds around the house were gone, the little thodi, a big bathtub built beside the well, that she had swam in was broken down to make a bigger well. This was not her house, it looked like her house but it didn't feel like it. She went in to find her room but it was not there, her bed was gone, her mosquito net was gone; there were guns and other weapons the she didn't recognize. The people however, looked friendly and showed the place around. Indra didn't stay long, she didn't want to stay because she wanted to live with her memories and staying would make her cry and she did not have the strength to cry.

* * * *

Mohan came, after what seemed like ages, and took Indra out to see sites. Indra insisted on going to Eithiadi pillayaar Kovil, Temple of Lord Ganesh under a Banyan tree, first. It was her favourite temple in the world because it wasn't fancy like other temples, it was just a rock shaped like Lord Ganesh under a banyan tree. What she loved the most about the temple was the simplicity of it and the feeling that it gave her. It made her feel calm and peaceful. Her worries ceased and she felt relaxed. What is it about this temple that made her feel this way, she did not know, but this temple and this feeling would always be part of her. Later, Mohan took her to Paali aru, Old River, it was the most romantic place she has ever seen and at that very moment, she promised herself that she'd come here for her honeymoon. The water was flowing from one destination to another and standing in the middle, Indra observed the tall trees surrounding both sides of the water and reflecting in the clear water. Mohan told her it was actually clean water and that you can actually drink it. Indra wasn't a risk taker or adventurous but she drank it. It was, by far, the most tastiest water she has ever drank. She didn't know water can taste that good and she secretly scolded the great scientist who discovered water didn't have taste.

Mohan and Indra went through the woods of Mallavi and to Indra's surprise, he sang her favourite folk song, "ey pilla enadi pilla….". Indra stopped and looked at him, Mohan smiled mischievously and they both started laughing. They both talked and walked through the forest until they came to the Paniyara kullam, water filled pond, and Mohan asked if she remembered. How can she not remember: she almost drowned. It happened when Indra was four; her mother put shampoo to her head and told her to wait. Indra however, didn't want to wait; she wanted to swim like her sisters so she put her head in the water and before she knew it the waves pulled her in. She opened her eyes and she saw nothing but blurriness and she couldn't breathe so she put her hands up and waved and struggled for the longest time and then, she didn't know what had happened. Later she found out that her mother noticed her missing after about ten minutes and when she was looking for her she saw the reflection and a hand slowly drowing. Indra's mother panicked and pulled her child out and started pounding on her chest. Indra smiled, amma knew CPR even before the developed countries did; the thought made her chuckle. Mohan laughed with her and thought about what they used to wear as children. He thought about Indra and her favourite green underwear and her mother complaining about her not wanting to


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

wear a dress. Lot has changed between them, yet something made him feel close to her. He marvelled at her excitements when she sees the places she loved and the way her face shows her disappointments and pain when she sees a place changed or destroyed. She was a child trying to put pieces together, trying to find her identity and the meaning of her existence. He was the by passer, a stranger, who met this bird before it flew back to its destiny. His thoughts were distracted when something wet touched his face, four pink lotuses. How fine they smell, he thought. She looked at him worried, oh Mohan, what has happened to you that you hurt so much, she thought. As if he read her mind, he got up and pointed to a tree. "I will race you!" he said teasingly.

* * * *

Indra said her good-byes to all her relatives and it was time to leave her motherland. She hugged ammamma and thatha for the longest time. She didn't know when she would be back and the thought of never seeing them again overwhelmed her with sadness. Mohan has brought the auto, so she gave one last good-bye hug to her grandparents and walked towards the wooden gate. The long walk however, wasn't beautiful anymore. It was in fact a walk of sorrow, a walk of emptiness and a walk of heartache. She got on the auto but before it started she got off. She looked at her grandparents' house one last time and at the moment she wished she was Lot's wife. She remembered Anna Akhmatova's poem and with tears rolling down her cheeks she said the words to herself.

Holy Lot was a-going behind God's angel,
He seemed huge and bright on a hill, huge and black.
But the heart of his wife whispered stronger and stranger:
"It's not very late, you have time to look back
At these rose turrets of your native Sodom,
The square where you sang, and the yard where you span,
The windows looking from your cozy home
Where you bore children for your dear man."
She looked -- and her eyes were instantly bound
by pain -- they couldn't see any more at all:
Her fleet feet grew into the stony ground,
Her body turned into a pillar of salt.
Who'll mourn her as one of Lot's family members?
Doesn't she seem the smallest of losses to us?
But deep in my heart I will always remember
one who gave her life up for one single glance.

**- *Sathya* -**

Sorry to disappoint you .
Nothing to fill this space....

# இன்றைய கனடிய தமிழ்ச்சூழலில் ஒரு புதியதேவை நோக்கி...

இந்த அமைப்பினதும், இச்சஞ்சிகையினதும் தோற்றம் குறித்தும் எங்கள் நோக்கம்கள் பற்றியும் விளக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்ச்சூழலுக்கு மட்டுமல்லாது இலங்கைகும் பொதுவாக, மேலும் உலகளாவிய அளவிலும் மானிடத்தை நேசிக்கின்ற சக்திகள் ஓரம்கட்டப்படும் நிலமை காணப்படுகிறது. சுரண்டப்படுகின்ற, நசுக்கப் படுகின்ற மக்கள் பகுதிக்காக குரல் கொடுப்பவர்கள் சக்தியிழந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ரொறன்டோ தமிழ் சூழலில் காணப்படும் தமிழ் மரபு வாதிகளில் ஆரம்பித்து சிங்கள, அமெரிக்க அரசாங்கம் வரையிலும் இந்த கேவலமானவர்களின் ஆளுமைதான் பெரிதாக்கப் படுகின்றன.

மனிதநாகரிகம் மலர்ந்துள்ளதாக கூறப்படும் வளர்ச்சிபெற்ற அமெரிக் காவில் பிற்போக்குவாதியும் யுத்தவெறியும்கொண்ட புஸ் மீண்டும் ஆட்சியில். தனது யுத்ததளபாட விற்பனைக்கும். எண்ணைக் கொள்ளைக்கும் லாபம் தேடும் நோக்கில் முஸ்லிம் கிறிஸ்தவ மதவெறி யை தூண்டி மீண்டும் ஆட்சியமைத்துவிட்டான். ஒருபால் சேர்கையாளரை மனிதர்களாக மதிக்காது அவர்கள் உரிமைகள் தடைசெய்யப்படுகின்றன. வெள்ளையர்கள் அல்லாதவர்கள், பெண்கள், குடிவரவாளர்கள் எல்லோ ரையும் இரண்டாந்தர பிரஜகளாகும் பிற்போக்குக் கொள்கை மீண்டும் ஆட்சியில்.

எங்கள் கண்முன்னாலே எமது கலாச்சாரம் என்ற போர்வையில் பெண்ணுக்கு எதிராக, தலித்துகளுக்கெதிராக மதவேறுபாடுகளை தூண்டும் வகையிலும், பிரதேசங்களாக பிரித்தும், ஊருக்கு ஊர் பிரிந்தும், ஊருக்குள்ளேயே வடக்கு தெற்கு பிரிந்தும், மதரீதியான மூடநம்பிக்கைகளை வளர்த்தும், விஞ்ஞானம் வாளர்ந்துவிட்ட பின்னர் இங்கும் கண்ட கண்ட மதவாதிகளை வரவளைத்தும், உருவாக்கியும் மிக அகலமாக வேருன்றி வளர்கின்றோம் நாங்கள். இந்த சீர்கேடு களுக்கு ஓர் எதிர்க்குரலாக இருக்கவேண்டும் என்பது எமது நோக்கம்.

அனைத்து அடக்குமறையாளர்களும் எதிர்க்ககப்பட வேண்டியவர்களே. நிராகரிப்பது என்பது வேறு எதிர்ப்பது என்பது வேறு. நாங்கள் நிராகரித்விட்டு எங்கள்பாட்டில் வாழ்ந்துவிடலாம். ஆனால் சமுதாயக்கண் ணோட்டத்துடன் அணுகும்போது நிராகரிப்படுபவை எதிர்க்கப்பட வேண்டியவையே..

கலை, இலக்கியம், நாடகம், பத்திரிகை, என்பன சமுதாய இயங்கியலில் பாரிய பாத்திரம் வகிப்பவை இருந்தாலும் அரசியல் என்பதுதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை என்பது உண்மை.

நாங்கள் புதித்தா ஆரம்பிக்கிறோம் என்பதன் மறுபக்கம் ஏற்கனவே இருப்பவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான்.

எனவே மாற்றுக்கான களம் என்பதே எமது குறிக்கோள்.

பிற்போக்கு சக்திகளை எந்த அளவில் வெற்றிகொள்கிறோம் என்பது எமது எதிர்கால வேலை முறையிலும், உறுதிப்பாட்டிலும் தங்கியுள்ளது.

எமது ஒருமித்த அடிப்படை "மானிடத்தின் பாகுபாடுகளுக்கும், பேதங் களுக்கும் எதிர்க்குரல் கொடுப்பது"


உறுதியாய் இருந்து உடைந்து போனாலும் போவோமே அன்றி
வாழ்வதற்காய் ஒரு போதும் வளைந்து கொடுக்க மாட்டோம்!

• • •

கருமையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முரண்பாடுகள்
முடிவிலிகளின்
வழிச் செல்லும்
இனிவரும் நாட்களில்
வெற்றுக் காற்றிலும்
கலகத் தீ கிளர்ந்தெழும்.

கருமையத்தின்

# நாடகங்கள்

மார்ச் 18-19, 2006 மாலை 6:00


**YORKWOODS LIBRARY THEATRE**

*1785 Finch Ave., West (in between Keele & Jane)*

***karumaiyam@gmail.com***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முரண்பாடுகள்
முடிவிலிகளின்
வழிச் செல்லும்
இனிவரும் நாட்களில்
வெற்றுக் காற்றிலும்
கலகத் தீ கிளர்ந்தெழும்.

கருமையத்தின்

# நாடகங்கள்

மார்ச் 18-19, 2006 மாலை 6:00

**YORKWOODS LIBRARY THEATRE**

*1785 Finch Ave., West (in between Keele & Jane)*

***karumaiyam@gmail.com***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு பிறவியில்
முது மரங்கள் அடர்ந்த
பெருங்காட்டில் ஒரு புள்ளி மான் நான்

பெரும் பசிக்கு கொடும் புலி
அடித்துப் புசித்தது என்னை

பின்னொரு பிறவியில்
அல்லியும் ஆம்பலும்
விளையும் குளத்தில்
சிறு மீன் நான்

ஒற்றைக்காலில்
தவமிருக்கும் நெடுங்கொக்கார்
எனைக்கொன்று தன் பசி தீர்த்தார்.

அப்புறமாய் நான் ஒரு
மண்புழு.
மண் தோண்டும் கரடிக் குட்டி.
கடவாய்ப் பல்லில்
என்னைக் கடித்து என்
உயிர் உறுஞ்சிக் குடித்தது.

மூன்று நாள் முன்பு
கொலையாகிப் போன நான்
தெங்குப் பழம் விற்கும்
தென்னீழத்தின் (?) ஒரு தமிழன்

ஏன் கொன்றான்..?
யார் கொன்றான்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org